# வர்ணாச்ரம, ஆசௌச காண்டம்

[ ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதீயத்தைத் தழுவிய தமிழ்ச் சுருக்கம் ]

ஆசிரியர் :

காலஞ்சென்ற நே. ஈ. வெங்கடேச சர்மா

தி. ஈ. சாரங்கபாணி

மதுரை நூல் மன்றம்

221, லிங்கிசெட்டித்தெரு, சென்னை-1 (தமிழ்நாடு)

அஞ்சல் செலவு தனி

விலை ரூபாய் ஒன்று

# வர்ணாச்ரம, ஆசௌச காண்டம்

[ ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதீயத்தைத் தழுவிய தமிழ்ச் சுருக்கம் ]

ஆசிரியர் :

காலஞ்சென்ற நே. ஈ. வெங்கடேச சர்மா

தி. ஈ. சாரங்கபாணி

**மதுரை நூல் மன்றம்**

221, லிங்கிசெட்டித்தெரு, சென்னை-1 (தமிழ்நாடு)

அஞ்சல் செலவு தனி விலை ரூபாய் ஒன்று.

# I

## விஷயஸூசிகை

9 தேஹம் கொடுக்கப்பட்டது ச்ரமப்பட்டு அநுஷ்டா நங்களைச் செய்து பரத்தில் ஸுகாநுபவம் பெற. அநுஷ் டிக்கப்பட்ட தர்மம் ரக்ஷிக்கும், இல்லாவிடில் நாசஞ்செய்யும்,
15 அக்நிஹோத்ரத்திற்கு அக்நிஷ்டோமபலன. பௌர்ண மாஸிக்கு உக்த்யபலன். அமாவாஸ்யாயாகத்திற்கு அதிராத்ர யாக பலனுமாகும்.
20 வேதமோதாதவன் பொம்மைக்கு ஸமாநம். அதனர்த் தந் தெரியாதவன் தூணுக்கு துல்யம். வேதத்தை மறத்தல் அதை ஓதாததை விட மஹாதோஷம்.
21 அதை குருவினிடமே விதிவத்தாய் ஓதியாக வேண்டும். இல்லாவிடில் நிஷ்ப்ரயோஜநமின்றி மஹாதோஷத்திற் சேரும். ஸ்வரம்பிசகானால் இந்த்ரசத்ரு கதையிற்போல் எதிர்ப்பார்த்ததற்கு விபரீதமாய் பலன் ப்ராப்தமாய் விடும்.
22 உபாகர்மப்ரகரணம். அத்யயநாரம்பம் புதுப்ருஹ்ம சாரிகளுக்கு மட்டுமின்றி ஸமஸ்த ப்ராஹ்மணர்களும் வேதாரம்பம் சொல்லிச் செய்துகொள்ளவேண்டும்.
23 அநத்யயநங்கள். ப்ரதோஷகாலம். 4 நாழிகைக்குமேற் பட்ட ப்ரதமை, அஷ்டமி அநத்யயநமே. 27 நாழிகைக்கு மேற்பட்ட ஸப்தமி த்ரயோதசியுமப்படியே. ப்ராயசாய் மாஸந்தோறும் அநத்யயநங்கள் இரட்டித்து அத்யயந நாட் கள் இரண்டொன்று குறைந்துவிடும்.
24 ஒருவனது புருஷாயுஸில் ஒரு பசுவை ஓர் ஸத்பாத்ரத் தில் தாநஞ் செய்வது விசேஷ பாவங்களை நாசஞ் செய்து விடும். யாவச்சக்யம் தாநபரோபகாரங்கள் மனுஷ்யஸ்வ ரூபமாகும். ச்ராத்ததிநத்திற் போக்தாக்களுக்குக் கொடுக் கப்படுபவைகளின் பலன் அநந்தம். எவ்வளவு பெரும் தபஸ் வியாயினும் ப்ரதிக்ரஹம் செய்தல் கூடாது. பராந்நபோஜ

நத்திற்போல் தபோபலம் போய்விடும். அந்நதாநம், ஸத் வித்யாதாநங்கள் விசேஷ தாநங்களாகும். அஸத்பாத்ர விநியோகம் தோஷம். ஸத்பாத்ரம் ப்ராப்தமாவதே தாநத் திற்கு விசேஷ காலமாகும்.

29 ப்ராஹ்மண யோக்யதாரீதியாய் தாரதம்யங்கள்.

39 ப்ராஹ்மணனுடைய இதரவ்ருத்திகள்.

38 சூத்ரதர்மம். சூத்ரனுக்கு கர்ம சண்டாளத்வம் ப்ராப்த மாகும் கார்யங்கள்.

42 கர்ப்பாதாநாதி 40 ஸம்ஸ்காரங்கள். [ விதம்

44 சௌயந நாட்களுக்குத் தகுந்தபடி ஸந்ததியுண்டாகும்

52 16 வயதிற்குள் உபநயநமாகாதவன் வ்ராத்யன், உப வீதம்போல் சிகையும் ஸர்வகர்மாதிகாரிக்கு மவச்யம். கௌபீநமுமவச்யமே.

58 உபநயநமானதுமே ப்ருஹ்மயஜ்ஞம் ஆரம்பித்தாக வேண்டும். அத்யயநமற்ற ப்ருஹ்மசாரி பஹிஷ்கரிக்கத் தகுந்தவன் ஸகாலஸம்ஸ்காரங்களுக்கு விசேஷ இஹபர ஸௌக்யங்கள்.

61 சைசவமேஸ்வீகரிப்பதற்கு யுக்தகாலம். யோக்யதை யுள்ள சிறுவனே பெரியவனென்று தேவதாநிர்த்தாரணம்.

65 நமஸ்கார மஹிமை. சூத்ரப்ரணம ப்ராயச்சித்தம். கோஷ்டிவந்தந மஹிமை.

71 குருசுச்ரூஷைமுக்யம். அபசாரப்படல் பெரும்பாவம்.

74 அபோஜ்ய போஜநாதிகளால் புநருபநயநம்.

77 நைஷ்டிக ப்ருஹ்மசர்ய பலன் மோக்ஷமே. ஜிதேந்த்ரிய னுக்கு புண்யலோகம்.

81 ஸகோத்ர விவாஹம் மாத்ருகமநதுல்யம்.

82 அஸத்வ்ருத்திகளால் குலநாசம். 10 வயதிற்கு மேற் பட்டவள் வ்ருஷளீ. 10 வயதிற்குள் விவாஹம் செய்து கொடுப்பவனுக்குபலன் வைகுண்டமே. அதற்குமேற் செய் வது நரகப்ராப்தியே.

86 சுபங்களில் ஸஹோதரி, புத்ரீகளுக்கு வஸ்த்ரந்தர
87 ஏககால சுபத்வய மநர்த்த ஹேது. லவச்யம்.
88 ஸ்வீகாரத்திற்குப் பிறகு ஔரஸன் ஏற்பட்டால் அவனே ச்ரேஷ்டன்.
89 புணரக்கூடாத மாத்ருஸத்ருசமான ஸ்த்ரீகள்.
90 துஷ்டபார்யையை பஹிஷ்கரியாதது மஹாதோஷம்.
92 ஸ்த்ரீகள் கெடுவதாலேற்படு மநர்த்தங்கள்.
93 பர்த்தாநுமதியின்றி ஆலயதர்சநமும் மஹாபாபமே, வ்ரு
தாநுஷ்டாம் வைதவ்ய ஹேது [ தைவம்.
94 பர்த்தாநிக்ருஷ்டனாயினும் அவனே ஸ்த்ரீக்கு பூஜ்யமான
95 மரித்தவன் நாநா ஜந்மங்களெடுக்கும் விதம்.
96 ஸர்வாச்ரமங்களுள் க்ருஹஸ்தம் ச்லாக்யம். ப்ரும்ஹ
சர்யாதி யதிநியமங்களை இவனும் கைக்கொள்ளலாம்.
97 ஸமஸ்த பாபங்களும் ஸந்யாஸத்தால் நாசம். கலியில்
இது நிஷேதம்.
100 ஸதா ப்ரும்ஹஸ்மரணை பாவனைகள் தவிர வேறொன்
றும் மனதில் வரக்கூடாது.
105 ஆசௌசஸ்வரூபம். ஆசௌசியின் க்ரியை, வஸ்துக்கள்
106 வைதிக கர்மா மத்தியில் ம்ருதி நேர்ந்தால் கர்மாக்ரமம்
107 ஜநந, மரண, ரஜோதர்சநங்களிரவிலேற் பட்டால்
நாள் கணக்கு.
108 ஜநந, மரணாசௌசம். 10,3,1½,1 நாள் தீட்டு விவரம்.
109 ஸ்த்ரீகளுக்கு மட்டுமுள்ள அதிகப்படி தீட்டுவிவரம்.
110 தீட்டில் தீட்டு விவரம்.
111 அதிக்ராந்தாசௌசம்.
112 வ்யாதிக்ரஸ்தனுக்கு ஸ்நாந சுத்தி க்ரமம்.
113 அகாலம்ருத்யாசௌசம்.
114 கநநாதி இதர விஷயங்கள்.

# பீடிகை

---

ஸ்ம்ருதிமுக்தாபல ஷட்காண்டங்களுள் வர்ணாச்ரம, ஆந்ஹிக, ஆசௌச, சராத்த காண்டங்களை மட்டும் நாம் ஸங்க்ரஹித்துளோம். திதிநிர்ணய, ப்ராயச்சித்தங்களைச் செய்யவில்லை. காரணம் அவை அவ்வளவு முக்யமில்லை யென்பதே. பஞ்சமஹா பாதகங்களுக்குக் கூட காயத்ரீ ஜபங்களையே அநேக ஸஹஸ்ரஸங்க்யைகளில் விதித்துளர். ஆகையால் ஸர்வபாபங்களுக்கும் ஜபமே ப்ராயச்சித்தமாய் விட்டது.

இவ்வொரே நூலில் ஆதியில்வர்ணாச்ரம தர்மங்களும், அந்தத்தில் ஆசௌச விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. க்ருஹஸ்த தர்மத்தில் வரும் ஸ்த்ரீ தர்மங்களை நாம் தனியாய் விரிவாய் ஓர் நூலிற் கூறியுளோம். ஆந்ஹிககாண்டமும், ச்ராத்தகாண்டமும் அச்சிட்டு வெளியாய் வந்து அநேகமாதங்களாகின்றன. அவைகளிற்போல் இதிலும் ஒவ்வொரு பக்கத்திலும் வரும் விஷயங்களை ஸங்க்ரஹமாய் அந்தந்தப் பக்கத் தலைப்பில் எழுதியிருக்கிறோம். இது தவிர மூலநூலிலுள்ளபடி ஒவ்வொரு பக்கங்களிலும் பெரிய எழுத்துக்களில் விஷயங்கள் ஸூசிப்பிக்கப்பட்டுள்ளன. சிற்சில விடங்களில் இதர காண்ட விஷயங்களும் வெவ்வேறிடங்களில் வரும். உதாஹரணமாக நிஷித்தவஸ்து போக்தா புநருபநயநார்ஹனென்று முதற்காண்ட 74, 75ம் பக்கங்களிலும், ஆஹார நியமங்களென்றிரண்டாங் காண்டத்திலும், மறுபடி தத்ஸம்பந்தமானவை ச்ராத்தகாண்டத்திலும் கூறப்பட்டுள்ளன. சில சேஷ தர்மங்கள் என்று விடுதியாய் பல ஸாமாந்ய தர்மங்களாய் நம் ஸதாசாரக்ரந்தத்திற் படிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் விஷயங்களை பூர்ணமாயறிய விருப்பமுள்ளவர்கள் **இந்நான்கு காண்டங்கள், ஸ்த்ரீ தர்மங்கள், ஸதாசாரம்**

ஆறையுமே படிக்கவேண்டும். தர்ம, க்ருஹ்ய, ச்ரௌத ஸூத்ரங்களைச் சொன்ன ஸூத்ரகாரரான ஆபஸ்தம்ப ரிஷியே விஸ்தாரமாய் தர்மங்களைச் சொல்லிவிட்டு தர்ம ஸூத்ரக்ரந்த முடிவிற்சில தர்மங்கள் ஏதாவதிதில்விட்டுப் போயிருக்கலாம், அவைகளை ஸ்த்ரீகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்களென்று எழுதிவிட்டார். இதனுல் ஸ்த்ரீகள் தர்மங்களறிந்தவர்களென்று த்வநிக்கிறது. வீட்டில் வயதான கிழவிகள் என் மாமனுர், உன் தகப்பனுர் இவர்கள் இது விஷயத்திலிப்படிச் செய்திருக்கிருர் களென்று சொல்லுவதை நாமின்னும் நம் க்ருஹங்களிற் பார்க்கிருேம், கேழ்க்கிருேம். ஆகையால் இந்நூல் (தர்ம சாஸ்த்ரம்) ஸ்த்ரீகளும் அவச்யம் படிக்கப்படவேண்டிய க்ரந்தமாகும். அவர்கள் ஸ்த்ரீ தர்மங்கள், ஸதாசாரங் களென்ற இரண்டு புஸ்தகங்களை மட்டும் படிப்பது போதாது. அவர்களுக்கு விஷயங்கள் தெரிந்திருந்தால் ஸந்த்யாவந்தநம் இவ்வளவு அவச்யமா, அத்யயநத்திற் கிவ்வளவு பெருமையா, ஜபத்தால் குருதல்பமநமும் நசிக்கிறதாவென்று நாஸ்திகர்களாயிருந்தாலும், ச்ரத்தை யேற்பட்டு தம்பதி, புத்ர, பௌத்ரர்கள் அச்ரத்தையாய் ஸ்நாநஸந்தியை விட்டால், ஸ்நாநகால அகமர்ஷண ஸூக்த ஜபத்தால்பாவந் தொலைவதாய் தர்மசாஸ்த்ரத்திற் படித் தேன், ஸந்த்யாவந்த பலனுமப்படியே, விட்டால் பெருந் தோஷமென்றும் படித்தேனென்று ஹிதோபதேசஞ் செய் வர். அவர்கள வார்த்தை பர்தாக்களுக்கு பத்யமாய் பட்டு புருஷர்கள் தர்மத்தை அநுஷ்டிப்பர். அதன் பலனுய் பரமச்ரேயஸையுமடைவர். அநேகஸ்த்ரீகளிடம் படத்திற்கு அலங்காரம், ஸ்வாமிதர்சநம் செய்வதால் புருஷர்களை விட ஆஸ்திக்யம் அதிகமாய்த் தெரியவருகிறது. ஸ்த்ரீகள் ஸாக்ஷாத்தாய் கர்மாவைச் செய்ய அதிகாரம் பெறவில்லை யேயொழிய பர்தாவோடு ஜபகாலந் தவிர மற்ற ஸமஸ்த க்ரியைகளிலும் கூடமாடயிருக்க வேண்டும். அவர்கள்

பக்கலிலிருந்து சில கர்மாவைச் செய்யாவிடில் அவ்வித கர்மா பூர்தியாகிறதில்லை. ஆகையால் புமான்களைப்போல் அவர்களும் இந்நூற்களை பந்முறை படித்தாக வேண்டு மென்பதைப் பெரியோர்களும் உபந்யாஸ காலங்களிற் கூறி வருவதைப் பார்க்கிறோம்.

நாம் சில விஷயங்களை சில விடங்களிலிருக்குமென்று நினைத்துப் பார்ப்போம். அவை அங்கிராது வேறிடங்களி லிருக்கும். உதாஹரணமாக உபாகர்மத்தை உபநயனா ந்தரம் ப்ருஹ்மசாரி தர்மத்திற் பார்ப்பர். அது க்ருஹஸ்த தர்மங்களான யஜநயாஜநஅத்யயந ப்ரகரணத்திலேயே வந்து விட்டது.

அதேமாதிரி ஒவ்வொரு ஆச்ரமியும் இதர ஆச்ரம தர்மங்களைப் படிக்கவேண்டும். அதில் அவரவர்களுக்கு அநேக விஷயங்கள் க்ராஹ்யமாகும். அடிக்கடி படித்தால் தான் விஷயங்கள் ஜ்ஞாபகத்திலேயே யிருந்துகொண் டிருக்கும். முதலிற் சில தர்மங்கள் அநுஷ்டிக்க ச்ரம மாயிருக்கலாம். ஸௌகர்ய காலங்கள் ப்ராப்தமானதும் சில ஸாதிக்க முடியுமாகலாம். பிழைப்பிற்காக ஓடித் திரி பவருக்கு ஆதிவாரம், பண்டிகை போன்ற விராம காலங் களில் ஸஹஸ்ராவ்ருத் காயத்ரீஜபம் செய்யலாம். இதர பூஜை, பாராயணங்களை விஸ்தாரமா யநுஷ்டிக்கலாம். காயத்ரீயை பஞ்சாவஸாநமாய் ஜபித்தால் பஞ்ச மஹா பாபங்களையும் போக்கும். இல்லாவிடில் அது பஞ்சமஹா பாதக தோஷங்களைக் கொடுத்துவிடும். அதற்காகத்தான் இத்தர்ம சாஸ்த்ரத்தில் ஒவ்வொரு கர்மாவிற்கும் விதி நிஷேதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இதை இப்படிச் செய்தால் செய்ததாகும். பகவான், தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், மநுஷ்யர், இதர ஜீவராசிகள் த்ருப்தராய் பலனையளிப்பர். இல்லாவிடில் செய்தும் பஸ்மாஹுதி போல் வ்யர்த்தமாய்விட்ட கணக்கிலும், பாபங்களையும்

செய்ததாய்விடும். அகாலத்திற் செய்யப்படும் கர்மா ஆஸுரமென்பதிற்போல்.

ஒவ்வொரு கர்மாவிலும் அவரவர் செய்யும் பாபங் களுக்கு (சிறிதோ, பெரிதோ) தேவதைகளிடம் க்ஷமா பணம் (மன்னிப்பை) ப்ரார்த்திக்கிறோம். ஒவ்வொரு மந்த்ரத்தினர்த்தத்தைப் பார்த்தாலிதேறபடும். அது மட்டுமின்றி நாம் நம்முடைய வாழ்நாட்களுக்கு வேண்டிய தநம், தாந்யம், தீர்க்காயுஸ் (100வரு), தார்ட்யம், ஓஜஸ், தேஜஸ், வர்சஸ், யசஸ், ஸ்வர்கம், பசு, புத்ரர், அத்யயந ஸம்பத், ருஜுவான ஜ்ஞாநம் முதலியன பலவற்றை தேவ பித்ருக்களிடம் ப்ரார்த்திக்கிறோம். அவர்களும் இவை களால் த்ருப்தியடைந்து நமக்கவைகளைக் கொடுக்கின் றனர். இதன் விவரம் ப்ருஹ்ம யஜ்ஞப்ரகரணத்தில் நன்கு விளங்கும். நாம் இப்பொழுது அநேக யஜ்ஞாதி கர்மாக் களை அநுஷ்டிக்க அசக்தர்களாயிருக்கிறோம். அவைகளை ப்ரதிபாதிக்கும் மந்த்ரங்களை அநுஸந்திப்பதாலேயே அவை அநுஷ்டிக்கப்பட்டதாய் விடுகின்றன. அந்த பலன் கள் நமக்கு நிச்சயமாய் உண்டென்று வேதமே உத்தோ ஷித்துவிட்டது. (இதை 14, 15 பக்கங்களில் விவரமா யறியவும்). ஒவ்வொரு ப்ராஹ்மணன் ப்ரார்த்திக்கும் மந்த் ரம் தனக்கென்றின்றி (ஏக வசநமாயிராமல் பஹுவசநமா யிருப்பதால்) ஸமஸ்த மனிதர்களுக்கும் (இதர க்ஷத்ரிய வைச்ய சூத்ர ஜாதியர், மதஸ்தர் (துருஷ்கர், கிருஸ்தவர் முதலியோர்) நம் சத்ருக்கள், ஆடு, மாடுகள் முதலியன எல்லோருக்கும் க்ஷேமத்தை ப்ரார்த்திக்கின்றன. இதன் பலன் சத்ருவும் நற்புத்தி பெற்று திருந்துவானென்ப தாகும். ஒருவன் அநுஷ்டியாது விட்டால் அவன், அவன் குடும்பம், லோகத்தினர் எல்லோருடைய யோகக்ஷேமத் திற்கும் குறைவேற்பட்டுவிடும். நல்லாரொருவருளரேல் அவர் பொருட்டெல்லாற்கும் பெய்யும் மழை என்பது

ஆன்ருேர் சொல். இதரர்களின் யோகக்ஷேமார்த்தம் ப்ரார்த்திக்கும் வைதிகர்களுக்கு ஸமஸ்தரும் அப்பிராம் ஹணர்களுள்பட அவனது யோக க்ஷேமத்தை கவனிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பது விளக்கமாகிறது. உபசரியாவிடினும் அவனுக்கு எவ்விதத்தினும் ஹிம் ஸையே மநதாலும் நினைக்கக்கூடாது. இன்னும் ஒவ் வொரு பாக அவதாரிகை ஆமுகங்களையும் படிக்கவும்.

மோக்ஷத்திற்கு கர்மாநுஷ்டாநந்தா ஞேருபாயமா வென்று நாஸ்திக வாதஞ் செய்யலாம். பகவானே கீதை யிற் ஸமாதநங் கூறிவிட்டார். யஜ்ஞாதி கர்மாதிகள் சித்த சுத்திக் கென்று. நாம் ஏகாக்ரமாய் த்யாநிக்க அசக்தர். கர்மாக்கள் பக்தியைக் காட்ட ஓர் பெரும் ஸாதகமாகும். இதால் பக்திக்கு தார்ட்ய மேற்பட்டு கர்மாக்களை விட்டுவிட தானே ஆவசயக மேற்பட்டு நம்மையு மறியாமல் அநுஷ் டிக்கப்படாமற் போய்விடுகின்றன. இது பக்தியின் பரா காஷ்டையாம். சிஷ்டர்களும் சில ஸமயங்களில் சில கார்யங் களைச்செய்துவிட்டு இது சாஸ்த்ரஸம்மத மென்றெண்ணிக் கொள்ளுகின்றனர். அம்மாதிரி யாராவதோர்ரிஷி சொல்லி யிருந்தாலொழிய அது சாஸ்த்ரிய் மாகா, பாபமேயாகும்.

மனதின்ஸ்வபாவம் ஸுகத்தை நாடுவதே. நாம் பகவத்க்ருபைக்கு பாத்ரமாகாததால் த்யாநஸுகம் நமக் கில்லை. அதால் புத்தி ஸுகத்திற்காக வ்யபிசரிக்கிறது. அம்மாதிரி போகாதிருப்பதற்கும் பகவத் க்ருபைக்கு பாத்ரமாவதற்கும் நம் நித்ய கர்மநுஷ்டாநங்க ளேற்படுத் தப்பட்டு பெரும் ஸாதகமாயிருக்கும் அவரவர் கர்மாக்களை யநுஷ்டிக்க வேண்டியதற்காகவே பகவான் கீதையை வெளியிட்டார். அர்ஜுநனும் தந்தர்மத்தைச்செய்து பெரும் பாரத யுத்தமும் நடக்கலாச்சுது. அட்டையி னுட் புறத்திலுள்ள ஓர் சிறு ஹிதோபதேச மென்புதை யும் அவசயம் படிக்கவும்.

# அவதாரிகை

தர்மமாவது, சாஸ்த்ரமாவது யாருக்கு வேண்டும் என்று சொல்லும் இப்பரம நாஸ்திக காலத்திற்கே இத் தர்மசாஸ்த்ர க்ரந்தம் அத்யாவச்யமாகும். இக்காலத்தினருக்கு வேண்டியது அர்த்தம் (பணம்) ஒன்றுதான். அதற்கு வழி தர்மானுஷ்டானந்தான். அவன் செய்த பூஜாபலத்தால் அவன் ஸுகமாய் ஸம்பத், ஸந்தானங்களுடன் வாழ்கிறான் என்று லோகத்தினர் சிலரைப் பார்த்துச் சொல்லுகின்றனர். முக்திக்கு ஸாதனமான பக்தியானது வைதிக கர்மங்களை ஸ்வரூபமாகக் கொண்டுள்ளது. அதில்லாதது பக்தியேயல்ல. அவரவர் தோன்றியபடி வைதிக கர்மாக்களையனுஷ்டித்தால் புண்யத்திற்கு பதில் பாவங்களே குவிந்துவிடும். வேதங்களில் சொல்லியிருப்பதை ரிஷிகள் ஸ்மரித்து அவைகளை ஸ்ம்ருதிகளில் யாவரும் எளிதிலறிய ச்லோகங்களாய்ச் செய்திருக்கின்றனர்.

வழியொன்றுண்டு என்று நம்பி நடந்தால் அது நம்மை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரலாம். வழியில்லையென்னும் நாஸ்திகர்களுக்கு அவர்களாலும் அவர்கள் யோகக்ஷேமத்திற்கே வழி ஏற்படுத்திக்கொள்ள முடியாது. இவனுக்கு ஜன்மாந்த்ர கர்மங்களின்படி துக்கம், ஒன்று மாறி ஒன்று வந்து கொண்டிருக்குமே யொழிய இவன் அதை நம்பாவிடினும் அதற்காக அது நின்றுவிடாது. இவன் நாஸ்திக புத்தியால் ஏற்படுத்திக்கொண்ட பாவபர்வதந்தான் மிஞ்சி மறுபடி மறுபடி பின்னிட்டு நீச ஜன்மங்களையும் அதிக அஸஹ்யமான ஆபத்துக்களையும் விளைவித்துக்கொண்டேயிருந்து அதை மீட்க வழி தேடிக்கொள்ள ஸாதகமான நரஜன்மமே ப்ராப்தயில்லா

( விஷயஸூசிகை கடைசி பக்கத்தில் பார்க்கவும். )

மற் போய்விடும். இத்தர்ம வழியோ செய்தவரையிற் க்ஷேம முண்டு. அதிக துக்கத்திற்கு ஆளாக்காது.

பத்துவருஷங்களுக்கு முன் நம் தேசத்திலிருந்த ஆசாரங்கள் அநேக நூற்றுக்கணக்கில் கோணலாய் மாறி மதம் ஒரு காலத்தில் இப்படியும் இருந்ததாவென்று சங்கிக்கும்படி சிஷ்டர்கள் க்ருஹங்களிலுங்கூட ஆய்விட்டன. மனோவேகம் போன்ற இதன் அதி வேககதியைப்பார்த்தால் இன்னும் பத்து வருஷங்களுள் நம் கீழ் ஸந்ததிகாலங்களில் இவ்வித ஆசார வ்யவஹாரம் ஒன்றிருக்கலாம் என்று ஊஹிக்கவும் முடியாது போலிருக்கிறது. காலக்கொடுமையால் நமக்கு அனுஷ்டிக்க முடியாவிடினும் முடியவில்லையே என்கிற அனுதாபமாவது இருப்பதுபோல் நம் கீழ் ஸந்ததிகளில் யாருக்காவது ஈச்வர கடாக்ஷமிருந்து வைதிகத்தில் ருசி பிறக்கலாம். நாம் இக்ரந்தத்தை ச்ரத்தையிருந்து சக்தியானுஸாரம் அனுஷ்டிப்பதுடன், ச்ரத்தாளுவாய் ஜனிப்பவனுக்கு இருளைக் கடக்கத் தபிப்பவனுக்கு பெரும் ஜ்யோதிஸ் மஹோபகாரமாயிருந்து ஆனந்தத்தை விளைவிப்பதுபோல் இதுவுமாகும்.

துராசார அக்ரேஸரர்களும் மாத்ரு, பித்ரு ச்ராத்தங்களை முதலேவிட்டதாய்த் தெரியவில்லை. அவர்களுக்கும் நம் புத்ர பௌத்ரர்களும் நமக்கும் பிற்பாடு ச்ராத்தம் செய்யட்டுமென்கிற அபிப்ராயமிருக்கலாம். நம் ஸந்ததிகளுக்கு இஹ லோக யாத்ரைக்கு தனம் சேமித்துவைத்தற்போல், நம் பரலோக ஸுகத்திற்காகவும் அவர்களுக்கு இஹபர க்ஷேமார்த்தமாயும் இக்ரந்தம் ஒவ்வோர் க்ருஹங்களிலுமிருப்பது அத்யாவச்யமாகும்.

அநேக க்ரந்தங்கள் இப்பொழுது அச்சிடப்படாமல் லுப்தமாய்விட்டன. அவைகளைப்பார்த்து ஆனந்தித்து அனுபவிக்க அநேகருக்கு குதூஹலமிருக்கிறது. க்ரந்தம் ச்ரமப்பட்டாலும்

ஷட்டு ப்ரதியும் கிடைக்கிறதில்லே. இந்நூல் கேவலம் வ்யாபார உத்தேசத்திற்காக அச்சிடப்பட்டதல்ல. வ்யாபாரம் செய்ய இந் நாஸ்திக காலத்திற்குத் தகுந்தவை வேறு மாதிரியாய் இதற்கு நேர் விபரீதமாய் இருக்கும். நாஸ்திகம் மூடிட்ட உலகத்திற்கு கிஞ்சித் ஆஸ்திக புத்தியை மூட்டிவிட இக்ரந்தம் ஏற்பட்டதின் காரணமாகும். இம்மாதிரி க்ரந்தங்களுக்கு இப்பொழுது துஷ் காலம் திடீரென்று ஏற்பட்டுவிட்டாலும் திடீரென்று நல்லகால மும் பிறக்கலாம். இன்று நாம் பணமோ பணமோவென்று நாஸ்திகமாயிருக்கிறோம். நாளைக்கே நமக்கே இந்நநித்திய செல் வத்தில் ஈக்வரானுக்ரஹத்தால் விரக்தியேற்பட்டு ஸதாசாரத் தில் ருசி உண்டாகலாம். அப்பொழுது நமக்கே இது ஆவச் யகமாய்விடும். நம் முன்னோர் ஆசாரசீலராயிருந்தனர். அவர்கள் ஸௌக்யமாயிருந்தார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம், நாமும் பார்த்திருக்கிறோம், அதை நாமும் சொல்லுகிறோம். இது ஸம்பந்தமான அநேக விஷயங்கள் ஆன்ஹிக காண்ட முடி வுரையான 127-8 பக்கங்களிற் காண்பது.

---

# ஆமுகம்

---

ஜனிப்பவனுக்கு ப்ரயோஜனப்படுபவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷமென்கிற சதுர்வித உபாயங்களே. தர்மத்தை அனுஷ்டிப்பதால் அர்த்தம் (பணம்), காமங்(இஹஸுகம்)கள் உண்டாகின்றன. அதையே நிஷ்காம்யமாய் அனுஷ்டிபபதால் மோக்ஷ புருஷார்த்தமும் ஸித்திக்கிறது. [அஸக்தோஹ்யாசரன் கர்ம பரமாப்னோதி பூருஷ:] கீதை.

தர்மத்தின் ஸ்வரூபம் வேதத்தில் சொல்லியிருக்கிறது. அதை அறிய அசக்தர்களான நமக்கு ரிஷிகள் ச்ருத்யர்த்தங்

களை ஸ்மரித்து ஸ்ம்ருதிகளில் லோகோஜ்ஜீவனார்த்தம் க்ருபை செய்திருக்கின்றனர். இவைகளை ஏற்கனவே ஜைமினி பூர்வ மீமாம்ஸையில் விசாரித்திருக்கிறார். அதுவும் மந்தமதிகளுக்கு அவகாஹமாகா விஷயமாகும். தர்மத்தை அனுஷ்டிப்பதால் இஹபரஸுகங்களும், அனுஷ்டியாவிடில் இஹபர துக்கங்களும் ப்ராப்தமாகிறதையும் ஆங்காங்கு விளக்குகின்றனர். ஸ்ம்ருதி கர்த்தாக்கள் அநேகர். அவர்களின் க்ர ந் த விஷயங்களும் அநேகமாயிருப்பதால் ப்ரும்மஸ்ரீ **வைத்யநாததீக்ஷிதரவர்கள்** விஷயங்களை விபாகம்செய்து ஒவ்வொன்றிற்கும் அநேக ரிஷிகள் கூறியிருப்பதை ஒரே இடத்தில் தம் **ஸ்ம்ருதி முக்தாபலம்** என்கிற க்ரந்தத்தில் சேர்த்தமைத்து மஹோபகாரத்தைச் செய்திருக்கிறார். இதற்காக பாரததேசத்தில் இவருக்கு க்ருதஜ்ஞதையை ஆசந்த்ரார்க்கம் ஜனிக்கும் ஸர்வ ப்ராம்ஹணர்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர். இவர் சுமார் 200 வருஷங்களுக்கு முன் தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகா, கண்ட்ர மாணிக்க அக்ரஹாரத்தில் வாதூல வம்சத்தில் அவதரித்தவர். தர்மசாஸ்த்ரத்தை இவர் வர்ணாச்ரம காண்டம், ஆன்ஹிக காண்டம், ஆசௌச காண்டம், ச்ராத்த காண்டம், திதி நிர்ணயகாண்டம், ப்ராயச்சித்த காண்டம் என்று ஆறு பிரிவுகளாய்ச் செய்திருக்கிறார்.

வர்ணாச்ரம காண்டத்தில் ப்ருஹ்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர ஜாதிகளின் பொதுவான தர்மங்களையும், பிறகு அந்தந்த வர்ணத்திற்குரித்தான ப்ருஹ்மசர்ய, கார்ஹஸ்த்ய, வாநப்ரஸ்த, ஸந்யாஸாச்ரமங்கள்ஸம்பந்தமான தர்மங்களையும் ச்ருதிஸ்ம்ருதி, இதிஹாஸ புராணாதி ப்ஹு ப்ரமாணங்களுடன் நிரூபணம் செய்திருக்கிறார். இதேமாதிரி மற்ற காண்டங்களின் பெயர்களாலேயே விஷயங்கள் தெளிவாகின்றன.

**நியமம், ஈ. வேங்கடேச சர்மா.**

ஓம் தத்ஸத்

# தர்மசாஸ்த்ரம்

## வர்ணாச்ரம தர்மகாண்டம்

### மங்கலம்

*ப$^{4}$வ கோதண்ட த$^{3}$ளனம் ப$^{4}$வ பந்தவிமோசனம் |*
*தசகண்டரிபும் வந்தே தசஸ்யந்தனநந்தனம் ||*

[சிவ தனுர்பங்கம் செய்தவரும், ஸம்ஸாரபந்தத்தை அவிழ்ப்ப வரும், பத்து தலை ராவணனுக்கு சத்ருவுமான, தசரத புத்ரரை நமஸ்கரிக்கிறேன்-]

*சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்|*
*ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோபசாந்தயே ||*

*யஸ்ய த்விரதவக்த்ராத்யா: பாரிஷத்யா: ப்ர:சதம்|*
*விக்னம் நிக்னந்தி ஸததம் விஷ்வக்ஸேனம் தமாச்ரயே ||*

### தர்மலக்ஷணங்களும் பலா பலன்களும்

ச்ருதி, ஸ்ம்ருதி, ஸதாசாரம், தன் மனதிற்கு ருசிப்பது இவைகளே தர்ம ப்ரமாணங்களாகும். இதன் விவரமாவது:- வேதம், தர்மசாஸ்த்ரம், இதிஹாஸ புராணங்கள், சிஷ்டர்களின் அனுஷ்டானம், சாஸ்த்ர விரோதமின்றி ஸாதுக்கள் ச்லாகிக் கத் தகுந்ததான தன் மனஸில் உதிக்கும் அவா என்றும், வேதம், மனு, யாஜ்ஞவல்க்யாதி ரிஷிகள் தர்மப்ரமாணங்களாக நிரூபணம் செய்திருக்கின்றனர். இவைகள் எவனுக்கு ப்ரமாண மாவதில்லையோ அவன் வசனந்தான் யாருக்கு ப்ரமாணமாகப் போகிறது? மந்த்ர த்ரஷ்டாக்களான ரிஷிகள் வேதங்களை நேரில் பார்த்து அவைகளை ஸரளமாப் ஸ்ம்ருதிகளில் வெளியிட்டிருக் கின்றனர்.

ஸத்யம், சமதமம், (மனஸ், இந்த்ரியங்களை அடக்குதல்), சௌசம் (ஆசாரம்), ஸந்தோஷம், வெட்கம், பொறுமை, கபடமின்மை, தயை, ஜ்ஞானம், த்யானங்களே ஸநாதன தர்மமென்று வ்யாஸபகவான் கூறுகிறார். அத்யயனம், தானம், அஹிம்ஸை, ஸாதுக்களை உபசரித்தல், யாகம், யோகம் (ஆத்ம தர்சனம்) இவைகளும் தர்மங்களாகும்.

அஹங்காரம், ஆசை, டம்பம், லோபம், மோஹம், காமம், கோபம், பொறாமைகள் இல்லாதவர்களே சிஷ்டராவர். வேத சாஸ்த்ர மறிந்த சிஷ்டர் விளையாட்டிற்காகக்கூட எதையாவது சொல்லிவிட்டாலும் அதுவே உயர்ந்த தர்மமாகும். இப்படிப் பட்டவர் நாலுபேர், அல்லது மூன்று பேர் இருந்தாலும் அதுவே பரிஷத் எனப்படும். வேதசாஸ்த்ரமறியாதவர் பதினாயிரம் பேர் சொன்னாலும் அது தர்மமாகாது. அது தெரிந்த ஒருவர் சொன்னாலும் அதுவே தர்மமாகுமென்கிறார் பராசரர். தர்மத்தால் தான் ஸகல ஜகத்தும் நிலைத்திருக்கிறது; தர்மத்தைவிட அனுஷ்டிக்க முடியாததில்லை; ஆகையால் ஸத்துக்கள் தர்மத்தில் ரமிக்கின்றனர்; லோகத்தில் தர்மிஷ்டனை ஜனங்கள் போயடைகின்றனர்; ஸ்வதர்மானுஷ்டானத்தால் நிஷித்த கர்ம ஜன்ய பாவத்தைப் போக்கிக்கொள்ளுகிறான் என்று உத்கோஷிக்கிறது தைத்ரீயோபநிஷத். ஜீவன் தனித்தே பிறக்கிறான். தனித்தே மரிக்கிறான். தனித்தே ஸ்வர்க்கத்தில் ஸுகானுபவத்வதையோ, நரகத்தில் துக்கானுபவத்தையோ செய்கிறான். பாவ புண்யங்களே இவனோடுகூட வருகின்றனவேயன்றி மற்ற பந்து, மித்ரர், தனம் ஒன்றும் வருகிறதில்லை. கர்மானுஷ்டானமென்கிற தர்மமே புண்யபலனை நல்ல ஜன்மங்களையும், ஸுகங்களையும், மோக்ஷத்தையுங்கூடக் கொடுக்கின்றது. ஆகையால் சிறுகச்சிறுக விவேகியானவன் தர்மானுஷ்டானங்களால் புண்ணியங்களைக்குவித்துக்கொள்ளவேண்டும். ஆசாரத்தால்ஆயுஸ், ப்ரஜை, தனம், பாப நாசம், ஆரோக்யம், ஸர்வமும் ஒன்று பாக்கியின்றியடையப்படுகின்றன. ஆசாரமற்றவன் நாலுவேத, ஆறு சாஸ்த்ர, அறுபத்தி நான்கு கலைகளைக் கற்றுணர்ந்தவனாயினும் அவை அவனுக்கு நாய்த்தோல் பையிலுள்ள பால் போல் ஈஷத்தும் பயன்படு

கிறதில்லை என்கிறார் ப்ருஹ்மநிஷ்டரான வஸிஷ்ட மஹரிஷி. வேதம் முதலிய வித்தைகளும், ஆச்ரயதோஷத்தால் துஷ்டமாகின்றன. ப்ராஹ்மணனுக்கு இந்த தேஹம் கொடுக்கப்பட்டிருப்பது இஹத்தில் ஸுகானுபவத்திற்காக இல்லவேயில்லை. வ்ரதானுஷ்டானங்களால் அதை ச்ரமப்படுத்தி பரத்தில் ஸுகத்தை அடைவதற்காகவேயாம். தர்மானுஷ்டானமில்லாதவனுக்கு அவன் செய்த யாகம், புண்யதீர்த்த, க்ஷேத்ராடனம், தானம், யாவம் நிஷ்பலமாகின்றன. ஆசாரம், தபஸ், ஜ்ஞானங்களால் தான் மட்டுமே ப்ராஹ்மணனுக்கு கௌரவம். இவை இல்லாதவன் அந்த சப்தததிற்கு அனர்ஹன் என்கிறார் ப்ருஹஸ்பதி. பகவானும், ச்ருதி, ஸ்ம்ருதி என் ஆஜ்ஞைகள். அவைகளை மீறுகிறவன் என்னை அவமானம் செய்தவனான என் த்ரோஹியே. அவன் என் பக்தனேயாயிருந்தாலும்கூட வைஷ்ணவனாக மாட்டான் என்கிறார். ஆச்ரம ஆசாரத்தைத் தவறினவனே பதிதன், கர்மசண்டாளன். ஆசாரத்தால் தேவத்தன்மை, ரிஷித்வங்கள் அடையப்படுகின்றன. தர்மம் ஸர்வ கஷ்டகாலங்களிலும் தலைகாக்கும் (கௌஸல்யை ஸ்ரீ ராமனுக்கு வனவாஸத்திற்குமுன் சொன்னதுபோல்). ரக்ஷிக்கப்படாத தர்மம் ஆயுளை அபஹரித்துவிடுகிறது. மஹான்களிடத்தில் தோஷங்களிருந்தாலும்அவை தாமரையிலை நீர்போல் அவர்களைபாதியாது. அதைப் பார்த்து மந்தமதி செய்தால் அழிந்துபோவான். தேவர்கள், முனிவர்கள் சில விபரீத கார்யங்களைச் செய்தால் அவை மனுஷ்யர்களுக்கு அனுஷ்டான் ப்ரமாணமாகாது. நமக்கு ச்ருதி, ஸ்ம்ருதிகளே ப்ரமாணமாகும். மனஸ்ஸாக்ஷிக்கு விரோதமும் லோகம் (சிஷ்டர்) ஸம்மதியாததும் க்ராஹ்யமாகாது. அது ச்ரேயஸ்கரமுமாகாது.

## ஸ்ம்ருத்யாதி ப்ரம்சஸை. ச்ருதி ஸ்ம்ருதி பலாபலம்

ஸ்ம்ருதி என்னும் தர்மசாஸ்த்ரத்தை ப்ராஹ்மணன் ப்ரயத்னத்தோடு படித்து சிஷ்யவர்க்கங்களுக்கும் போதிக்கவேண்டியது. த்விஜர்களுக்கு ச்ருதி, ஸ்ம்ருதிகள் இரண்டும் ந்யாயமார்க்கத்திற் செல்ல இரு நேத்ரங்களாகும். ஒன்றைமற்றும் கற்றவன் ஒரு கண் பார்வையை மட்டுமுடையவன்போலும், இரண்

டையுமே அத்யயனம் செய்யாதவன் பிறவிக் குருடனுக்கும் ஒப் பாவன். இதைத் தெரிந்துகொள்ளாவிடில் வழிதப்பி பதிதரா கின்றனர். இது பிறவியாகிய வ்யாதியையடைந்தவர்களுக்கு பரமௌஷதம் போன்றதாகிறது. இருட்டில் தடுமாறுகிறவனுக்கு தீபம் போன்றது. ஷடங்கங்களோடுகூடின நான்கு வேதங்கள், தர்மசாஸத்ரம், புராணம், ந்யாயம் [தர்க்கம்], மீமாம்ஸை ஆகிய இப்பதிநான்கும் வித்யைகளுக்கு ஸ்தானங்களாகும். நிஷேகம் முதல் ஸ்மசானம் வரையிலுள்ள ஸம்ஸ்காரங்கள் மந்த்ரங்களுடன் யாருக்கு விதிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த த்விஜனுக்கே இதை க்ரஹிக்க அதிகாரமென மனுவிதித்து விட்டார். மனு எதைச் சொன்னரோ அது மருந்து என்று வேதம் உத்கோஷிக்கிறது. மனுஸ்ம்ருதிக்கு விரோதமாய் எந்த ஸ்ம்ருதிவசனம் இருந்தாலும் அது க்ராஹ்யமாகாது. யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியும் மனுஸ்ம்ருதி போன்றதேயாகும். ஆசாரம் தெரியாத ப்ராஹ்மணனுக்குக் கொடுக்கப்படுந் தானம் போஜனம், முதலியவை தாதாவின் குலத்தை அழித்துவிடும். ஆர்ஷக்ரந்தங்களை நிந்திப்பவன் மீளா நரகிற்காளாகிறுன். ச்ருதியில் கர்மாக்களின் ஸ்வரூபம் ஸூக்ஷ்மமாயிருப்பதை ஸ்ம்ருதிகள் விவரணம் செய்கின்றன.

ச்ருதியில் அக்னிஹோத்ரத்தை உதயத்திற்கு முந்தியும் பிந்தியும் அனுஷ்டிக்க விதிவாக்யங்கள் இருக்கின்றன. அவரவர் பிதா, பிதாமஹரனுஷ்டித்த குலாசாரப்படி அது க்ராஹ்யமாகும். வேதத்தில் த்யஜிக்கத்தக்கது ஒன்றுமில்லை. ச்ருதி, ஸ்ம்ருதி விரோதங்களில் ச்ருதி வாக்யமே க்ராஹ்யமாகும். ச்ருதிக்கு விரோதமில்லா ஸ்ம்ருதிவசனம் க்ராஹ்யமே. அது போலவே புராணவசனத்தைக் காட்டிலும் ஸ்ம்ருதிவசனம் ப்ரபலமாகும். ச்ருதி, ஸ்ம்ருதிவசனம் கிடைக்காவிடில் சிஷ்டாசாரம் ப்ரமாணமாகும். இதை தைத்ரீயோபநிஷத் உத்கோஷித்துவிட்டது. நமக்கு எந்த சிஷ்டரின் ஆசாரம் ருசிக்கிறதோ அது க்ராஹ்யமாகும். தன் ஸூத்ரத்தில் கிடைக்காத ஆசாரம் இதர ஸூத்ரங்களிலிருந்து க்ரஹிக்கத்தக்கதாகும். எண்பத்தெண்ணுயிரம் ரிஷிகள் தர்மசாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள்.

போதாயனம், ஆபஸ்தம்பம், ஸத்யாஷாடம், த்ராஹ்யாயணம் ஆகஸ்த்யம், சாகல்யம், ஆச்வலாயனம், சாம்பவீயம், காத்யாயனம், வைகானஸம், சௌனகீயம், பாரத்வாஜம், ஆக்னிவேச்யம் ஜைமினீயம், மாதுன்யம், மாத்யந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம் என ஸூத்ரங்கள் பதினெட்டு. இவர்களின் வசனத்தை ஹேதுவாதத்தால் (தன் குயுக்தியால்) ஆக்ஷேபிப்பவன் அந்ததமஸ் என்னும் நரகத்தையடைகிறான்.

## தர்மதேச நிரூபணம்

கிழக்கு மேற்கு ஸமுத்ரமத்தியில் ஹிமயவிந்தியாசலங்களின் நடுவிடமே ஆர்யாவர்த்தமெனப்படும். க்ருஷ்ணஸாரம் (கருப்பு மான்) எங்கு வசிக்கின்றனவோ அதுவே யாகார்ஹ, வாஸார்ஹ ஸ்தலமாகும். சிஷ்டர்கள் இல்லாததும், கிணறுகளையே ஜலாதாரமாய்க்கொண்ட இடங்களிலும், வ்யாதியுள்ளதும், ஜனம் நிறைந்ததும், வித்தையில்லாததும், தனிகர் இல்லாததும், இதர ஜாதிக்களால் உபத்ரவிக்கப்படும் இடங்களிலும், நீசர், ம்லேச்சர் வஸிக்கும் ஊர்களிலும் வஸிக்கக்கூடாது. வஸிப்பவர் புனருபனயனார்ஹனவர். விறகு, ஜலம், தர்ப்பம், ஸஞ்சரிக்கக்கூடிய ப்ரதேசம், ப்ராம்ஹணருள்ளவிடங்கள் வாஸார்ஹமாகும்.

## கலியுக தர்மமும், மஹத்வமும்

கலியுகத்திற்கு பராசர ஸ்ம்ருதி ப்ரதானமாகும். இதில் தானமும் ஓர் பாபநாசன ஸாதகமாகும். சிஷ்டன் இருக்குமிடம் சென்று கொடுப்பதே உத்தமமாகும். கூப்பிட்டுக்கொடுப்பது மத்யமம். யாசிப்பவனுக்குக் கொடுப்பது அதமம். பதிதனுடன் பேசவுங்கூடாது. கலியில் சாபம் பலிக்க ஒரு வருஷமாகும். திருடர்களால் அரசர்களும், ஸ்த்ரீகளால் புருஷர்களும் கலியில் ஜயிக்கப்பட்டிருப்பர். இதில் தர்மதேவதையான கோ ஒரு பாதத்தில் நிற்கிறது. சிச்னோதரபராயணர்களாய் (ஸ்த்ரீஸங்கம், உதரபூர்ணம்) இருப்பர். சாஸ்த்ரீய விவாஹங் கிடையாது. குரு சிஷ்ய க்ரமம், பதிபத்னீ க்ரமங்கள் விபரீதமாயிருக்கும். அவனவனுக்குத் தோன்றியதெல்லாம் சாஸ்த்ரமாகும். பணமில்லாத பர்த்தாவை பார்யைகள் விட்டுவிடுவார்கள். பண

முள்ளவனே ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவாக ஆவான். தனிகர் தம் எல்லா தனத்தையும் தாம் அனுபவிப்பதற்கு மட்டும்தான் உபயோகிப்பர். அக்னி, தேவதை, அதிதி பூஜைகள் இரார். புருஷனுக்கு மாமனார் க்ருஹமே வாஸஸ்தானமாகும். மாதா பிதாக்களையும் ரக்ஷியார். யாகம், அத்யயனம், ஹோமம், ச்ராத்தம் யாவும் லோபிக்கும். சூத்ரர் ப்ராஹ்மணர்களை ஹிம்ஸிப்பர். ப்ராஹ்மணர் சூத்ரஸேவை பண்ணுவர். பணத்திற்காக யாக, தபோபலன்களை விற்பர். வேத, தேவ நிந்தனை செய்வர். ராக்ஷஸர்களே கலியில் ப்ராஹ்மணர்களாய்ப் பிறக்கின்றனர். பரான்னத்தால் முகமும், தானம் வாங்குவதால் கைகளும், பரஸ்த்ரீகளைப் பார்ப்பதால் மனதும், சக்தியை இழந்துவிடுவதால் கலியில் சாபம் பலிக்கிறதில்லை. சிஷ்டர்களுக்கு ச்ரமம் அதிகரிப்பதே கலியின் வ்ருத்தி என்று அறியத்தகுந்ததாகும்.

இதர யுகங்களிற் விசேஷ தபஸால் ஸாதிக்கப்படுவது கலியில் ஸ்வல்ப தபஸாலேயே ஸாத்யமாகும் என்பதே இதன் ஓர் அஸாதாரண மஹிமையாகும். ஸதாஸர்வகாலமும் (கேசவ) பகவந்நாம உச்சாரணமே மோக்ஷோபாயமான தர்மமாகும். ராம நாமமே தாரக மந்த்ரமாகும். பக்தி முக்தியைக் கொடுக்கும். கலியில் சுத்தமான த்ரவ்யமில்லை. மனஸ் சுத்தியில்லை. ஸத்யம் ஒன்றே ரக்ஷணமாகும். ஸமுத்ரதரணம், வ்யபிசாரிகளுக்கு ப்ராயசித்தம், ஸந்யாஸம், அச்வமேதாதி விசேஷ யாகங்கள் இக்கலியில் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன.

### விசேஷவிதியில்லாவிடத்து ஸாதாரண விதிகள்

ஒரு கர்மத்தை மோஹத்தால் மாறிச் செய்துவிட்டால் பிறகு மாறின இடத்திலிருந்தே அதைச் செய்து முடிக்கவேண்டும். கிழக்கு, வடக்குகளே திக்குகளாகும். ஒவ்வொரு கர்மாவிற்கும் ஸங்கல்ப, பலத்யாகங்களும் முக்யமாகும். மனதின் தெளிவு, ஸத்யம், ஸ்நானம், ஆசமனம், தபஸ், ஆசாரங்களும் கர்மாங்கங்களாகும். உட்கார்ந்தே செய்யவேண்டும். ஆபத்தில்லாத காலங்களில் கௌண விதிகளை அனுஷ்டிக்கக் கூடாது.

தன் சாகை, ஸூத்ரங்களைவிட்டு வேறொன்றை அவலம்பிக்கக் கூடாது. கிடைக்காவிட்டால் மட்டும் செய்யலாம். காலம் வருவதற்கு முன்னமே செய்யப்பட்ட கர்மா மறுபடி ஸகாலத்திலும் அனுஷ்டிக்கப்பட வேண்டியது. வித்வானும் தன் யுக்தியால் ஒருகர்மாவைச் செய்து விடக்கூடாது. விதியையும் மாற்றி விடக்கூடாது. தானம், ப்ரதிக்ரஹம், ஹோமம், ஆசமனம், ஜபகாலங்களில் முழந்தாள்களுக்குள்ளே கைகளை வைத்துக் கொண்டு செய்யவேண்டும்.

## ஸ்ருஷ்டிக்ரமம்

நரனென்றால் பரமபுருஷன். அவனிடமிருந்து உண்டானதால் ஜலத்திற்கு நாரமென்று பெயர். நாரத்தைஅயனம்,ஸ்தானமாக உடைத்தாயிருப்பதால் அவனுக்கு நாராயணனென்று பெயர். ஜகத் ஸருஷ்டி உத்தேசமாய் முதலில் தன் சரீரத்திலிருந்து ஜலத்தையே ஸ்ருஷ்டித்து அதில் தன் வீர்யத்தைவிட அதிலிருந்து அண்டம் உண்டாயிற்று. அதில் பகவானே ப்ருஹ்மாவாய் அவதரித்தார். பிறகு தேவர், மனுஷ்யர், முதலான ஸகல ப்ராணிகளையும் ஸ்ருஷ்டித்தார். அந்த ஹிரண்யகர்ப்பன் (ப்ரும்மா) ரூபங்களுக்கு வேதோக்தமான நாம, க்ரியைகளை வ்யவஸ்தை பண்ணினார். தம் முகம், கைகள், தொடைகள், பாதங்களினின்றும் ப்ருஹ்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களை முறையே ஸ்ருஷ்டித்தார். ப்ராஹ்மணனுக்கு ப்ராஹ்மண ஸ்த்ரீயினிடத்தில் ஜனிப்பவன் ப்ராஹ்மணன். அதேமாதிரி மற்ற ஜாத்யர்களையும் அறியவும்.

## ப்ராஹ்மணனின் தர்மங்கள்

தபஸ், இந்த்ரிய நிக்ரஹம், தயை, தானம், ஸத்யம் வித்யை, (ப்ருஹ்ம) ஜ்ஞானம், ஆஸ்திக்யம், ஆசாரம், பொறுமை, கபடமின்மை முதலியன ப்ராஹ்மணனின் லக்ஷணங்களாம். அத்யயனம், அத்யாபனம் [வேதத்தைச் சொல்லி வைத்தல்], யஜனம், யாஜனம் (யாகம் செய்வித்தல்], தானம், ப்ரதிக்ரஹம் (தானம் வாங்கல்), களே இவன் கர்மங்களாகும். அத்யயனம், யாகம், தானங்களே க்ஷத்ரிய, வைச்யர்களுக்குரி

யவை. இம்மூன்றும் த்விஜர்களுக்குக் கடமைகள். மற்ற யாஜனம், ப்ரதிக்ரஹம், அத்யாபனங்கள் ப்ராஹ்மணனுக்கு வ்ருத்யர்த்தம் ஏற்பட்டதால் அனுஷ்டிக்க ஆவச்யகமில்லை. ஆபஸ்தம்பர் இம்மூன்றுடன் இன்னும் இரண்டு வ்ருத்திகளைக் கல்பித்திருக்கிறார். அவை:— தாயாத்யம் (பித்ரார்ஜிதத்தில் தனக்குண்டான பாகம்), ஸிலோஞ்சம் (வயல்களில் சிந்திக் கிடக்கும்) தான்யங்களைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளல்களாம்.

### யஜனம்

பகவான் கீதையில், யாகங்களால் நீங்கள் தேவதைகளை ஆராதியுங்கள். அவர்கள் உங்களை ரக்ஷிப்பார்கள். இது பரஸ்பர உபகாரமாகும். அவர்கள் உங்களுக்கு வேண்டியதையும் இஷ்டமான போகங்களையும் கொடுப்பார்கள். அவர்கள் மழை மூலம் கொடுக்கும் அன்னத்தை அவர்களுக்கு நிவேதனம் செய்யாமல் புஜிப்பவன் திருடனுவான் என்றார். அவரே, யாகத்தை பலாபேக்ஷயின்றிச் செய்தால் ஸாத்விகமாகும். பலாபேக்ஷயுள்ளது ராஜஸம். விதியின்றி மந்த்ரஹீனம், க்ரியாஹீனம், பக்திஹீனம் அன்னதானரஹிதம், தக்ஷிணை, ச்ரத்தாஹீனங்களுள்ளது தாமஸமென்கிறார். யஜ்ஞத்தால் பாபங்கள் தொலைகின்றன. நல்ல லோகங்கள் ப்ராப்தமாகின்றன. உத்க்ருஷ்டமான புண்யஜன்மங்கள் உண்டாகின்றன. நரகபயத்திற்காகவாவது ஒவ்வொரு ப்ராஹ்மணனும் ஆதானத்தையாவது அவச்யம் செய்யவேண்டும். தர்சம், பூர்ணமாஸம், ஆக்ரயணம், சாதுர்மாஸ்யம், பசுபந்தம், ஸோமயாகம்; இவைகளும் அத்யாவச்யம் அனுஷ்டிக்க வேண்டியதாகும். பாகயஜ்ஞங்கள், ஹவிர் யஜ்ஞங்கள், ஸௌம்ய யஜ்ஞங்களும் அத்யாவச்யம். இந்த ச்ரௌதகர்மாக்களை அனுஷ்டிக்க சக்தியில்லாதவனே ஸ்மார்த்தகர்மாக்களைச் செய்யவேண்டும். ப்ரஜாபதி அக்னிஹோத்ரம், அக்னிஷ்டோமம், பௌர்ணமாஸீ, உக்த்யம் அமாவாஸ்யை, அதிராத்ரம் என்கிற ஆறு யாகங்களை ஸ்ருஷ்டித்தார். அவற்றுள் அக்னிஹோத்ரம், பௌர்ணமாஸீ, அமாவாஸ்ஸை இம்மூன்றும் ஸ்வல்ப த்ரவ்ய, மந்த்ரங்களால் ஸாதிக்கக் கூடியவை. பலனும் ஸ்வல்பமே. மற்ற மூன்றுமோ

ச்ரமஸாத்யமானவை, பலனும் விசேஷம். பிறகு அவர் அனு க்ரஹத்தால் அக்னிஹோத்ரத்திற்கு அக்னிஷ்டோம பலனும், பௌர்ணமாஸிக்கு உக்த்ய பலனும், அமாவாஸ்யா யாகத் திற்கு அதிராத்ர யாக பலனும் ஏற்பட்டுவிட்டன. இதையறிந்து செய்பவனுக்கே இவ்வித பலனுண்டாகுமென வேதம் விதித்து விட்டது. ச்ருதியே, ப்ரஜாபதி பலாபேக்ஷயின்றி தர்சபூர்ண மாஸத்தை அனுஷ்டிக்க அவருக்கு உயர்ந்த பரமேஷ்டி பதம் ப்ராப்தமாயிற்று; அவர் இந்த்ரன், அக்னீஷோமர் முதலி யோரை இதை அனுஷ்டிக்கச் செய்ய அவர்களுக்கும் உயர்ந்த ஸ்தானங்கள் ப்ராப்தமாயின. ஸாயம் ப்ராதரக்னிஹோத்ரங்கள் க்ருஹஸ்தர்களின் பாப ப்ராயச்சித்தம், அதனால் அக்னிஹோத் ரத்தை ச்லாகிக்கின்றனர், அக்னிஹோத்ரமே ஸர்வ யாகங்க ளுக்கும் மூலம் என்றும் தைத்ரீயோபநிஷத் உத்கோஷிக் கிறது. அக்னிஹோத்ரத்திற்கு மேலான தபஸ், வ்ரதம் தர்மம் ஒன்றுமே கிடையாது. உஞ்சவ்ருத்தியால் ஜீவிப்பவன் எந்த லோகத்தை அடைகிறானோ அந்த உத்தமலோகத்தையே தர்சபூர்ணமாஸ யாகம் செய்பவன் அடைகிறான். அங்கிருந்து மறுபடியும் திரும்புகிறதில்லை. நித்யாக்னிஹோத்ரம், தர்சம், பூர்ணமாஸம், பித்ருயஜ்ஞம், அதிதி பூஜை, வைச்வதேவம் இவை க்ருஹஸ்தனுக்கு சாச்வதமான ப்ருஹ்மலோகவாஸத் திற்கு ஹேதுவாகின்றன. அல்ப தக்ஷிணையுடன் செய்யப்படும் யாகமானது பசு, புத்ரர், ஆயுஸ், தனம், இந்த்ரியங்கள், ஸ்வர்க்கம் முதலியவைகளை நாசஞ் செய்கின்றன. ஆகையால் தனமில்லாதவன் விசேஷ யாகத்தில் ப்ரவ்ருத்திக்கக் கூடாது. இதர புண்யகர்மங்களைச் செய்யவேண்டும். விதிக்கப்பட்ட தக்ஷி ணைகளைக் கொடாதவன் ஆதான பலனை அடையாது அனாஹிதா க்னியாகவே இருக்கிறான். தக்ஷிணை நியமம் நித்யகர்மமான தர்சம், பூர்ணமாஸம், ஆக்ரயணம், ஸோமயாகங்களுக்கில்லை. யதாசக்தி கொடுத்து அங்கங்களுடன் ஸோமயாகத்தைச் செய்து வ்ராத்யத்தன்மை, துர்ப்ராஹ்மணத் தன்மைகளைப் போக்கிக் கொள்ளவேண்டியது. அத்யயனத்திற்கு லக்ஷணம் அக்னி ஹோத்ரம் அனுஷ்டிப்பதே. இதற்கு ஸத்ருசமான தர்மமே

கிடையாது. தர்சபூர்ணமாஸங்களில் ஒன்றைச் செய்யாவிடில் பாதக்ருச்ரத்தினாலும், இரண்டையுமே அனுஷ்டியாவிடில் அரைக்ருச்ரத்தினாலும் சுத்தனாகிறான். ச்ரம ஜீவனமில்லாதவன் இரு ஸந்திகளிலும் அக்னிஹோத்ரத்தையும், பக்ஷாந்தரங்களில் தர்சபூர்ணமாஸ இஷ்டிகளையும், புது தான்யம் வந்ததும் ஆக்ரயணேஷ்டியையும், ருதுக்களின் முடிவில் சாதுர்மாஸ்யங்களையும், அயனமுடிவில் பசுபந்தத்தையும், வர்ஷாந்தத்தில் ஸோமயாகத்தையும் செய்யவேண்டும். சூத்ரனிடமிருந்து தனம் வாங்கி அக்னிஹோத்ரம் செய்கிறவன் சூத்ராக்னிஹோத்ரீ என்று நிந்திக்கப்படுவன், நரகத்தையுமடைகிறான். யாகத்திற்காகசூத்ரனிடம் யாசிக்கக்கூடாது. யாசித்துச் செய்பவன் சண்டாளனாய்ப் பிறக்கிறான். பலன் சூத்ரனைச் சேரும். யாகத்திற்காக யாசித்துத் தன் குடும்ப செலவிற்கு உபயோகித்துக்கொள்ளுபவன் சண்டாளனாய்ப் பிறக்கிறான். யாசகத்தில் கொஞ்சம் மீற்றிக்கொண்டவன் கோட்டான், காக்கைகளாய்ப் பிறக்கிறான். ஸோமயாகத்தில் ஸஹஸ்ர ப்ராம்ஹணபோஜனமும், பசுபந்தத்தில் சதமும், சாதுர்மாஸ்யத்தில் ஒவ்வொரு பர்வத்திலும் சதப்ராஹ்மண போஜனமும், செய்விக்கவேண்டும். தர்சத்தில் எட்டு பேருக்குச் செய்விக்கவேண்டும். அசக்தன் ரித்விக்குகளுக்காவது செய்விக்க வேண்டும். யாக காலங்களில் யஜமானன் உத்தேசத்யாகம் செய்துகொண்டு எதிரிலிருந்துகொண்டு அத்வர்யுவைச் செய்யச் சொல்லவேண்டும். அவனிராவிடில் அவன் பத்னியாவதிருக்க வேண்டும். தர்சபூர்ணமாஸேஷ்டிகளில் நான்கு ரித்விக்குகள் இருக்கவேண்டும். கிடைக்காவிடில் மூன்றோ, இரண்டோ, ஒருவரோ இருக்கவேண்டும். யஜமானன், ரித்விக்குகள், த்ரவ்யங்கள், உபகரணங்கள், எல்லாம் சுத்தமாயிருந்து யாகம் செய்யப்பட்டால்தான் தேவதா ப்ரீதி, ப்ரஸாதங்கள் ப்ராப்தமாகும். பிதா ஆதானமில்லாதிருக்க புத்ரன் அவன் அனுமதி கொடுத்தாலும் செய்துகொள்ளக் கூடாது. தமயன் விவாஹம், ஆதானமில்லாதிருக்கவும் தம்பி இவைகளைச் செய்துகொண்டால் **பரிவேத்தா**வென்றும், தமயன் **பரிவித்தி**யென்றும் சொல்லப்படுவர். அஜ்ஞன், தேசாந்தரத்திலிருப்பவன், பதிதன், யதி,

யோகி, குள்ளன், கூனன், நபும்ஸகன், திக்குவாயன், மந்தன், அந்தகன், செவிடன், ஊமை, இவர்களை அதிக்ர மித்து விவாஹாக்நி ஹோத்ரங்களைச் செய்துகொண்டவர் பரிவேதன தோஷத்திற்காளாவதில்லை. பிந்நமாத்ரு கர்களான ப்ராதாக்களுக்கு இத்தோஷமில்லை. ஆதாந மில்லாத பிதா விதுரராயிருந்தால் புத்ரன் ஆதாநம் செய்யலாம். ஜ்யேஷ்டன் அனுமதியால் கனிஷ்டன் ஆதா நம் செய்யலாம். ப்ராஹ்மணன் வஸந்தருதுவில் ஆதாநம் செய்யவேண்டும். ஆதாநம் செய்துகொண்ட வருஷத் தில் எவன் வ்ருத்தியை அடையவில்லையோ அவன் புன ராதாநம் செய்யவேண்டும். ஆதாநம் செய்யப்பட்ட அக்னிதேவன் ஹவிர்ப்பாக இச்சையுடன் யஜமானனின் பசு, புத்ரர்களை உபத்ரவிப்பதால் உத்வாஸ நேஷ்டி செய்து உத்வாஸநம் செய்து புனராதாநம் செய்யவேண்டும். அதனால் அக்னிக்கு பாகம் கிடைத்ததாகிறது. இது ஓர் சாந்திகர்மாவு மாகிறது. அக்னிகள் அனுகதங்களா யிருக்கையில் ஸூர்யன் உதயமானாலும், அஸ்தமித் தாலும், தம்பதிகளின் வெளிப்ரயாணத்தில் ஹோம காலத்திற்குள் வராமலிருந்தாலும் புனராதானம் செய்ய வேண்டும். அக்னி லௌகிகமாய்விடுகிறது. நான்கு நாள் ஹோமமில்லாத அக்னி லௌகிக மாகுமென்று ச்ருதி சொல்லுகிறது. விதியில்லாத பாக, உத்தரணங் களால் அக்னி லௌகிகமாகும். பார்யா மரணத்தில் அக்னிஹோத்ர அக்னிகளை உபயோகித்து விட்டு புனர் விவாஹம் செய்துகொண்டு ஆதாநம் செய்துகொள்ள வேண்டும். தோஷமுள்ளவளுக்கு வைதிகாக்னியால் தஹிக்கக்கூடாது. புனர்விவாஹம் செய்துகொள்ளாத வன் நிர்மந்த்யாக்னியால் பத்னியை தஹித்து ச்ரௌதாக் னியை தனதாயுளுள்ளளவும் அல்லது ஸந்யாஸாச்ரமஸ் வீகாரம் வரையிலும் வைத்துக்கொள்ளவேண்டும். அபத்

னீகனுக்கும் அக்னிஹோத்ரமுண்டு. செய்யாவிடில் அவன் அனத்நா என்று வ்யவஹரிக்கப்படுவான். தேவ, பித்ரு, மனுஷ்யர்களைப் பூஜியாதவனே அநத்நன். கண்வர், விபண்டகர் இதை அனுஷ்டித்துக் காட்டியிருக்கின்றனர். ஸ்ரீராமனும் அப்படியே, ஸ்வர்ணத்தால் ஸீதா விக்ரஹத்தை வைத்துக்கொண்டு அக்னிஹோத்ரம் மட்டுமின்றி அநேக யாகங்களும் செய்திருக்கிறார். தன்னனுஷ்டானத்திற்கு அக்நியைவைத்துக் கொள்ளாது பார்யையை தஹித்துவிடுபவனுக்கு ஸ்த்ரீஜன்மமும் அவளுக்கு புருஷ ஜன்மமும் ப்ராப்தமாய் விடுகிறது என்கிறது மைத்ராயணீச்ருதி. பார்யை வ்யாதிக்ரஸ்தையாகவோ, தேசாந்தர வாஸியாகவோ, இறந்தோ, ப்ரதிகூலையாயோ இருந்தால் ப்ரதிநிதியை வைத்துக்கொண்டு செய்யலாம். ப்ரதிநிதி தர்ப்பத்தினால் செய்யப்பட்டதாயிருக்கலாம். யஜமானனே அக்னிக்குக் காரணம் என்கிற ச்ருதியால் ஆதானம் முதற்கொண்டு யஜமானனிடத்திலேயே அக்னிகளிருக்கின்றன. பத்னீயே வீட்டிலுள்ள தனங்களுக்கு அதிபதி என்று ச்ருதி உத்கோஷிப்பதால் அவளுக்கு அங்கத்வம், ஸ்வாமித்வம் இரண்டும் அக்னி ஹோத்ரத்திலிருப்பதால் அதை அனுஷ்டிப்பவனுக்கு அவளுக்கு ப்ரதிநிதி அவச்யமிருக்கவேண்டுமென்று ஸித்தாந்தமாயிற்று. அநாஹிதாக்னியானவன் ஔபாஸனாக்னியால் பாதி யெடுத்து ம்ருதபத்னீயை தஹித்து மற்ற பாதியில் காலை மாலை ஹோமங்களையும் ஸ்தாலீபாகங்களையும் செய்துகொண்டு யாவஜ்ஜீவ மிருக்கவேண்டியது. புனர் விவாஹத்தையும் அதே அக்னியில் வேண்டுமானால் செய்துகொள்ள வேண்டும் என்று ஆச்வலாயனர் விதிக்கிறார். க்ரியாகல்பகாரிகா க்ரந்தத்தில் விதுராக்னி ப்ரதிஷ்டை சொல்லியிருக்கிறது. ப்ரணவத்தால் அக்னிக்ரஹணம், அந்வக்னி ரிக்கால் கீழ்ப்புறத்தில் கொண்டு வந்து, 'ப்ருஷ்

டோதிவி'ரிக்கால் ஸ்தாபனம் செய்து நான்கு சகலங்களால் ஹோமம் செய்யவேண்டும். உல்லேசனம் முதலியவை வேண்டியதில்லை. 'தத்ஸ, தார்ஸ, விச்வநிதே, அத்யாந:' என்பவைகளே மந்த்ரங்களாகும். ஆரோபண அவரோபணங்களுமில்லை. விதுரன் இவ்வக்நியிலேயே நித்ய, நைமித்திக, காம்ய கர்மாக்களைச் செய்யவேண்டும். இப்படி அக்னி உத்பாதனம் செய்து ஔபாஸனங்களைச் செய்து கொண்டுவர வேண்டும். ஔபாஸனம் அவச்யமில்லை விதுரனுக்கு என்று சில ரிஷிகள் அபிப்ராயப்பட்டு 'மஹத்தந்' என்ற ஸூக்தத்தை ப்ரதி தினம் பஞ்சாவ்ருத் ஜபிக்கவேண்டும், அல்லது 'அக்னே நய'ரிக்கை பஞ்சாவ்ருத் ஜபித்துவந்தால் அக்னியுடன் கூடனவனுக்குண்டான பலனை யடைகிறான் என்று விதித்திருக்கின்றனர். ப்ராஹ்மணன் அனக்னியா யிருந்தாலும் ஸதாசாரஸம்பன்னனுயிருந்தல் ஹவ்ய கவ்யங்களில் அன்வயிக்க அர்ஹனுகிறான். அனக்னிகளுக்கு வேதமே அக்னியாகும் வேதமில்லாதவன் அக்னியுடன் இருந்தாலும் அனக்னிகனே. புத்ரவானுயிருந்தால் வைதுர்ய தோஷமில்லை. புத்ரனே அக்னி யென்கிறார்கள். பத்னீயை ப்ரதிக்ரஹிப்பது புத்ரனுக்காகத்தானே பத்னீ மரித்தாலும் அக்னீ நசியாததால் புத்ரவந்தனை விதுரன் ஸர்வ கர்மங்களுக்கும் யோக்யனுகிறான். விதுரனுக்கு அக்னி உண்டு இல்லை யென்பது அவரவர் சிஷ்டாசார ஸம்மதமாகும்.

### யாஜனம்

பதிதனேடு ஸஹவாஸம் (பாஷண, போஜனுதிகள்) செய்பவனும் பதிதனுகிறான். அப்பாவம் போக பதிதனுக்கேற்பட்ட ப்ராயச்சித்தங்களை இவனும் செய்துகொள்ள வேண்டியது. ப்ரதிக்ரஹ தோஷம் ஜப, ஹோமங்களால் நிவ்ருத்தமாகும்.

## அத்யயநம்

அர்த்தந் தெரிந்து அநுஷ்டிக்கும் மந்த்ரங்கள் ஸபல மாகின்றன. ஷடங்கங்களோடு வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். வேதாத்யயனமே தபஸ் என்று உப நிஷத் உத்கோஷிக்கிறது. அத்யயனம் செய்யாதவன் தன் வம்சத்துடன் சூத்ரத் தன்மையை யடைகிறான். குலஹீனனும் அத்யயனத்தால் ஆபிஜாத்யத்தை யடை கிறான். வேதார்த்த ஜ்ஞானத்தால் பாபங்களைத் தொலைத் துக்கொண்டு ஸ்வர்க்கத்தை யடைகிறான். அறியாதவன் பாரத்தை வஹிக்கும் தூணாகிறானென்று ச்ருதி சொல்லி விட்டது. அர்த்த ஜ்ஞானமில்லாதவன் சேற்றிலகப் பட்டு கஷ்டப்படும் பசுவைப் போல் குலத்துடன் சூத்ர னாகிறான். மரயானை, தோல்மானுக்கு ஸமானன் அத்ய யனம் செய்யாதவன். நபும்ஸகனுக்கு ஸ்த்ரீ போலும், அஜ்ஞனுக்கு தானம் போலும் வேதமில்லா விப்ரன்நிஷ் பலனாகிறான். குருவினிடம் அத்யயனம், அர்த்த விசாரம், அப்யாஸம், ப்ருஹ்மயஜ்ஞத்தில் ஜபம், அத்யாபனம் என்று வேதாப்யாஸம் ஐவிதமாகும். சரணாகதனை ரக்ஷி யாதவனும், வேதத்தை மறந்த ப்ராம்ஹணனும் பாவந் தொலைய யவாஹாரத்துடன் ஒரு வருஷம் தபஸ் செய்ய வேண்டும். ஹரி: ப்ரணவங்களைச் சொல்லி வேதாரம்பம் செய்வதே வீர்யகரமாகும். ப்ரணவமேஸ்வர்க்க மார்க்கம். ஆகையால் ஆத்யந்தங்களில் அதை யுச்சரிக்கவேண்டும். நடுவில் பேசிவிட்டாலும் மறுபடி ப்ரணவோச்சாரணம் செய்து ஆரம்பிக்கவேண்டும். இதை உச்சரிக்கப்படாது சொல்லப்படும் வேதம் வேதாமாகாதிருக்கக் கடவதென்று ப்ரணவம் பெற்ற வரனின் ப்ரபாவமாகும். ஸ்வசாகையை விட்டு பரசாகையை அத்யயனம் செய்பவன் சாகாரண்டன் எனப்படுவன். அவன் நரகமடைகிறான்.

## அத்யாபநம்

வித்யைக்கு அதிஷ்டான தேவதை ப்ராஹ்மணனிடம் ப்ரார்த்திப்பதானது, வேதமாகிய என்னை சுத்தனையும், ஜிதேந்த்ரியனையும், ப்ருஹ்மசாரியாயும், என்னை வைத்து ரக்ஷிக்கக்கூடியவனையும் (மறவாமல் தரிப்பவன்) அந்த சிஷ்யனுக்கு உபதேசி, அப்பொழுதே நான் வீர்யமுள்ளவளாக இருப்பேன், மற்றவருக்கு என்னை விநியோகியாதே என்று சரணமடைந்து ரக்ஷிக்க ப்ரார்த்திக்கிறது. அத்யயனத்திற்கதிகாரிகள் பத்துபேராவர். குருபுத்ரன், சுச்ரூஷை செய்பவன், தனக்கொரு வித்தையைச் சொல்லி வைப்பவன், தர்மிஷ்டன், சுத்தாத்மா, பந்து, க்ரஹண, தாரணங்களில் சக்தன், பணங் கொடுப்பவன், ஹிதைஷி, ஜ்ஞாதிகளே. அஸத்பாத்ரவிநியோகம் ஊஷர பூமியில் பீஜாவபனம் செய்வதோடொக்கும். குருவின் உத்தரவின்றி ஒளிந்து க்ரஹித்த வேதசோரன் நரக மடைகிறான். மரியாதை தவறின வக்தா, அத்யேதாக்களுக்கு நரகமேகதியாகும். இருவருக்கும் பரஸ்பரம் வைரமேற்படும். வித்யை, தர்மம், பெண்களை இழி குலத்திலிருந்தும் க்ரஹித்துக் கொள்ளலாம். அம்ருதத்தை விஷத்தினின்றும், நல்வார்த்தையை சிறுவனிடமிருந்தும், ஸதாசாரத்தை சத்ருவினிடமிருந்தும், ஸ்வர்ணத்தை அசுத்த ஸ்தலத்திலிருந்தும் ஸ்வீகரிக்கலாம். கைரேகைகளில் ஸ்வரங்களைக் காட்டியும், ஸ்வரம், வர்ணம் ஸ்பஷ்டமாயும் அத்யயனம் செய்ய வேண்டும். அத்யாபகன் முன் பின் மும் மூன்று தலை முறைகளை தன்னுடன் ஸ்வர்க்க மடைவிக்கிறான். சுச்ரூஷையோ, அர்த்தமோ, தர்மமோ யில்லாத சிஷ்யனுக்குச் சொல்லி வைக்கக்கூடாது. அப்படிச் சொல்லி வைத்தால் அக்னி புதரை தஹிப்பது போல் தஹித்துவிடும். அபாத்ர விநியோகத்தை விட தன் வித்தையோடேயே

மரிக்கலாம். உஷ: காலத்தில் அத்யயனம் செய்து விட்டுத் தூங்கக்கூடாது. அனத்யயனங்களிலும், சூத்ரன் எதிரிலும், ப்ரதிக்ரஹார்த்தமும் செய்யப்படும் அத்யயனம் நரகஹேதுவாகும். தனக்கு மட்டில் போஜனத்தையும், ஸுகத்திற்காக மட்டும் மைதுனத்தையும், வ்ருத்யர்த்தம் அத்யயனத்தையும் செய்பவர் அநேக நரகங்களை அடைகின்றனர் வேதனத்தை முதலில் பேசிக்கொண்டு அத்யாபனம், யாஜனங்களைச் செய்யும் வேதவிக்ரயீ அநேக சிசுஹத்தி தோஷங்களை யடைகிறான். த்ரவயத்திற்காக ப்ருஹ்மோபதேசம் செய்பவன் உடனே சண்டாளனாகிறான். பணங் கொடுத்து அத்யயனம் செய்தல், செய்வித்தல்கள் உப பாதகங்களாகும்.

## உபாகர்மப்கரணம்

ச்ராவணபூர்ணிமையில் உபாகரணம் செய்து தைமீ பௌர்ணமியில் அத்யயனோத்ஸர்ஜநத்தைச் செய்துவிட வேண்டியது. ரிக்வேதிகள் ச்ரவணநக்ஷத்ரத்திலும் ஸாமகர் இம்மாத ஹஸ்தநக்ஷத்ரத்திலும் உபாகர்மத்தைச் செய்யவேண்டும். உபாகரணத்தை அபரான்ஹத்திலும் உத்ஸர்ஜனத்தை பூர்வான்ஹத்திலும் செய்ய வேண்டும். (இக்காலங்களில் தர்ப்பங்களால் ரிஷிகளைச் செய்து பூஜிக்கவும். பூர்ணிமை ஸங்கவாந்த ஸ்பர்சியாயிருக்க வேண்டும். க்ருஹஸ்ததர்ம மத்தியில் உபாகர்மப் படிக்கப் பட்டிருப்பதால் இது க்ருஹஸ்தர்களுக்கும் உத்தேசமாகும். க்ருஹஸ்த, வானப்ரஸ்தர்களுக்கு ஒவ்வொரு உபவீதத்திற்கும் ஆசமனமும் மந்த்ரமும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஈரவஸ்த்ரத்துடன் செய்யும் கர்மம் யாவும் ஆஸுரமாகும். உபாகர்மத்தில் புதிதாயிருந்தாலும் உபவீதம், கடிஸூத்ரம் வஸ்த்ரம் மௌஞ்ஜீக்களைப் புதிதாய் தரிக்கவேண்டும். தண்டம், மேகலை, க்ருஷ்ணாஜிநங்களும்

புதிதாய்த்தான் தரிக்கவேண்டும். ப்ரஜாபதி முதலானவர்களுக்குமும் மூன்று தடவை திலோதகம் விடவேண்டும்.

## அநத்யாய ப்ரகரணம்

உபாகர்மம் கழித்து மூன்றுநாள் அத்யயனம் செய்யக்கூடாது. ப்ரதமை, சதுர்த்தசி, அஷ்டமீ, இருபர்வங்கள், அனத்யயனத்திற்கு முந்தின ராத்ரிகளும் அனத்யயனங்களாகும். வேதம், சிஷ்யன், குருக்களையும் இவை முறையே நாசஞ் செய்கின்றன. ஸாமகானம், சூத்ரன், சவம், ச்மசான ஸமீத்திலும், அசுத்த ப்ரதேசத்திலும், தான் அசுத்தனுயிருக்கும் பொழுதும், ஸந்த்யாகாலங்கள், நடுநிசி வண்டி ப்ரயாணங்களிலும் கூடாது. ச்ராத்த போஜனம் ச்ராத்தப்ரதிக்ரஹம். சவமுள்ளக்ராமம், ப்ரேதமுள்ள நகர வீதி, அதார்மிகரின் எதிரில், ரோதன சப்தத்தில், ஜனக்கூட்டம, ஜலம், படுத்தும், பாதத்தில் பாதத்தை வைத்துக்கொண்டும், ஸூதகான்னம் சாப்பிட்டும் (ஸீமந்தாதி) மைதுனவஸ்த்ரந் தரித்தும், ச்ராத்தஸம்பந்த வஸ்து ப்ரதிக்ரஹம், (ப்ராஹ்மணனுக்குக்கையே முகமானதால் ப்ரதிக்ரஹமே போஜனமாம்) விவாதங்களிலும் அத்யயனங்கூடாது. ரிக், யஜுஸ், ஸாமங்கள் முறையே தேவ மநுஷ்ய, பித்ருக்களுடையதாகும். குரு சிஷ்யர் நடுவில் பசு பூனை, தவளை, நாய், பாம்பு, கீரி, எலி ஏதாவது குறுக்கே போனால் ஒரு நாள் அனத்யயனம். அயனம், விஷுவம், 4யுகாதிகள், 12மன்வாதிகள், சயன உத்தான த்வாதிசிக்கள், ச்ரவணத்வாதசி, மஹாபரணி, அக்ஷயத்ரிதீயை, ரதஸப்தமி, மஹா நவமிகள் அனத்யயனமாகும். ஸந்த்யாகாலமென்பது மூன்று நாழிகை. த்ரயோதசி ராத்ரியுள்ள ஆரம்பத்தில் ஒரு யாமம் ப்ரதோஷமாகும். விவேகி அப்பொழுது மௌநியாயிருக்க வேண்டும். அப்பொழுது போஜனம், மைதுனம், ப்ரயாணம், அப்யஞ்

ஜனம், விஷ்ணு தர்சனம் சுபகார்யங்களைச் செய்யக்கூடாது. அனத்யயனகாலத்தில் அத்யயனம் செய்பவனின் ஆயுளை யமன் அபஹரித்துவிடுவதாய் வாக்குறுதி செய்திருக்கிருன்.

## தாநம்

தைத்ரீயோபநிஷத் உத்கோஷிப்பதாவது:-- தானமானது மிகவும் சிறந்தது. தாதாவை அண்டி உலகில் ப்ராணிகள் பிழைக்கின்றனர். அதால் சத்ருக்கள் மித்ராராகின்றனர். பாவங்கள் தொலைகின்றன. யாசகன் ஸகல பாவங்களையும் போக்கக்கூடிய மஹானுயுமிருக்கலாம். ஆகையால் யதாசக்தி யாசகருக்கு இல்லையென்று சொல்லாது கொடுக்கவேண்டும். கீதையிலும், புண்ய தேசத்தில், புண்ய காலத்தில், ஸத்பாத்ரத்தில், உபகாரம் செய்யாதவனுக்கும் கொடுப்பதே ஸாத்விகம் என்றும், பல உத்தேசமாயோ, ப்ரத்யுபகாரத்தை அபேக்ஷித்தோ கொடுப்பது ராஜஸம் என்றும், மர்யாதையின்றி அஸத்துக்கோ, தேசகால நியமமின்றியோ கொடுக்கப்படுவது தாமஸமு மாகுமென்கிருர். சக்தியானுஸாரம் ப்ரதிதினம் தானம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியதற்கு நித்யம் என்றும், பாபக்ஷயார்த்தம் ஸத்பாத்ர விநியோகம் செய்வது நைமித்திகம் என்றும் விசேஷ பல உத்தேசமானது காம்யம் என்றும், பகவத்ப்ரீத்யர்த்தமாய் ப்ருஹ்மவித்துக்களுக்கு ஸமர்ப்பித்தல் விமலம் என்றும் சொல்லப்படும். இது மங்களமானது. ஸாத்விகதான பலத்தை தேவத்தன்மையிலும், ராஜஸத்தை மனுஷ்ய ஜந்மத்திலும், தாமஸத்தை திர்யக் தன்மையிலும் அனுபவிக்கிருன். முன்ஜன்மத்தில் யாசகருக்கு நாஸ்தி, நாஸ்தி யென்று சொன்ன தோஷமே இஜ்ஜன்மத்தில் தேஹி, தேஹி, யென்றுயாசிக்கிருன். யாகம் பொய்சொல்வதினுலும், தவம் கர்வத்தினுலும், ஆயுஸ் ப்ராஹ்மணநிந்தையாலும், தானம்

சொல்லிக் கொள்வதினாலும் குறைந்து விடுகிறது. வேத மறியாதவன், பைடாலவ்ரதிகன், பகவ்ரதிகன், மார்ஜார வ்ரதிகன் இவர்களுக்குக் கொடுக்கும் ஜலங்கூட நீரில் கல் தெப்பலில் ஏறினவன் அதோடு மூழ்கி விடுவதுபோல் தாதா, ப்ரதிக்ரஹீதா இருவர்களையும் நரகமடைவிக்கிறது. வைதிகவேஷம் போட்டுக் கொண்டு கபடத்தினாலும், பணத்தாசை பிடித்துத் திரிந்து கொண்டு லோகத்தை வஞ்சிக்கும் காதகர்களே இவர்களாவர். கோவின் கொம்புகளை ஸ்வர்ணத்தினாலும், குளம்புகளை வெள்ளியினாலும், அதன் இளங்கன்றுகளுடன் பாத்ரம், தக்ஷிணைகளுடன் தானம் செய்பவன் விசேஷஸ்வர்க்க பலனை அடைகிறான். பசு மலடாயிருக்கக் கூடாது. காராம்பசு விசேஷமாகும். ச்ரமப்பட்டவனை உபசரித்தல், ரோகிகளுக்கு பகரித்தல், ப்ராஹ்மணர்களின் உச்சிஷ்டத்தை சுத்தி செய்தல்கள் கோதாநபலதுல்ய மாகும். கோ, பூ, அன்னம், வஸ்த்ரம், கன்யா, ஸ்வர்ணம், க்ருஹம், தான்யம், அபயம், குளம்வெட்டல், தண்ணீர்ப்பந்தல், திலம் முதலியன விசேஷ தானங்களைச் சேரும். மாதா, பிதா, குருக்களுக்கு புண்யத்தை தானம் செய்யலாம். பாபத்தைக் கூடாது. செய்தால் இவனுக்கு விசேஷபாவங்கள் ஏற்பட்டு விடுகிறது. ஒன்றை ப்ரதிக்ரஹிப்பதில் விசேஷ பாவமிருக்கிறது என்று தெரிந்து கொண்டே வாங்கிக் கொள்ளுபவன் மஹாபாபியாகிறான். தன் வீட்டில் எது விசேஷமாயிருக்கிறதோ அதை குணமுள்ளவனுக்கு தானம் செய்யவேண்டும். தன்னிடம் ஒருகவளம் அன்னமிருந்தாலும் யாசிப்பவனுக்குப் பாதி கொடுத்துவிட வேண்டும். தனக்கு எது ப்ராணன் போல் ப்ரியமாயிருக்கிறதோ அதைக் கொடுப்பதே தானமாகும். வேதத்தைச சொல்லி வைப்பவன் விசேஷ தாதாவாகிறான். அதே மாதிரி ஆத்ம வித்தையை போதிப்பவனே எல்லாதாதாக்

ளைக் காட்டிலும் உத்க்ருஷ்டனுகிருன். அக்னியினிட மிருந்து ஸ்வர்ணமும், விஷ்ணுவினிடமிருந்து பூமியும், ஸூர்யனின் புத்ரர் கோக்களுமாதலால் இம் மூன்றையுந் தானம் செய்தவன் த்ரிலோகங்களையுமே தானம் செய்தவ னுகிருன். தானத்துள் அன்னதானமும் சிறந்ததாகும். தேவாலயம் ப்ராஹ்மணர்க்ருஹம், நாற்சந்திகளில் தீபம் வைப்பவன் ஜ்ஞான வானுகிருன். அக்ஞ னிகளுக்கு தத்வோபதேசம் செய்வதால் மோக்ஷமே ப்ராப்தமாய் விடுகிறது. கீதையிலும் எங்கள் (க்ருஷ்ணார்ஜுனர்) ஸம் வாதமான இத்தத்வத்தைப் படிப்பனுக்கே பகவத் ப்ரீதி யுண்டாகும் என்கிறபோது பரோபதேசத்தில் விசேஷ பலனை வாய்விட்டுச் சொல்லவேண்டியதில்லை. பயந்த வனுக்கு அபயப்ரதான தானம் விசேஷ தக்ஷிணைகளுடன் கூடின மஹாயஜ்ஞங்களுக்கும் சிறந்ததாகிறது. அன்னம் வித்தை, கந்நிகை இவைகளை யாசிப்பவர்களுக்குத் தான் கொடுக்க வேண்டும். ஒப்புக்கொண்டு கொடாவிடி லும், கொடுத்ததை அபஹரிப்பதிலும் தன் ஜன்மப்ரப்ருதி ஸம்பாதித்த தானபுண்யம் முழுவதையும் தொலைத்து விடுகிறது. பக்தி, ச்ரத்தை ஆதரவு, ப்ரீதிகள் தானங் களுக்கு வ்ருத்தி, க்ஷயங்களே தவிர தாநவஸ்துவின் ஆதிக்யம், குறைவுகள் காரணமாகா. தாதா, ப்ரதிக்ர ஹீதா, காலம், தேசம், ச்ரத்தை, தர்மத்தோடு கூடின தானவஸ்துக்களே தான ஷடங்கங்களாகும். ஜலபூர்வக மாய் தானம் செய்யவேண்டும். ஆசார்யன், மாத்ருபித்ரு ரக்ஷணம், விவாஹம், யாகம், முதலியன யாசக ஹேதுக் களாகும். கொடாவிடினும் தோஷமுண்டு. போகார்த்த யாசகம் யாசகமாகாது. கொடுப்பதாய் ப்ரதிஜ்ஞை செய் திருந்தாலும் அதர்ம விஷயத்தில் கொடுக்கக் கூடாது. பாலன், வ்ருத்தன், மூடன், பித்தன், கோபிஷ்டி, பயந்த வன், ச்ரமத்திலிருப்பவன், முதிலியோர் விஷயங்களில்

வாக்கை மீறலாம் ஸத்பாத்ரம் ப்ராப்தமாயிருக்கும் பொழுதே தானத்தைச் செய்துவிட வேண்டும். தன்குடும்பக் கஷ்டத்தையும் கவனியாது ப்ராஹ்மணனுக்குபகரிக்க வேண்டும். ஸாளக்ராம சிலையை தக்ஷிணையுடன் வைஷ்ணவனுக்கு தானம் செய்பவன் பூதான பலனை அடைகிறான். சிவலிங்க தான பலனுமிப்படியே. க்ருஹ தானத்திற்கும் விசேஷ பலனுண்டு. ஆஜ்யமும் சிறந்த தானமாகும். சேற்றினின்று பசுவையும், ஊழியத்தினின்று ப்ராஹ்மணஸ்த்ரீயையும், பிழைப்பில்லாமை, கொலை இவைகளினின்று ப்ராஹ்மணனையும் விடுவிப்பவன் தன் ஜந்ம ப்ரப்ருதி செய்திருக்கும் ஸகல பாவங்களினின்றும் விடுபடுகிறான். அநாதப்ரேதஸம்ஸ்காரம், பூஜையின்றி கிடக்கும் பிம்பத்திற்குப பூஜை, ஏழை குருடர்களுக்குச் செய்யும் தானம் அச்வமேதத்திற்குத் துல்யமாம், ஸர்வபாவங்களையும் போக்கி விடுகிறது. தாம்ர பாத்ரத்தில் நெய்வைத்து அதில் தன் சாயையைப் பார்த்து அதை ப்ராஹ்மணனுக்கு தானம் செய்பவன் ஸகல பாவங்களினின்றும் விடுபடுகிறான். அஸத்தினிடமிருந்து வாங்கி ஸத்துக்களுக்கு விநியோகிப்பவன் தன்னையும், தனிகனையும் பாவங்களினின்று விடுவித்துக் கொள்ளுகிறான்.

## தான மந்த்ரங்களால் இச்சிக்கப்படும் பலன்கள்

கன்னிகையால் ப்ருஹ்ம லோகம், நாராயண பிம்பத்தால் மஹாரோக நிவாரணம்; உமாமஹேச்வர பிம்பத்தால் ஸர்வமங்களம், அன்னத்தால் பாபநாசம், தன்நிழலைப் பார்த்த நெய்யால் அலக்ஷ்மீகர நாசம், அன்னத்தால் ப்ராண தாரணம், தாம்பூலத்தால் (பாக்கு, இலை, சுண்ணாம்புகள் ப்ருஹ்ம, விஷ்ணு ருத்ரஸ்வரூபங்கள்) ஸம்பத், நிலத்தால் பாபநாசம், வெல்லத்தால் ஸம்பத்துக்களும் ப்ரார்த்திக்கப் படுகின்றன. மற்ற தானங்களால்

பாபநாசமே உத்தேசமாகும். கோ, பூ, திலம், ஹிரண்யம், ஆஜ்யம், வஸ்த்ரம், தான்யம், குடம் (வெல்லம்) வெள்ளி, லவணங்கள் தசதானமாம். பத்னீ, புத்ரர் தவிரமற்ற ஸர்வமும் தன் குடும்பத்திற்கு பாதகமின்றி தானம் செய்யலாம். ஒருவனுக்கு வாக்களித்ததை மற்றொருவனுக்குக் கொடுக்கக் கூடாது. ஸந்த்யா காலத்தில் தானம், ப்ரதிக்ரஹம், ஆஹாரம் மைதுநம், நித்ரை, அத்யயனங்களைச் செய்யக்கூடாது. அயனம், விஷுவம், யுகாதி, வ்யதீபாதம், திநக்ஷயம், அமா, த்வாதசி, க்ரஹணம், ஸங்க்ரமண மந்வாதிகள் புண்ய காலங்களாகும். ஆலயம் நதிதீரம், அந்தந்தமாஸங்களில் பூர்ணிமை கூடின புண்ய காலங்களில் ஜபம், ஹோமம், ப்ராஹ்மண போஜனம், உபவாஸம், தானங்கள் பரிசுத்திகரமாகும். ஒரே தினத்தில் இருதிதிகள் முடிவதே திநக்ஷயமாம். இத் தினத்தில் செய்யப்படும் ஜபம் ஹோமம், தானத்திற் களவற்ற பலன். ப்ருஹ்மசாரிக்குத் தாம்பூலம், ஸந்யாஸிக்கு ஸ்வர்ண தானத்தால் தாதா நரக மடைகிறான். கொடுப்பவனைத் தடுப்பவன், ஆசைகாட்டி மோசம் செய்பவன், தன் தானத்தைப் புகழ்ந்து கொள்பவர் மஹாபாபிகளாவர். ஸங்கல்பித்துக்கொடுபடா தானத்தை ஒரு மாஸம் கழித்துக்கொடுத்தால் நூறுமடங்கு சேர்த்துக் கொடுக்க வேண்டும். வருஷமானல் ஆயிரம்மடங்கு அதிகரித்துவிடும். ஒரு நாள் தவறி மறுநாளானலும் இருமடங்காய்விடும். வருஷத்திற்கு மேற்பட்டால் தாதாவிற்கு நரகம். இஹத்திலோ பரத்திலோ அவனவன் கொடுத்து வைத்ததை அனுபவிக்கிறானே யொழிய கொடாததை ஈஷத்தும் அனுபவிக்க முடியாது என்கிறார் வால்மீகி. ப்ராஹ்மணனுக்கு உத்தேசித்து தானம் செய்ததை அவனில்லாவிடில் அவன் புத்ரன், பந்து சிஷ்யன், ஸஜாதியன், ஜலம் இந்த அவரோஹணக்ரமத்தில் பார்த்

துக் கொடுக்கவேண்டும். ஜ்யேஷ்ட புத்ரனையோ, ஏக புத்ரனையோ கொடுக்கவோ ஸ்வீகரிக்கவோ கூடாது. ஸ்வீகாரம் செய்து கொள்பவன் தன் பந்துமித்ரருடன் வீட்டு மத்தியில் வ்யாஹ்ருதிகளால் ஹோமம் செய்து ஸமீப பந்துவாயும் ஸமீப மத்தியிலிருப்பவனுமான புத்ரனையே ஸ்வீகரிக்க வேண்டும்.

## தான பாத்ர நிர்ணயம்

வித்தை, தபஸ் இரண்டுமுள்ள அனுஷ்டாதாவே தானத்திற்குப் பாத்திரமாவன். ஒன்றின்றி மற்றொன்றிருப்பது ப்ரயோஜனப்படாது.

வேதத்தில் ப்ராஹ்மணர்களை யோக்யாதா தாரதம்மியப்படி மாத்திரன், பிராம்ஹணன், ச்ரோத்ரியன், அனூசானன், ப்ரூணன், ரிஷிகல்பன், ரிஷி, முனி என எட்டு விதமாய்ப் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது. முந்தியை விடப்பிந்தியது ஒவ்வொன்றும் ஒவ்வொரு படி மேலாயிருக்கிறது.

பிராம்ஹண குலத்திற் பிறந்து உபநயனமாகாதவன் **மாத்திரன்** எனப்படுவான்.

வேதமோதி ஸதாசாரம், தயை, ஸத்தியம் இவைகளுடன் கூடி ருஜுவாயிருப்பவன் (தப்பு வழிக்குப் போகாதவன்) **பிராஹ்மணன்** எனப் பெயர் பெறுவான்.

வேதத்தின் ஓர் சாகாயைக் கல்பத்துடனுவது, அல்லது ஆறு அங்கங்களுடனுவது படித்து தர்மத்தை யறிந்தும், யஜனயாஜனம் முதலிய கர்மங்களை விடாதிருப்பவன் **ச்ரோத்ரியன்** என்று சொல்லப்படுவான். ஜன்மத்தால் **பிராஹ்மணன்** என்றும், ஸம்ஸ்காரத்தால் **த்விஜன்** என்றும், வித்தையால் **விப்ரன்** என்றும் பெயர் பெறுவார்கள். ஜன்மம், ஸம்ஸ்காரம் வித்தை இம்மூன்று

முள்ளவன் **ச்ரோத்ரியன்** எனப் பெயர் பெறுவான்.

ச்ரோத்திரியனுக்குள்ள லக்ஷணத்தோடு வேதம், வேதாங்கம் இவைகளின் தத்துவமறிந்து, சுத்தாத்மாவாய், பாபமற்றிருப்பவன் **அநூசானன்** எனப்படுவான்.

தயை, யாகம், வேதம், இவற்றுள் ஸதா ஊக்கத்துடன் அனுஷ்டிப்பவனும், ஜிதேந்திரியனும், தேவ பித்ரு அதிசேஷ போஜனம் செய்பவனுமானவன் **ப்ரூணனும்.**

வைதிக லௌகிக எல்லா ஸங்கதிகளையு மறிந்தவனும், ஆச்ரம தர்மத்தை விடாதவனும் **ரிஷிகல்பன்.** எனப் படுவான்.

ஊர்த்துவரேதஸையுடையவனும், தபஸும் விடாதிருந்து, நியமத்துடன் புசிப்பவனும், சாபானுக்ரஹ சக்தியுடையவனும், ஸத்திய ஸந்தனுயு மிருப்பவன் **ரிஷி** எனப் படுவான்.

விரக்தியாய், எல்லா தத்துவமறிந்தும், ஜிதேந்திரனாய் தியான நிஷ்டையிலிருப்பவன் **முனி** எனப்படுவான்.

கூட வஸிப்பதால் ஒருவனுடைய சீலமும், அவனுடைய நடவடிக்கைகளால் அவனது சௌசமும் அறிவு அவன் வார்த்தைகளாலும் தெரியுமாதலால் இம்மூன்றினாலும் பாத்திரத்தைப் பரீக்ஷித்தறியவேண்டும்.

வேதத்தின் சில பாகத்தை அத்யயனம் செய்தவன் பிராம்ஹணனாவன். ஓர் சாகை, அங்கங்கள், கல்பம், ஸூத்திரம், அடிக்கடி இவைகளைச் சொல்லிக்கொண்டிருந்தாலும் முறையே ச்ரோத்ரியன், அநூசானன், ரிஷி கல்பன், ப்ரூணன் எனப் பெயர் பெறுவார்கள்.

பிராம்ஹணனில்லாதவனிடம் கொடுப்பது ஸமனாகவும், பிராம்ஹணனிடம் கொடுப்பது ஒன்று இரண்டு மடங்

காகவும், நன்றாய் அத்யயனஞ் செய்தவனிடத்திற் கொடுப்பது நூறாயிரம் மடங்கு அதிகமாகவும், வேதத்தைக் கரை கண்டவனிடத்திற் கொடுப்பது கணக்கில்லாத பலனையும் அளிக்கும். உபத்ரவம் செய்தாலும் அதற்கும் இக்கணக்கிலேயே தீமைப்பலன் உண்டாகும்.

வேதத்தைக் கல்பம், ரஹஸ்யம் இவைகளுடன் அறிந்தவன் **வேதபாரகன்** எனப்படுவான்.

ச்ரோத்ரியனுக்குக் கொடுக்குந் தானம் ஆயிரம் மடங்கும், ஆசார்யனுக்குக் கொடுப்பது இரண்டாயிரம் மடங்கும், ஆத்மஜ்ஞானிக்குக் கொடுப்பது நூறாயிரம் மடங்கும், அக்னிஹோத்ரிக்குக் கொடுக்குந் தானம் அநந்தமாயும் பலனைக் கொடுக்கும். முதல் முதலில் குருவுக்கும், பிறகு சிஷ்டர்களுக்கும் பிறகு பாத்திரத்தை யனுஸரித்து தானம் செய்யவேண்டும். குருவில்லாவிட்டால் அவரைச் சேர்ந்த பத்னீ, பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும். இவர்களை விட்டு மற்றவர்களுக்குக் கொடுப்பானாயின் அதோகதி யடைவான்.

தபஸ்வி, அக்னிஹோத்ரீ முதலியவர் ஒருவரிடத்தில் கடன்பட்டு அக்கடனைக் கொடுக்கச் சக்தியில்லாமல் இறந்தால் அவர்களது தபஸ், அக்னிஹோத்ர பலன் யாவும் கடன் கொடுத்தவர் பணத்திற்குப் பதிலாய்ச் சேர்ந்து விடும்.

தனக்கு ஸமீபத்தில் இருக்கும் வேத சாஸ்திரம் படித்தப் பிராஹ்மணனை விட்டு விட்டு வேறு ஒருவனை ப்ராம்ஹணார்த்தம், தானம் இவைகளுக்கு அழைப்பானாகில் அவனுக்கு மட்டுமின்றி அவன் பின்னேழு ஸந்ததிகளுக்கும் பாவந் தொடரும். தாதா நூறு கழுதைப் பிறப்பை யடைகிறான். தங்களுக்குப் பரம்பரையாயுள்ள குருவை விட்டு விட்டு வேறொரு குருவிடம் பக்தி செய்வானாகில் அவன்

அதோகதி யடைவான்.

வெளியூருக்குச் சென்றிருக்கிற ஒருவனுக்குத் தானம் கொடுக்க வேண்டியிருந்தால் விஷ்ணுவை ஸ்மரித்துமான ஸீகமாய் ஜலத்தைக் கொண்டு (தத்தம் செய்து) விடலாம்.

தன் தனத்தை பாத்திரத்தில் விநியோகப் படுத் தாததும், அபாத்திரத்தில் (தகாதவர்களுக்கு) கொடுத் தலுமே பணத்திற்கு இருவித அனர்த்தங்களாம்.

மூர்க்கன் ஸமீபத்திலும், படித்தவன் வெகு தூரத் திலுமிருந்தால் மூர்க்கனை நிராஹரித்துப் படித்தவனுக்கே கொடுக்க வேண்டும். தவறிச் செய்வது ஜ்வலிக்கும் அக்னியை விட்டுச் சாம்பலில் ஆஹுதி செய்வது போல் வீணாகும். இதில் ப்ராம்ஹணாதிக்ரமதோஷமேற்படாது. சிஷ்டரை ப்ரதீக்ஷித்திருந்துகொண்டு வந்த பிறகே தானம் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும்.

## அபாத்திர நிர்ணயம்

தேவாலய பிண்டத்தைப் புஜித்து வளருபவன் **தேவஜீவன்** என்கிற தேவலகனுவன். இவனே முதல் முத லான அபாத்ரம். கடும் வட்டியால் பிழைப்பவனுக்கும், வியாபாரம் செய்து பிழைப்பவனுக்கும், அபாத்திரத்தில் தானம் செய்பவனுக்கும், ஸத் விஷயத்தில் செலவு பண் ணாத லோபிக்கும், ஆசாரமில்லாதவர்களுக்கும், யுக்தியால் நாஸ்திக வாதம் செய்பவனுக்கும், ஸந்ததி யில்லாதவனுக் கும், பஞ்சாங்கக்காரனுக்கும், நன்றியை உணராதவனுக்கும், பெண்டிர்க்கு உள்பட்டு நடப்பவனுக்கும், நபும்ஸகனுக்கும், நபும்ஸக நடத்தையுள்ளவனுக்கும், விஷ வைத்தியம் செய் பவனுக்கும், பிராம்ஹணதமனுக்கும், உபபதியை வீட்டி லுடையவனுக்கும், வ்ருஷலீபதிக்கும், பரிசாரகனுமாகிய

இப்பதினைறு பேர்களுக்கும் குடிக்கத் தண்ணீர் கூட கொடுப்பது கூடாது. குருவிடம் நல்லெண்ணமில்லாதவனுக்கும், சூத்திரனுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவனுக்கும் கூடாது. ஜோஸ்யர், திருடர், குண்டகோளர்கள், யாசகர், விகடகவிகள், பாடகர்கள், தள்ளுபடியானவர்களும் அபாத்திர கோஷ்டியிற் சேருவர். ஸ்வல்பவட்டிக்கு வாங்கி அதிக வட்டிக்கு விட்டுப் பிழைப்பவனும் வார்த்துஷிகனுவன். பிறரை தூஷித்துத் தன்னைப் புகழ்ந்து கொள்ளுபவனுக்கும் இப்பெயருண்டு.

எதற்கும் காரணம் காண்பான் ஹைதுகன் எனப்படும் ஹேதுவாதியாவன். கர்மத்தை விட்டவன் பாஷண்டியாவன். அவனோடு சேர்ந்திருப்பவனும் மஹாபாபியாவான்.

வேத வித்தையை ஸாமான்னியமாய் எண்ணுபவர் நாரதமரான பாஷண்டிகளாதலால் நரகத்தை யடைவார்கள். தகப்பன் வீட்டில் கலியாணம் பண்ணுமல் ருதுவாயிருக்கும் கன்னிகைக்கு வ்ருஷளீ என்றும், அவளைக் கலியாணம் செய்து கொள்ளுபவன் வ்ருஷளீபதியுமாவன்.

குருடு, செவிடு, ஊமை, ரோகி, நொண்டி முதலியவர்களைக் காப்பற்றுதல் அவசியமாகும். இதற்கும் விசேஷ பலனுண்டு.

அஸத் பாத்திர தானம் நிஷ்ப்ரயோஜநம் மாத்திரமின்றி தாதாவைப் பாபியாக்கி நரகத்திற் தள்ளி விடுகிறது. திருடர்களுக்கு உபசரிப்பவனும், ஸந்நியாஸிக்குப் பணம் கொடுப்பவனும், ப்ரம்ஹசாரிக்கு வெற்றிலை பாக்கு கொடுப்பவனும் நரகத்தை யடைகின்றனர். பாத்திராபாத்திரம் உணராமல் தானம் செய்பவனும் தான தர்ம பலன்களையடைகிறதில்லை. ஒருகல்லை மற்றோர்கல்லானது எப்படி ஆற்றை நீந்தித்தரணம் செய்விக்காதோ அப்படியே வேதமோதாதவன் ப்ரதிக்ரஹம் பெறின்

அவன் தாதாவின் பாவத்தைத் தொலைக்க அர்ஹனுகான். தானம் பலவத்தாகாது. பஸ்மாஹோமத்திக்கு ஸமானமாகும். சூத்திரனைப் படிப்பிப்பவனும் பதிதனுவன்; அக்னிஹோத்ரத்தையோ, ஔபாஸநத்தையோ, ஸந்தியாவந்தனத்தையோ, வேதாத்யயனத்தையோ விட்டவர் வ்ருஷலீயெனப்படுவார். பசு, வண்டி, பொன், வெள்ளி, பூமி, இவைகளே தானர்ஹ வஸ்துக்களாகும்.

### ப்ரதிக்ரஹ விஷயம்

வேதாதிகளான வித்தைகளை யறிந்தவனுயினும், ப்ரதிக்ரஹம் (தானம் பெறுதல்) செய்வதால் தேஜஸை யிழந்துவிடுவான். தபோபலம் க்ஷயிக்கும். ப்ரதிக்ரஹத்தைக் காட்டிலும் சிலம் ச்ரேஷ்டமாகும். பொது விடங்களிற் சிந்திக் கிடக்கும் நெல்லைப் பொறுக்கிப் பிழைத்தலே (ருதம்) சிலமாகும். வயலிற் சிதறிக் கிடக்கும் நெற்கதிர்களைப் பொறுக்கிப் பிழைத்தல் உஞ்ச மெனப்படும். இது தான் ப்ராம்ஹணனுக்கு தோஷமற்ற வ்ருத்தியாக மன்வாதிகள் ச்லாகித்து விதித்துளர். ப்ரதிக்ரஹம் செய்யாமலிருப்பவன் தாதாக்கள் அடையும் ஸத்லோகங்களை நிச்சயமாய் அடைகிறுன்.

நல்ல ச்ரோத்தியர்களான ப்ராம்ஹணர்களிடமிருந்து எதையாவது அடையலாம். அது அவ்வளவு தோஷமாகாது. தனக்கு எவ்வளவு கஷ்டம் நேர்ந்தாலும் சூத்திரனிடமிருந்து பெறுவது கூடவே கூடாததாகும். தன் குடும்ப ரக்ஷணத்திற்குமேல் ப்ரதிக்ரஹம் செய்வது மஹாதோஷமாகும். அரசனிடம் பெறுவதும் புண்ணிய தீர்த்தக் கரையில் பெறுவதும் மஹா தோஷமாகும்.

தயிர், பால், நெய், உப்பு, பசுக்கள், இவைகளை விற்பவரிடமிருந்தும் விடாது ப்ரம்ஹணார்த்தம் புசிப்பவரிடமிருந்தும், ப்ரதிக்ரஹம் கூடாது. முறையில்லாதவளை விவாஹம் செய்துக்கொண்டு புணர்கிறவன், புரோஹி

தன், வியாபாரி, சூத்திரன், அக்கினிஹோத்ரம் விட்டவர்களிடமிருந்தும் வாங்குவது கூடாது.

தன் ஜாதி, குல வித்தையால் பிழைக்கவேண்டும். யாசிக்காமல் கிடைப்பது க்ராஹ்யமாகும் சிஷ்யன், தனது முன்னோர், ஸத்கர்மம் செய்துவரும் பெரியோரிடமிருந்து பெறுவதும் கூடும்.

மூன்று நாள் பட்டினி கிடந்து நான்காம் நாளுக்கு சாப்பாட்டிற்கு வழியில்லாத பக்ஷத்தில் சூத்திரனிடம் ஏதேனும் பெற மநு அனுமதி கொடுக்கிறார். சூத்திரனிடமிருந்து களத்திற் பெறுவது அவ்வளவு தோஷமாகாது. அவனிடமிருந்து தான்யம், தயிர், நெய், பால், காய்களைப் பெறலாம். அதிதி, குருபூஜைக்காக யாசிக்கலாம். சாப்பிட இடமில்லாதிருக்க சற்று ஆசாரஹீனர் வீட்டிற் புசிப்பதால் தோஷமேற்படாது என மநு கூறுகிறார். யாராவது கொண்டுவந்து கொடுக்கும் பிக்ஷையை வேண்டியதில்லை யென்று தடுப்பவன் வீட்டில் பதினைந்து வருஷ காலம் பித்ருக்களும் அக்னி பகவானும் எதையுங் க்ரஹிப்பதில்லை. ஹவ்யகவ்யங்கள் யாவும் வீணேயாகின்றன.

## துர்த்தானஸ்வரூபம்

பெண்ணாடு, எருமை, நெய், கன்றையுடைய பசு, கிருஷ்ணாஜினம், யானை, காலபுருஷன், எள்ளின் குவியல், அநேகமான ஆடுகள், குதிரை, ஒருவன் இறந்தமுதல்மாஸிகத்தில் தானம் ஆகிய இவைகளே துர்த்தானங்களெனப் படும். இத்தானத்தை வாங்குபவரின் முகத்தை தாதா பார்க்காமல் அவர் போகும் வரையிற் கண்களை மூடிக் கொண்டிருக்கவேண்டும். கிருஷ்ணாஜினம், சிரோதயமான கன்றையுடைய பெண்ணாடு, ஊழியஞ் செய்பவள் இவர்களை தானம் வாங்குகிறவன் மறுபடியும் புருஷனாகவே பிறக்க மாட்டான். பிரேதான்னம், பிரேதப்படுக்கை, நக்ன சிரார்த்தத்திற்குரிய வஸ்த்ரம், உத்க்ராந்தி கோதானம், கால

புருஷன் ஆகிய இவைகளை வாங்குபவனும் அடுத்த ஜன்மத்தில் புருஷனாகப் பிறக்கமாட்டான். காலன், எருமை நெய் ஏகோத்திஷ்டம் இவைகளை வாங்குபவன் முகத்தை தாதாவானவன் ஆறு மாதத்திற்குள் பார்ப்பானாயின் தான் செய்த புண்ணியத்தை இழந்துவிடுவான். ஸந்நியாஸி தானம் வாங்குவானாயின் பதிதனாய்விடுவான். யதியின் தனமென்று தெரிந்து அவர் கையிலிருந்து தானம் வாங்குபவன் இருபத்தியேழு தலைமுறை நரகத்தில் வீழ்த்தப்படுவான். வித்தை, தபஸ் இல்லாதவனுக்குத் தானம் கொடுப்பது இருவருக்குமே நரக ப்ராப்தியாகிறது. திரவியத்தின் தேவதை, தான மந்த்ரம், இவைகளைத் தெரியாதவன் தானம் வாங்கக்கூடாது. பொன், பூமி, குதிரை, பசு, அன்னம், வஸ்த்ரம், எள், நெய் ஆகிய இவைகளை வித்தையில்லாதவனுக்குக் கொடுக்கவே கூடாது. இவைகளை வித்தையில்லாதவன் ப்ரதிக்ரஹம் செய்தால் அவனது ஆயுள், சரீரம், சிசு இவைகளை நசிப்பித்துவிடும். நீந்தத் தெரியாதவனை நடுக்குளத்தில் வீழ்த்தினால் எப்படி குளத்தில் விடுபவனையும் சேர்த்திழுத்துவிடுவானோ அதுபோல் இருவரும் கெடுகின்றனர். ஆகையால் யோக்யதை யில்லாதவன் துணிந்து தானம் வாங்கக்கூடாது. சேற்றிலழுந்திய பசுவைப் போல் வருத்தமடைவான்.

காட்டிலிருக்கும் பழம், கிழங்கு, அக்னிஹோத்திரத்திற்கு விறகு, பசுவிற்குப் புல் இவைகளை உத்தரவின்றிக் கொண்டு வருதல் திருடாகாது. வழி நடந்த ச்ரமத்தால் பசிக்காக ஒருவன் தோட்டம், கழனிகளில் இருப்பதைப் பிடுங்கித் தின்பவன் திருடனாக மாட்டான். அவனைத் தண்டிக்கக்கூடாது. இதையே சூத்திரன் செய்வானாயின் அவனை தண்டித்துவிட வேண்டியது என்று மநு கடுமையாய்க் கூறுகிறார். தானம் வாங்குவதால் தவத்தின் பலன் போய்விடுகிறது. ஜபஹோமங்களே ப்ராயச்சித்த மாகும். மறுபடியும் தபோ பலத்தைப்

புதிதாய் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். பிராணன் போகும் ஸமயத்தில் பிராம்ஹணன் சண்டாளனிடத்திலிருந்தாவது வாங்கியுண்டு பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளுவது தோஷமாகாது. பிழைத்திருந்தால்தான் தவம் செய்யமுடியும். எப்பாவத்தையும் துலைத்துக் கொள்ளலாம்.

## பிராம்ஹணனுடைய இதர வ்ருத்திகள்

சில உஞ்சங்கள் ருதமாகும். யாசிக்காமற் கிடைப்பதைக் கொண்டு பிழைப்பது அமிர்தமாகும். க்ருஷி செய்வதே ம்ருதமாகும். வியாபாரம் செய்வது ஸத்யான்ருதம் ஆகும். இதுவும் குற்ற மாகாது. ஸேவை செய்துபிழைப்பது நாய் பிழைப்பானதால் அது கூடவே கூடாது. முந்திய வ்ருத்தி கிடைக்காவிட்டால் பிந்தியது பாதகமாகாது.

பால் விக்கிரியம் செய்வானாயின் மூன்று நாளைக்குள் பிராம்ஹணத் தன்மையை யிழந்துவிடுகிறான். தானமாய்க் கிடைத்த கோவை விற்பானாயின் அது அவன் ஏழு தலைமுறையை நாசஞ் செய்துவிடும். அப்பசுவிற்கு எத்தனை ரோமங்கள் இருக்கின்றனவோ அத்தினை வருஷம் நரகத்திற் கிடப்பான். எள்ளை தானம், எண்ணை, ஹோமங்களுக்குத் தவிர வேறெதற்காவது உபயோகிக்கிறவன் பெரும் பாவியாகி நாயின் மலத்திற் புழுவாய்ப் பிறப்பான். அதை விற்கக் கூடாது. விற்பவன் தன் பித்ருக்களை விற்றவனாகிறான். அரிசி விக்கிரியம் செய்பவனும் அவ்வாறே செய்தவனாகிறான். எள் விக்கிரியத்தில் எவ்வளவு பாவமிருக்கிறதோ அவ்வளவு நெய் வியாபாரத்திலும் இருக்கிறது. உப்பையும் விற்கக்கூடாது. எள் முதலியவற்றை (பரிவர்த்தனம்) பண்டம் மாற்றிக்கொள்ளலாம். பசு முதலிய ஜீவஜந்துக்களை விற்றால் வாங்குகிறவன் ஹிம்ஸை செய்யக் கூடுமாதலால் அவைகளை விற்கவே கூடாதாம். அன்ன விக்ரியமும் மஹாதோஷமாகும்.

தெரியாத விற்கக்கூடாதவைகளை விற்றுவிட்டவனுக்கு சாந்த்ராயணமே ப்ராயச்சித்தமாகும். தயிர், மோர், எண்ணை, கறிகாய், வாஸனை திரவ்யங்கள், புளி, முதலியவும் விற்பது கூடாதாம்.

ஏருக்குபயோகப்படுத்த வேண்டிய காளை பல்படாக் கன்றாயும், பல்போனகிழமாயும், பலமில்லாமலிளைத்தும், அங்கப்பழுதுள்ளதாயிருப்பதுங் கூடதாம். அவைகளை முன் பகலில் மட்டும் கட்டிவுழுதுப் பிறகு அவச்யம் குளிப்பாட்ட வேண்டும். க்ருஷியில் பூமியை உழுங்கால் அநேக புழுக்கள் சாவதால் ப்ராம்ஹணன் வேடன், செம்படவன் எவ்வளவு தோஷம் ஒரு வருஷத்தில் அடைகின்றனரோ அவ்வளவு அடைந்துவிடுகிறான். அதற்காக களயஜ்ஞம், அதாவது களத்தில் வருபவருக்குப் பிச்சையிடுவதையும், ஆறிலொரு பங்கை யாசகனுக்கும், இருபதிலொரு பங்கை தேவதைக்கும், முப்பதிலொரு பங்கை ப்ராம்ஹணருக்கும் கொடுத்து பாவத்தைப் பரிஹரித்துக் கொள்ளக் கடவன். 'அம்பாரத்தண்டை (நெல்லுப் பொலி) வந்து யாசிக்கும் ப்ராம்ஹணனுக்குக் கொடாதவன் திருடனும், ப்ராம்ஹக்நனும், பெரும் பாவியுமாகி சாதுக்களாலும் நிந்திக்கப்படுகிறான். அவன் ஒன்றுக்கு முதவாத மரத்தண்டை சோற்றுக்கில்லாமல் நோயுடன் கஷ்டப்பட்டு மூர்க்கனாய் தேவ வருஷத்தில் நூறு வருஷம் கிடந்துழல்வான்.

## சூத்ர தர்மம்

ஸத்சூத்திரன் என்றும் அஸத்சூத்திரன் என்றும் சூத்திரர் இருவித மாவர். காராம்பசுவின் பாலைக் குடிப்பதாலும், ப்ராம்ஹண ஸ்த்ரீயைப் புணர்வதாலும், வேதார்த்தத்தை விசாரிப்பதாலும் சூத்திரன் உடனே சண்டாளனாகிறான். பகவக்கீதையிற்பகவான் அர்ஜுநனுக்குத் தாமே ஜாதிகளை ஏற்படுத்தி அவரவர்கள் கர்மா

நுஸாரமாய் அந்தந்த ஜாதியிற் பிறப்பித்திருப்பதாயும் சூத்ரர்களுக்கு த்விஜர்களுக்கு ஊழியம் செய்வதே மோக்ஷோபாயமாகும் என்றும் உபதேசித்தார். மனுவும் அப்படியேதான் அபிப்ராயப்படுகிறார். அப்படிச் செய்யாதவன் அற்பாயுளாயிருந்து நரகத்தை யடைகிறன். இவன் பிராம்ஹணனை அண்டியவன் என்னும் சொல் அவனுக்கு மிக க்ஷேமத்தை விளைவிக்கும். தன்னை யண்டியவனுக்குப் பிராம்ஹணன் சாப்பிட்டு பாத்திரத்திலிருக்கும் பாக்கிச் சோற்றையும், பழய வஸ்திரத்தையும், சாரமற்ற தான்யத்தையும் கொடுக்கவேண்டும் என மனுவும் கூறுகிறார். ஸத்சூத்திரன் ஸ்நானம் செய்யலாம். அஸத்சூத்திரன் கை கால்களை மட்டும் கழுவிக்கொள்ள வேண்டும். இவ்விருவரும் ச்ராத்தம், அமாவாசை இவ்விரு தினங்களிலும் மந்திரமின்றி (ஆமசிராத்தம்) அதாவது காய், கறி, அரிசிகளை வைத்துச் சிராத்தஞ் செய்யலாம். கீழ் வர்ணத்தார் எந்த அங்கத்தால் பிராம்ஹணர்களுக்குக் குற்றஞ் செய்வாரோ அந்த அங்கத்தை வெட்டிவிட வேண்டும் என்பது மனுவிஞைஜ்ஞை. அவனுக்கு வித்தையைச் சொல்லிக் கொடுப்பதும், தர்மோபதேசம் செய்வதும், விருதம் முதலியவைகளை யுபதேசிப்பதும் வக்தா ச்ரோதா இருவர்களுக்கும் அஸம்வ்ருதமென்றநரகத்தை ப்ராப்தமாக்குகிறது. வேதத்தை உற்றுக் கேட்டல், வணக்கமின்றிப்பேசுவது ஆஸனம்,படுக்கை, இவைகளில் பிராம்ஹணனுக்கு ஸரிஸமானமாயிருப்பானுயின் அவனைக் கொடுமையாகத் தண்டிக்க வேண்டும். சூத்திரான்னம் சூத்திரனது சேர்க்கை, சூத்திரனேடு ஒரே ஆஸனத்திலிருத்தல் அவனுல் ஜ்ஞானம் பெறல் இவைகளை அக்னிக்கு ஸமானமானவர் செய்தாலும் பாதித்யத்தை யடைவர். ஒரு நாள் முழுதும் சூத்திரனை அண்டிப் பிழைத்தப் பிராம்ஹணன் மூன்று வருஷம் தண்ணீரை மட்டுங் குடித்து வ்ருதமனுஷ்டிப்பானுயின் அப்பாவத்திலிருந்து

விடுபடுவான். லோகத்திலுள்ளவை யாவும் ப்ராம்ஹணனுக்கே உரியது. அதை அவர்கள் தங்கள் பந்துமித்ர, தாஸர்களுடன் அனுபவிக்கத் தடை யாதுமில்லை. அவர்களனுபவிப்பவை யாவும் அவர்களுடையதே யன்றி மற்றெவரதுமில்லை. இவர்கள் சாப்பிடுவதால் தேவதைகளும் பித்ருக்களும் ஹவ்யகவ்யங்களில் திருப்தியடைகின்றனர்.

## பிராம்ஹணர்கள் சிரேஷ்டர் என்பது

பிராம்ஹணன் ஸர்வ தேவதாஸ்வரூபி யென்று வேதமே சொல்லிவிட்டது. தன்னிஷ்ட தேவதையைப் பூஜித்து ஸந்தோஷம் செய்வித்துப் பலனையடைய விரும்புகிறவன் பிராம்ஹணரை ஸர்வ விதத்திலும் ஆராதிக்க வேண்டும். பிராம்ஹ தேவன் வெகு அருமையான தவங்களைச் செய்வதற்கும், வேதங்களை வெகு ஜாக்கிரதையுடன் ரக்ஷிப்பதற்கும், தேவ பித்ருக்களை திருப்தி செய்வதற்கும், தர்மத்தைக் காப்பதற்கும் பிராம்ஹணர்களை ஸ்ருஷ்டித்தார். இவன் ஸர்வ பூதங்களுக்கும் தாயும், தகப்பனும், குருவுமா யிருக்கிறபடியால் இவனை விட வேறொன்று பூஜிக்க யோக்கியமாகாது. இவர்களே ஜனங்களைப் பாவங்களினின்றும் தரணம் செய்வித்துத் தாங்களும் பாவத்திலிருந்து விடுபடுகிறவராகின்றனர். ஸர்வ தேவதைகளும் வேதமறிந்தப் பிராம்ஹணனிடத்தில் ஸாந்நித்தியம் செய்கின்றார்கள். பிராம்ஹணருள் வேதமறிந்தவரும், அவனிலும் அதன் அர்த்தத்தைத் தெரிந்தவனும், அவனிலும் வேதத்திற் கூறிய கர்மத்தை யனுஷ்டிப்பவனும், அவனிலும் பரமாத்மஜ்ஞானம் பெற்றவனும், உயர்ந்தவராவர். தங்கள் ஜ்ஞான, வைராக்கிய, அனுஷ்டானங்களிலிருந்து இறந்ததும் மோக்ஷமடைகின்றனராகையால் அவர்கள் பூஜ்யர்களாவர். ப்ரம்ஹ க்ஷத்ரிய வைச்யர்களான த்விஜர்களுக்கு தங்கள கீழ்ப்பட்ட ஜாதி ஸ்த்ரீகளை விவாஹம் செய்துகொண்டு அதனால் ஏற்பட்ட

ஜாதிக்கு அனுலோம ஜாதி என்று பெயர். அவர்கள் வைதிக கர்மாவில் அதிகாரமில்லாத வ்ராத்ய ராவர். அவரவர் களுக்கு ஸ்திரீ புருஷ ஜாத்யாநுஸாரம் ஒவ்வொரு பெய ரும் தொழிலும் உண்டு. இவர்கள் பிதாவின் ஜாதியிலும் மாதாவின் ஜாதியிலும் சேராது இழிந்தவராவர். ஹவ்ய கவ்யங்களுக்கநர்ஹர்களான குண்டகோளகர்கள் தகப்பன் ஜீவித்திருக்குங் காலத்தில் பர புருஷனுக்கும், இறந்த பின்னர் பரபுருஷனுக்கும் முறையே பிறந்தவரேயிவர்.

தாழ்ந்த ஜாதி புருஷர்களுக்கு உயர்ந்த ஜாதி ஸ்திரீகள் மூலம் பிறப்பவர் ப்ரதிலோம ஜாதி யெனப்படுவர். இவர்களும் தாய், தகப்பன் இருவரது ஜாதிகளிற் சேரா மல் பல விதத் தொழிலை யுடையவர்களாய் இழிந்தவ ராவர். அபரான்னத்தில் பிச்சைக்காகக் கிராமத்தில் இவர்கள் தங்கள் ஜாதித் தொழிலாய் காட்டு மிருகங்களை வசப்படுத்தி வேடிக்கை காட்டுதல், தொம்பரவ வித்தை முதலியன செய்வர். அந்த அகாலத்தில் அவர்களுக்குக் கொடுக்காது துரத்திவிட வேண்டியது. இப்படி ஜாதி வ்ய வஸ்தையின்றி பிறப்பதுதான் வர்ண ஸங்கரமாகும். இவ்வித ஜாதியார்களுக்கு குடிசை கட்டிக்கொண்டு வஸிக்கவேண் டிய யிடம் காடு, மலை, தோட்டங்களாகும். அவர்களுக்கு ஆடையாபரணங்களும் மற்ற ஜாத்யர்களது போலின்றி வேறு விதமாயிருக்கும். அவர்களது நடையுடை பாவனை களால் அவர்கள் அனுலோம ப்ரதிலோம ஜாத்யர் களென எளிதிற் கண்டுகொள்ளலாம். அவர்கள் குரூர ஸ்வபாவமாய்க் கடிகடித்துப் பேசுவர். அவர்களைப் பார்த்தல், பேசுதல் முதலிய ஒன்றுங் கூடாவாம். ஸஜாதி, ஸவர்ண விவாஹத்திற் பிறந்தவர்கள் தங்கள் ஜாதி ஆசாரங்களை விடாது அனுஷ்டித்து வருவர். ஸங் கீர்ண ஜாதியிற் பிறந்தவர்கள் பதிதராய் ஆசாரமின்றி அதில் ச்ரத்தையும் இல்லாதிருப்பார்கள். இவைகளே அவர்களது ஜாதி குலங்களை அறிய சிறு உபாயமாகும்.

ஸவர்ண விவாஹத்தாலும் சேர்க்கையாலும் ஜநிப்பவர் தாயின் குணத்தையோ, தகப்பனின்குணத்தையோ கொண்டிருப்பர். வ்யபிசாரத்திற் பிறந்தவர்கள் வேறு பட்டு நாஸ்திகராயும், ச்ரத்தையின்றியு மிருப்பர் என மனுவும், யாஜ்ஞவல்க்யரும் அபிப்ராயப்படுகின்றனர்.

## கர்ப்பாநாதி நாற்பது ஸம்ஸ்காரங்கள்

நிஷேகம் முதல் சுடுகாட்டில் நடத்தப்படும் கிரியை வரையில் மந்த்ரத்தோடு நடத்தப்படுவது ஸம்ஸ்காரங் களாகும். அவை ப்ரம்ஹண்யத்திற்காகவும் பிதாவின் ரேதஸ், கர்ப்ப வாஸம் முதலிய தோஷங்களின் சுத்திக் காகவுமாம்.

கர்ப்பதானம், பும்ஸவனம், ஸீமந்தோன்னயனம், ஜாத கர்மம். நாமகரணம், அன்னப்ராசனம். சௌளம், உப நயனம், ப்ராஜாபத்திய மென்ற நான்கு வ்ருதங்கள், ஸமா வர்த்தனம், கல்யாணம், பஞ்சயஜ்ஞத்தின் அனுஷ்டானம், (தேவர், பிதிர், மனிதர், பிரம்ஹம், பூதம், இவைகளுக்கு) அஷ்டகா சிரார்த்தம், பார்வண ச்ரார்த்தம், இவைகளைச் செய்தல், ச்ராவணீ, ஆக்ரஹாயணீ, சைத்ரீ, ஆச்வயுஜீ, என்ற ஏழு பாகயஜ்ஞ ஸம்ஸ்தைகள், அக்னியாதேயம், அக்னிஹோத்ரம், தர்ச பூர்ணமாஸம், ஆக்கிரயணம், சாதுர்மாஸ்யம், நிரூட பசுபந்தம், ஸௌத்ராமணீ என ஏழு ஹவிர்யஜ்ஞங்கள், அக்னிஷ்டோமம், அத்யக்னிஷ் டோமம், உக்தியம், ஷோடசீ, வாஜபேயம், அதிராத்ரம், அப்தோர்யாமம் என ஸோம ஸம்ஸ்தைகள் ஏழு ஆக மொத்தம் நாற்பது ஸம்ஸ்காரங்களாகும். ஆத்ம குணங்கள் எட்டாகும். அவையாவன :—சத்ருவோ மித்ரனோ ஆபத் திலிருந்தால் ரக்ஷிப்பது தயை எனப்படும். பிறர் மனோ வாக்குக் காயங்களால் என்ன தீங்கு இழைத்தாலும் அவைகளுக்குப் பதில் செய்யாமை க்ஷமை (பொறுமை) யாகும். ஒருவனது ஐச்வர்யம், வித்தை, தபஸ்ஸுக்களைக்

கண்டு பொறுமைப் படாதிருத்தலே அநஸூயையாம். வர்ஜ யாவர்ஜ்யங்களைக் கவனித்துப் புசித்தல், பெரியோரோடு சேர்ந்திருத்தல், தர்மானுஷ்டானம் இவை யாவும் சௌச மாகும். கஷ்டத்தை விளைவிக்கும் கார்யத்தைச் செய்யா திருத்தல் அநாயாஸமெனப் படும். கெட்டதை விட்டு நல் லதை தினந்தோறும் செய்வதே மங்களமாம். பிறர் பொருளை விரும்பாது தனக்குக் கிடைத்த மட்டில் திருப்தி யடைந் திருப்பது அஸ்ப்ருஹையாகும். இந்நாற்பது ஸம்ஸ்காரங் களையும் எட்டு ஆத்ம குணங்களையு முடையவர்கள் ஸாயுஜ்ய பதவிக்கர்ஹராவர். இதில் கர்ப்ப தானம் முதல் உபநயனம் வரையில் த்விஜர்களுக்கு அவசியம் இருந்தாக வேண்டும். பிறகு ஸந்யஸித்துக் கொண்டாலும் கொள்ளலாம். அப்படிச் செய்யாவிடில் மற்ற ஸம்ஸ்காரங்களும் ஆவச்யக மாகும்

## கர்ப்பாதாநம்

புத்திரனை விரும்புகிறவன் ருது காலத்தில் இரட்டை நாட்களில் ஸ்த்ரீயை யடையவேண்டும். ருது கால மென்பது ருது கண்டது முதல் பதினாறு நாட்களாகும் இவைகளே கர்ப்போத்பத்திக்கு ஹேதுவான காலம். இதில் முதல் நான்கு தினங்கள் நீக்கத் தகுந்தவை களாகும். ஒன்று, மூன்று, ஐந்து இம்மாதிரியான தினங் கள் ஸ்திரீ ப்ரஜை ஜனிக்க ஹேதுவாகும். ஸ்த்ரீயோடு கூடினவன் உடனே ஸ்நானம் செய்யவேண்டும்.

புணரக்கூடாத காலங்கள்:— அமாவாஸை, பௌர் ணமிகளிற் புணருபவனின் இந்திரியங்கள் நசித்துவிடும். பகலிற் புணர்ந்தால் அற்பாயுளான பிள்ளை பிறப்பான். ரஜஸ்கண்ட முதல் நாளில் அவள் சண்டாள ஸ்த்ரீக்கும், இரண்டாம் நாள் ப்ரம்ஹகாதகிக்கும், மூன்றும் நாள் வண் ணாத்திக்கும் ஸமானமாகிறாளாகையால் அவளை அக்காலங் களிற் புணர்ந்தவனுக்கு சண்டாள ஸ்திரீயைப் புணர்ந்த

வனுக்குச் செய்யவேண்டிய ப்ராயச்சித்தத்தைச் செய்து வைக்கவேண்டியது.

**நிஷேகந்திற்கு நிஷேதிக்கப்பட்ட திதிவார நக்ஷத்ரங்கள்.** ஸங்க்ராந்தி (மாஸப்பிறப்பு), அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாஸை, பௌர்ணமி இவைகள் பஞ்ச பருவங்கள் எனப்படும். இவை தவிற சதுர்த்தி, ஷஷ்டி, ஏகாதசி, த்வாதசீ, திரயோதசி திதிகளும் கூடவாம். மகம், மூலம் நக்ஷத்திரங்களும் கூடாவாம்.

ருது காலத்தில் நாட்களுக்குத் தகுந்த பிறக்கும் பிள்ளைகளின் லக்ஷணங்கள். நான்காவது நாள் ரத்த ஸம்பந்த மிருக்குங்கால் அவளைக் கூடுவானாயின் அற்பாயுளாய் தரித்திரமான பிள்ளையும், ஐந்தாம் நாளில் பெண்ணும், ஆறில் மத்தியமமான பிள்ளையும், ஏழில் பெண்ணும், எட்டில் ஐச்வர்யவானையும், ஒன்பதிற் பெண்ணும், பத்தில் சிறந்த புத்திரனும், பதினொன்றில் தர்மமற்ற பெண்ணும, பனிரண்டில் ஸத்புத்திரனும், பதிமூன்றில் வியபசாரிப் பெண்ணும், பதினான்கில் மஹா தர்மவானையும் (ஆசாரம், குணங்களோடு), பதினைந்தில் பெரும் பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட ஹேதுவான பதிவ்ரதையும், பதினாறில் வித்தை, ஸத்தியம் முதலிய பாக்கியவானையும் பெறுவாள்.

புருஷனது வீர்யம் அதிகமானால் பிள்ளையும், ஸ்த்ரீயின் சுக்லம் அதிகமாயிருந்தால் பெண்ணும், பிறக்கும். இருவருடையதும் சமமானால் அலியாயும் அல்லது இரட்டையாயும் பிறக்கும்.

புருஷ ஸந்ததி யில்லாதவன் ருது காலத்தில் பெண்டிரோடு கூடாவிடில் ப்ரம்மஹத்தி தோஷத்தை யடைகிறான். அவனது ரேதஸ்ஸில் அவனது பித்ருக்கள் அம் மாத முழுவதும் வஸிக்கின்றனர். இப்பதினாறு தினங்களைத் தவிர்த்து மற்ற நாட்களிற் கூடுகிறவனும், அவ

ளுக்கு இஷ்டமில்லாத காலத்திற் புணருகிறவனும், தகாதவளைப் புணருகிறவனும் இதே பாவத்தை யடைகிறார்கள். வெளியூர் சென்று வந்தவனுக்கு அன்று தகாததினமாக யிருந்தாலும் கூடுவது தோஷமாகாது.

பிரம்ஹசாரியா யிருக்கும்பொழுது வேதங்களைக் கற்று ரிஷிகளின் கடனையும், க்ருஹஸ்தாச்ரமத்தில் யாகத்தால் தேவர்களையும், அவளிடத்தில் ஸத்புத்திரனை யுண்டு பண்ணி பித்ருக்களின் கடனையும் நிவர்த்தி செய்ய வேண்டும் ஒவ்வொரு ப்ராம்ஹணனும், என்று வேதம் முறையிடுகிறது. ஸத்புத்திரனைப் பெறுவது ஸ்வர்க்கத்திற்கு ஹேதுவாகும். ஒரு பிள்ளையாவது கயாச்ராத்தம் செய்வானாயின் பித்ருக்களுக்கு விமோசன மேற்படும். மூத்த பிள்ளை யொருவனே சொத்திற்கு பூர்ணாதிகாரி யாவானென மனு கூறுகிறார். ருதுவாகாதவள், கர்ப்பிணி, போகத்தில் பெரும் ஆவல் கொண்டவள், ரஜஸ்வலை இப்படிப்பட்டவர்களைப் புணர்வது ஆயுட் குறைவை யுண்டாக்கும். அதிக போகம் செய்பவனுக்கு புண்ணியம் (தபஸ்), தானம், ஆயுட்கள் நசிக்கின்றன. எட்டு மாத கர்ப்பிணி, ரஜஸ்வலைகளைக் கூடுகிறவன் அதிக்ருச்ர ப்ராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். வஸ்த்ரமின்றி ஸம்போகிக்கலாகாது. ஸம்போகித்தவன் ஸ்நானம் செய்யாவிடில் இந்திரியங்களைச் சுத்தம் செய்துகொள்ள வேண்டும். சேர்ந்த பின்னர் இருவரும் ஒரே படுக்கையிற் படுப்பதும் மற்றொரு தரம் புணர்வதும் கூடாது.

## பும்ஸவனம்

கர்ப்பந் தரித்தவளுக்கு எதைச் செய்வதால் பிள்ளை யாய்ப் பிறக்குமோ அதுவே **பும்ஸவந**மாம். கர்ப்பத்தில் சிசு புறள்வதற்கு முன் கர்ப்பந் தரித்த இரண்டாம் மூன்றாம் மாதங்களிலேயே செய்துவிட வேண்டும். இதை ஒவ்வொரு கர்ப்பத்திலும் செய்யவேண்டும் இதைப் புருஷ

நக்ஷத்திரங்களுள் செய்யவேண்டும். புனர்வஸு, புஷ்யம், ஹஸ்தம், மூலம், ச்ரவணம், மிருகசீர்ஷங்களே **புருஷ நக்ஷத்திரங்களாகும்.**

## ஸீமந்தோந்நயநம்

ஸீமந்தமென்பது ஸ்திரீகளுக்கு சுத்தியைச் செய்வதால் முதல் கர்ப்பத்திற்கு மட்டுமே போதுமானது. இதை ஆறும் மாத முதல் ப்ரஸவத்திற்குள் எப்பொழுதாவது செய்யலாம். ப்ரஸவித்துவிட்டாலும், பர்த்தா தேசாந்தரமோ, பரலோகமோ அடைந்திருந்தாலும் நெருங்கின பந்துவைக் கொண்டு இதைச் செய்யவேண்டும்.

## ஜாதகர்மம்

நிசியாயிருந்தாலும் புத்திரன் பிறந்தவுடனே குளிர்ந்த நீரில் ஸசேல ஸ்னானம் செய்யவேண்டும். இது நைமித்திகத்திற் சேரும். உடனே விதிப்படி ஜாதகர்மத்தைச் செய்துவிட வேண்டும். இதற்கு இடையூறு நேர்ந்தால் நாளம் (தொப்புள்கொடி) அறுப்பதற்கு முன் ஸூதகம் இல்லாததால் செய்துவிட வேண்டும். அப்பொழுதே நாந்தி ச்ராத்தத்தை அரிசி (ஆமம்) முதலியவைகளாலும், ஸ்வர்ணத்தினுலும் செய்யலாம். வேறு பசு, பூமி, வஸ்த்ரம், வீடு, படுக்கை எதையாவதும் தானம் செய்யலாம். ஆனல் அன்னத்தை மட்டும் புசிப்பிப்பது கூடாது. புசித்து விட்டால் சாந்திராயண வ்ருதமனுஷ்டிக்க வேண்டும். பங்காளிகள் புசிக்கலாம். அவர்களுக்கே தானத்தையும் செய்யலாம். இதில் யாருக்கும் ப்ரதிக்ரஹ தோஷமில்லை. வெள்ளி, தான்யங்களையும் தானம் அவசியம் செய்ய வேண்டும். இதால் தேவ, பித்ருக்கள் திருப்தி யடைகின்றனர். இது ஓர் விசேஷ காலமாகும். எள், வெல்ல ப்ரதிக்ரஹங்களுக்கு தோஷமில்லை. பிறந்த தினம் ஒரு நாள் தான் பாவனமாகும். தகப்பனுக்கு ஆசௌசமிருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு சுத்தியைப் பெறுவான்.

ஆஹிதாக்கினிக்கும் புத்திரன் பிறந்தால் ச்ருதியிற் சொல்லப்படும் த்வாதச கபால இஷ்டியை அமாவாஸை அல்லது பௌர்ணமியில் விருத்தி கழிந்த பிறகு செய்ய வேண்டும். இதால் புத்திரனுக்கு பரிசுத்தி. பசு, இந்திரியம், தேஜஸ், அன்னம் முதலியவைகள் உண்டாகுமாம்.

எல்லோரும் ப்ரதி வருஷமும் தங்கள் பிறந்த தினத்தை எப்பாடுபட்டாவது கொண்டாட வேண்டும் ஆடையாபரணந் தரித்து சுப காரியங்களுடன் பித்ருக்கள் குரு, தேவதை, பிராம்ஹணர்களைப் பூஜித்து வெகு பேர்களுக்குப் போஜனம் செய்துவைப்பதுடன் உத்ஸவம் நடத்தவேண்டும்.

## நாமகரணம்

குழந்தை பிறந்த பதினேரும் நாள் நாமகரணம் மாதா பிதாக்கள் சேர்ந்து செய்யவேண்டும். அன்று தவறினுல் ஒரு வருஷத்திற்குள் நல்ல நாள் பார்த்துச் செய்யலாம். பிதாயில்லாவிடில் அக்குலத்தில் ஒரு வயோதிகரைக் கொண்டு செய்யவேண்டும். பதினேரும் நாள் ஸ்த்ரீயானவள் ஸூதிகா க்ரஹத்திலிருந்ததால் நேரிட்ட அசுத்தியிலிருந்து விடுபடுகிருளாகையால் அவசியம் ஸ்னனஞ் செய்யவேண்டும்.

சுபத்தைக் கொடுக்கும் பெயராய்ப் பிராமணனுக்கு சர்மா வென்னும் சிறு பதத்தைக் கடைசியில் சேர்த்து வைக்கவும். சூத்திரன் பெயருக்குக் கடைசியில் தாஸன் என்று சேர்க்கவேண்டியது. பத்திர சர்மா, பத்திர தேவன், ஸுமதி போன்ற பெயர்களும், சூத்திரனுக்கு ஹீந தாஸன் போன்றதும் உசிதமாகும். க்ஷத்திரியனுக்கு வர்மாவும், வைச்யனுக்கு குப்தாவும் சேர்க்கவேண்டிய பதங்களாகும்.

ரிஷிகளின் பெயரும், தன் குல தேவதையின் பெயரும், முன்னேர்களின் பெயரும் குழந்தைக் கிடவேண்டும்,

ரிஷிகளின் பெயரை வைப்பது வட தேசத்தில் ஆசாரத்திலிருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பராசர பட்டர் என்ற ஒரு ப்ரஸித்தபக்த கோஷ்டியிற் சேர்ந்தவருக்குப் பெயராய் வைக்கப்பட்டிருக்கிறது. பெண் குழந்தைக்கு மங்களத்தையும், ஆசிர்வாதத்தைத் தருவதும், நெடிலைக் கடைசியில் உள்ளதாயிருப்பதாயிட வேண்டும். லக்ஷ்மீ, யசோதா, கௌரீ போன்ற பதங்கள் உதாஹரணங்களாகும்.

## காது குத்தல்

கார்த்திகை, தை, சித்திரை, பங்குனி இவைகளில் ஏதேனுமோர் மாதத்தில் சுக்ல பக்ஷத்தில் பல் முளைத்த பிறகு தாயின் மடியின் மேல் ஏறி இறங்கச் சக்தி வந்த சிசுவிற்கு ஊசியில் சரட்டைக் கோர்த்து அதைச் சமமாய் இரட்டையாய்ச் சேர்த்துக்காது குத்தவேண்டும்.

## குழந்தையை வெளிக் கொண்டுவருதல்

குழந்தை பிறந்த மூன்றும் மாதம் அதை வெளியிற் கொண்டுவந்து ஸூர்ய தரிசனமும், நான்காம் மாதத்திற் சந்திர தரிசனமும் செய்து வைக்கவேண்டும்.

## அன்னப்பிராசனம்

தயிர், நெய், தேன் இவைகளை அன்னத்துடன் சேர்த்து மந்திரங்களால் குழந்தைகளுக்கு அன்னப்ராசனம் ஆறும் மாதத்தில் அல்லது அது முதல் பல் முளைக்கும் காலம் வரையில் வருஷத்திற்குள்ளே செய்து வைக்க வேண்டும்.

## குடுமி வைத்தல்

மங்களகரமாயும், தன் முன்னோர்கள் வைத்திருந்த படியும் ஒரே குடுமியாய் நல்ல நாளில் மூன்றும் வயதில் அல்லது ஐந்தாம் வயதிற்கு மேற்படாமல் குடுமி வைக்க வேண்டும். அச்வினி, ச்ரவணம், சித்திரை, ஸ்வாதி,

புனர்வஸு, புஷ்யம், தனிஷ்டை நக்ஷத்திரங்கள் சௌளத்திற்குக்கூடும். ஜன்ம நக்ஷத்திரம், கிருத்திகை, பூரட்டாதி, உத்திரட்டாதி, ப்ரதமை, சதுர்த்தி, ஷஷ்டி, நவமி, சதுர்த்தசி, சனி, ஞாயிறு, செவ்வாய், இரவு இக் காலங்களில் குடுமி வைத்தல் கூடாது. தாயார் கர்ப்பமாயிருக்கும் பொழுது சௌளஸம்ஸ்காரம் செய்யப்படுமாயின் அவனுக்குக் கத்தியால் மரணமேற்படும். குழந்தைக்கு ஐந்து வயதாகி விட்டால் அப்பொழுது செய்யலாம். காலாதீதமானதிற்குப் பிராயச்சித்தம் செய்து செய்ய வேண்டும்.

## ஸ்த்ரீகளுக்கு ஜாதகர்மாதி ஸம்ஸ்காரம்.

கர்ப்பம், பீஜம் இவைகளின் தோஷங்களை நிவர்த்தி செய்வதற்காக ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களேற்பட்டிருக்கின்றன. ஆகையால் அவர்களுக்கும் ஸகாலத்தில் அமந்த்ரகமாக இவைகளைச் செய்யவேண்டும். காலந் தவறி விட்டால் வ்யாஹ்ருதிஹோமம் செய்யவேண்டும். பாதக்ருச்ரம் ப்ராயச்சித்தமாகும். தெரிந்தே விடப்பட்டிருந்தால் இருமடங்கு பிராயச்சித்தம் செய்து ஸம்ஸ்காரங்களைச் செய்ய வேண்டும். ஸ்திரீகளுக்கு விவாஹமே உபநயனமாயும், பர்த்ருசுச்ரூஷையே குருகுல வாஸமாயும், வீட்டின் வேலைகளைப் பார்த்து வருவது ஔபாஸன, அக்னிஹோத்திரங்களுக்கு ஸமமாகும்.

## அக்ஷராப்யாஸம்

ஐந்திலோ, அதற்கு மேலோ விஷ்ணு விழித்திருக்கும் மாதங்களில் பிள்ளைகளுக்கு நல்ல நாளில் அக்ஷராப்யாஸம் ஆரம்பம் செய்து வைக்கவேண்டும். பிரதமை, அமாவாஸை, பௌர்ணமி, ஷஷ்டி, அஷ்டமி. நவமி, சதுர்த்தசி, சனி, செவ்வாய், மாசி மாதம் அக்ஷராப்பியாஸத்திற்கு கூடாத காலங்களாகும். உத்தராயணம், ஆடி மாதம், ஞாயிறு, வியாழன், வெள்ளி, திங்கள், புதன், ச்ரவணம்,

ஹஸ்தம், புஷ்யம், மிருகசீர்ஷம், அவிட்டம், சதயம், சித்திரை, ஸ்வாதி, அனுஷம், கேட்டைகள் கூடுமானவைகள். முதலில் விஷ்ணு, லக்ஷ்மீ, ஸரஸ்வதி, பார்வதி இவர்களைப் பூஜை செய்து விட்டுப் பிறகுத் தன் சொந்த வித்தைக்கு ஸூத்ரஞ் செய்தவர்களான மஹரிஷிகளையும், அவரவரது வித்தையையும் பூஜித்து அவர்கள் பெயரால் அக்கினியில் ஹோமம் செய்து பிறகு பிராம்ஹணோத்தமர்களைப் பூஜை செய்து தக்ஷிணை கொடுத்து, மற்றவர்களுக்கும் தக்ஷிணை கொடுத்து ஸந்தோஷிப்பித்துவைத்துப் பிள்ளையை மேற்கு முகமாய் உட்காரச் சொல்லி குருவானவர் கிழக்குத் திக்கை நோக்கி யுட்கார்ந்து அக்ஷராப்பியாஸம் செய்து வைக்கவேண்டும். அனத்தியயனங்களில் படிப்பிக்கக் கூடாது.

## உபநயந மாகாதவன் இருக்கவேண்டிய ரீதி

இவனுக்கு இவைகளைச் செய்யவேண்டும் என்கிற விதிகளோ, இவைகளைச் செய்யக்கூடாதென்ற நிஷேதங்களோ கிடையாது. இவன் செய்யும் பாவங்கள் மாதா பிதாக்களைச் சேருமாதலால் அவர்கள் இவனுக்கு ஆசாரங்களைச் சொல்லிப் பழக்கிவைத்து வரவேண்டும். அவனே கள் குடித்தல், பொன்னைத் திருடுதல் முதலிய மஹா பாவங்களைச் செய்வானாயின் அவனுக்கும் தோஷம் உண்டு. சிலர் ரஜஸ்வலை, சண்டாள ஸ்பர்சங்களுக்கு க்ஷௌர கர்மாவைப் போல் ஸ்னானம் செய்து வைக்க வேண்டுமென அபிப்பிராயப்படுகின்றனர். இவனுக்குப் பூணூல் ஆயிருந்தாலும் வேதமோதாத வரையிற் சூத்திரனுக்கே ஸமானமாகிறான். உபநயனமாகாதவன் மாதா பிதாக்களின் கர்மங்களுக்குரிய மந்த்ரங்களை மட்டும் சொல்லுவது தோஷமாகாது. சொல்லியாகவேண்டும். வேறெதையும் சொல்லக்கூடாது.

## உபநயந கால நிர்த்தாரணம்

காயத்ரீயினல் பிராம்ஹணனுக்கும், திருஷ்டு புவினல் க்ஷத்திரியனுக்கும், ஜகதியினல் வைச்யனுக்கும் உபநயனம் செய்து வைக்கவேண்டும். காயத்ரீ இருபத்திநன்கு அக்ஷரங்களையும், திருஷ்டுப் நாற்பத்திநன்கும், ஜகதீ நாற்பத்தி எட்டு முடையன. காயத்ரீக்கு மூன்று பாதங்களும், மற்றவைகளுக்கு நான்குமாகும். அக்கணக்கில் பாதம் ஒன்றுக்கு முறையே எட்டு, பதினென்று, பனிரண்டு மாகும். அவ்வக்ஷரங்களுக்கு ஏற்பட்டபடி ப்ரம்ஹ க்ஷத்திரிய வைச்யர்களுக்கு எட்டு, பதினென்று, பனிரண்டு மாகின்றன. கர்ப்பத்தினின்றும் கணக்கிட்டு ஏழாவது வயதே உபநயன காலமென ரிஷிகள் நிர்த்தாரணம் செய்கின்றனர். அதிலும், ப்ரம்ஹவர்ச்சஸம் என்னும் வேதாத்யயனம் செய்து, அதன் அர்த்தத்தை நன்ருய் அறிவதாலுதிக்கும் தேஜஸை பிதா தன் பிள்ளைக்கு விரும்புவானுல் ஐந்தாம் வயதிலேயேயும், அப்படி ஆறு, ஏழில் ராஜ்யத்தை விரும்பும் க்ஷத்திரியன், பணத்தை விரும்பும் வைச்யர்களுக்கும் உபநயனம் செய்து விடவேண்டும். இம்மூவருக்கும் வஸந்தம், கிரீஷ்மம், சரத்ருதுக்கள் முறையே உபநயனத்திற்கு சுபத்தைத் தரும் காலமாகும். உத்தராயணம் முழுதும் இதற்குக் காலமாகும். ஆனலும் ஜேஷ்ட புத்திரனுக்கு ஜேஷ்ட மாஸத்தில் (ஆனி) செய்வது அவனுக்கு ஜாட்டியத்தையும், மரணத்தையும் விளைவிக்கும். அனத்யயனங்களில்லாத சுக்லபக்ஷம் சிறந்தாகும். திரயோதசி, ஸப்தமி, நவமி, ஏகாதசி சதுர்த்தீ, இவைகளும் அனத்யயனங்களும் களக்ரஹங்கள் எனப்படும். அவை கூடாதாம். சுக்கிரன் எட்டாமிடத்திலிருக்கும் பொழுதும் ஸூர்யன் ராசியின் முதற் பாகத்திலிருக்கும் பொழுதுங் கூடாதாம். வியாழன், வெள்ளி, செவ்வாய், புதன் முறையே ரிக், யஜுஸ், ஸாம, அதர்வண உபநயனங்

களுக்குச் சிறந்த நாட்களாகும். ஏனென்றல் குரு, சுக்கிரன், அங்காரகன், புதன் இவர்கள் முறையே நான்கு வேதங்களுக்கும் அதிபர்கள். சாகாதிபன் வலுத்து கேந்திரத்திலிருக்கும்பொழுது லக்கினத்திலிருந்து நாலு, ஏழு பத்தாவதான விடங்களிலிருக்கும் பொழுது பகலில் உபநயனம் செய்வது ஸுகத்தைத் தரும். சாகாதிபன் வலுத்திராத சமயத்தில் செய்வதானது அவன் வேறு ஜாதிகளை யடைந்து விடுவானென பெரியோர்கள் அபிப்ராயப்படுகின்றனர். ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, அவிட்டம், புஷ்யம், ச்ரவணம் இவைகள் சிறந்ததாகும். தாயின் வயிற்றிலிருந்து பிறப்பது ஒரு ஜன்மம். காயத்ரீ யுபதேசம் பெறுவது மறு ஜன்மம். ஆகையால் தான் இம் முதல் மூன்று வர்ணங்களுக்கும் த்விஜர் என வழங்கப் படுகிறது. இம்மறு பிறவிக்கு ஸாவித்திரியே தாயும், ஆசார்யனே தகப்பனுமாவர். தாய் தகப்பன்மார்கள் உபயோகமற்ற உடலை மட்டும் தந்தனர். வைதீக கர்மத்தால் ஆத்மா நற்கதியடைந்து நித்திய சுகத்தை யனுபவிக்க குருவே ஹேதுவாகின்றுகையால் அவரே சிறந்த பிதாவாவார்.

எட்டு வயதிற்கு மேல் பிராயச்சித்தம் செய்து உபநயனம் செய்யவேண்டும். உபநயனத்திற்குக் கௌண காலம் பதினாறு வயது வரையிலாகும். அதற்கும் பிந்திச் செய்பவர்கள் வ்ராத்யர்கள். அவர்கள் ஒரு கர்மாவிற்கும் அர்ஹதையற்றவர்கள் என மனுவைப் போலவே வேதவியாச பகவானும் அபிப்ராயப்படுகின்றனர். அப்படிப் பட்டவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்துதான் உபநயனம் செய்விக்கவேண்டும். செய்யாவிடில் அவர்களுக்கு விவாஹம், அத்யயனம், யாகம் ஒன்றும் நடத்திவைக்கக்கூடாது. வ்ராத்யஸ்தோமம் என்பதுதான் பிராயச்சித்தமாகும். ஔத்தாலக விருதத்தையவன் அனுஷ்டிக்க வஸிஷ்டர்

அபிப்ராயப்படுகிருர். அதாவது இரண்டு மாதம் யவை யைக்கஞ்சியாகச்செய்து புசித்தும், ஒருமாதம் பால்சாப்பிட் டும், ஒரு பக்ஷம் ஆமிக்ஷையையும், எட்டு தினங்கள் நெய்யி ஞலும், ஆறு நாட்கள் ஒருவரையும் யாசியாமல் கிடைத்த வைகளைப்புசித்தும், மூன்றுதினங்கள் நீரைக் குடித்தும், ஒரு நாள் சுத்தோபவாஸமாயும் இருக்கவேண்டிய தென் பதாம். இவ்விருதத்தையும் அச்வமேதாவபிருதத்தை யும், வ்ராத்தியஸ்தோமத்தையும் செய்வாஞயின் அவன் வ்ராத்யஞகான். அயாசிதமாய்க் கிடைத்ததையும் ஒரு நாள்தான் உட்கொள்ளவேண்டும். பாலை சுண்டக் காய்ச்சி அச்சூட்டிலேயே தயிரை விட்டால் அது ஒருருண்டையாகி விடும். அதுதான் ஆமிக்ஷை யெனப்படுவது.

## உபநயநம்

ஸுமங்கலி, அல்லது கன்னிகை, அல்லது விதவை இவர்களால் செய்யப்பட்ட பருத்தியாலான நூலை யெடுத்து மூன்று இழையாகச் செய்து தன் விரல்களில் தொண்ணூற்ருறு (ஷண்ணவதி) சுத்துக்கள் சுத்திக் கொள்ளவேண்டும். பிறகு அதை ஜலத்தில் போட்டு சுத்தி செய்து கோவிலிலோ, பசுத் தொழுவத்திலோ, நதிக்கரையிலோ அல்லது ஓர் சுத்தமான விடத்தில் மூவ ராய் முறுக்கி மூன்ருக முடித்து முறுக்கி ஆத்தி யெடுப் போமாஞல் அது ஒன்பது தந்துக்களுடன் கூடின ஓர் ஸர மாகும். இதை மறுபடியும் மூன்ருக மடித்துப் பிரம்ஹ முடி போட்டெடுப்பதுதான் யஜ்ஞோபவீதமாகும். அவ் வொன்பது தந்துக்களுக்கும் ப்ரணவம், அக்கினி, பகன், ஸோமன், பித்ருதேவதை, பிராஜபதி, விஷ்ணு, தர்மன், ஸர்வ தேவதை ஆகிய இவர்களே தேவதைகளாவர். இதை பத்திர புஷ்பங்களால் அர்ச்சித்து அபிமந்திரித்து மந்தரவத்தாய் தரிக்கவேண்டும். தொப்புளுக்கு மேலே போவது ஆயுளையும், கீழே போவது தவத்தையும்

குறைத்துவிடுவதால் நாபியளவிற்குத் திட்டமாயிருக்க வேண்டும்.

உத்தரீயத்திற்குப் பதிலாக கிருஹஸ்தர் மூன்று பூணூலைப் போட்டுக் கொள்ளலாம். பிரும்ஹசாரியைப் போல் யதியும் ஒன்றையேதான் தரிக்கவேண்டும். ஒரு க்ஷணமாவது பூணூல் இல்லாதிருப்பவன் சூத்திரனாகி நாயாய்ப் பிறப்பான். பிராயச்சித்தம் செய்துக்கொள்ள அர்ஹனாகிறன். கோபத்தினால் அறுத்தவன் மூன்று க்ருச்ரம் செய்யாவிடிற் பாவந் தொலைவதில்லை. யஜ்ஞோப வீதம் குடுமிகள் இல்லாதவன் ஒருகர்மம் செய்வதற்கும் அதிகாரியாகான். செய்வதும் நிஷ்பலமாய் ஆஸுரமாகிறது. பூணூல் சாப்பிட்டுவிட்டுச் செய்யப்பட்டது கூடாது. பூணூல் அறுந்துவிட்டாலோ, வேறு காரணத்தினால் இல்லாமற் போனாலும் உத்தரீயத்தையோ, வேறு நூலையாவது சற்று தரித்துவைத்திருக்க வேண்டும். உபநயனமான நான்கு தினங்களுக்குள் பூணூல் தவறினால் வ்யாஹ்ருதியினால் ஸர்வ பிராயச்சித்தஹோமம் செய்வித்து அநாஜ்ஞாத மென்பதை மூன்று தடவை ஜபித்து பிறகு யக்ஞோபவீதம் தரிக்கலாம்.

### தண்டம்

பில்வம், பலாச தண்டங்கள் சாஸ்த்ரோக்தமானவை. ஸூர்யன் எதினின்று ஜனித்தானோ அதினின்று பில்வமும் உதித்தது. அதுவே தேஜஸ்கர மாகிறதென ச்ருதி உத்கோஷிக்கிறது. பலாசம், பிராம்ஹணன் இவ்விருவரும் காயத்திரியின் திரிபு எனவேதங் கூறியிருத்தலால் புரசின் தண்டமும் வேதோக்தமாய் விட்டது. இவை கிடைக்காவிடில் யஜ்ஞார்ஹமான விருக்ஷங்களான அரசு. அத்தி இவைகளின் தண்டம் க்ராஹ்யமாகும். தண்டத்தினளவு சிரஸ்வரையிலுமாம். அது கோணல், பட்டையில்லாமை இவையின்றி அழகாயுமிருக்க வேண்டும்.

### அஜிநம்

கிருஷ்ண மிருகம் என்னும் மானின்தோல் ப்ரம்ஹசாரிக்கு உத்தரீயமாகும். கோசர்மமும் கூடும்.

### வஸ்த்ரம்

சணல், பட்டு, கம்பளம், கௌபீனங்களே ப்ரம்ஹசாரிக்கு வஸ்த்திரங்களாகும். கௌபீனமின்றிக்ஷணமும் இருக்கக்கூடாது. செய்யும் கர்மாவும் ஆஸ"ரமாகும். தறியை விட்டெடுத்த புதுவஸ்த்ரத்தை இரண்டுரிக்குகளால் அபிமந்திரித்துரிக்கை மூன்று தரம் சொல்லிப்பிறகு தரிக்க வேண்டும். உபநயனம் ஆன நான்காம்நாள் அப்பையனுக்கு ஸ்னானம் முதலியன செய்வித்து மூன்று பிராம்ஹணர்களுடன் குருவானவர் கிழக்கேயோ மேற்கேயோ சென்று ஒருபலாசமரம் இருக்கிறதாவெனத் தேடவேண்டும். அது அங்கிராவிட்டால் அதிருக்கும் இடத்திற்குச் சென்று அதனடியில் அவர்கள் புண்யாஹவாசனம் செய்வித்து ஜலத்தை ப்ரக்ஷோணம் செய்து பசுஞ்சாணத்தால் மெழுகிச் சுத்தப்படுத்தி பிறகு அம்மாத்தில் பிரம்ஹாவை ஆராதித்து நமஸ்கரிக்கவேண்டியது. பிறகு இந்நான்கு தினங்களாய் உடுத்திவந்த கௌபீனம், தண்டம், அஜினம், மேகலை இவைகளை நீக்கி எல்லாம் புதிதாய் தரிக்க வேண்டும். பழகினவைகளை மரத்தின்மேல் வைத்துவிட்டு வஸ்த்ரத்தை குருவிற்கு ஸமர்ப்பித்துவிட்டு ப்ராம்ஹணர்களுக்கு தக்ஷிணை கொடுக்க வேண்டும். (தண்டுநீர்க்கர்மா)

### மேகலை

முஞ்சமென்ற புல்லால் சிறிய சரடாகச்செய்து அதை மேடுபள்ளமின்றி மிருதுவாயிருக்கும்படி முப்பிரியாகச் செய்து பிரம்ஹசாரி வஸ்த்திரத்தினமேல் ஒன்று அல்லது மூன்று முடிகளுடன் தரித்திருக்க வேண்டும். அது

கிடைக்காவிடில் குசமும், நாணலுமுதவும். அரைஞாண் (கடி ஸூத்திரம்) இல்லாதவன் நக்னன் என்று ச்ருதியும் அதின்றி செய்யப்படும் ஸர்வ ச்ரௌதஸ்மார்த்த கிரியைகளும் நிஷ்ப்ரயோஜன மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

## பிக்ஷை எடுப்பது

பவதி பிக்ஷாம் தேஹி என்று பிரம்ஹசாரி தாய் ஸஹோதரி, தாயின் ஸஹோதரி, இவன் பிக்ஷை கேட்டதும் தட்டாமல் அன்புடன் அளிப்பவர் இவர்களைத் தனக்குப் பிக்ஷையிடச் சொல்லிக் கேழ்க்க வேண்டும். முதல் முதலில் உபநயனமானதும் இவர்கள் கையில்தான் வாங்க வேண்டும். கர்ப்பிணி, விதவை இவர்களிடம் யாசிப்பது கூடாது. தண்டுநீர் வரையில் ஆமமாகவும், பிறகு அன்று முதல் ஸமாவர்த்தனம் வரையில் பக்குவமான அன்னத்தையே யாசித்துண்ணவேண்டும். அத்யேதாவாயும், ஆஹிதாக்னிகளாயுமிருக்கிற சிஷ்டர்கள் வீட்டில் தான் பிக்ஷையெடுக்கவேண்டும். குரு, குருவின் தாயாதிகள், தன்ஸபிண்டன், மாமன் முதலிய பந்துக்கள் வீடுகளிற் கூடாது. முன்கூறிய சிஷ்டர்கள் எங்கிருக்கிறார்களோ அக்கிராமங்களுக்குப் போய் எடுக்க வேண்டும். ஒருவரும் அகப்படாவிடில் கீழ்ச் சொன்ன பந்துக்கள், குருமுதலியோர் வீடுகளிலும் எடுக்கலாம். பரஸ்திரீகமனம் முதலிய பாவங்களைச்செய்பவர்களின் வீட்டை ஸர்வ விதத்திலும் த்யஜிக்கவேண்டும். சூத்திரன் வீட்டில் எடுப்பது கூடாது. சூத்திரான்னம் புஜித்து வேதமோதிவருபவனின் பலன் அன்னமிடுபவனையும் அவனது சூத்திரத்தன்மை அவனன்ன முண்ணும் வேதமோதுபவனையும் வந்தடையும். இவன் ஒரே வீட்டில் யாசிப்பது கூடாது. பல வீடுகளில் யாசிப்பதானது உபவாஸத்திற்கு ஸமானமாகிறது. காய் கிழங்கை மட்டுமோ, நீரை மட்டுமோ குடித்து விருதமிருப்பவர்களின் பலன் பிக்ஷான்னம் புசிப்பவனுக்கு வீசத்தி

லொரு பாக பலனுக்கு மிடாகாது. சேர்ந்தாப்போல் ரோகியாகாத பிரம்ஹசாரி ஒரு வாரம் பிக்ஷை எடாமலோ, ஸமிதாதானம் செய்யாமலோ உண்டு வருவானாயின் அவன் அவகீர்ணீ விருதத்தை யனுஷ்டிக்க வேண்டும். அதிக பிக்ஷை யெடுத்து பிராம்ஹணர்களுக்குக் கொடுப்பவன் திருடனாகி கோரமான நரகத்தை யடைகிறான். போதுமான அளவிற்கு மேல் வாங்கக் கூடாது. தன்னையு மறியாது அதிகமாய்விட்டால் அதைப் பூமியில் புதைத்து விடுவதோ, நீரில் கரைத்துவிடுவதோ, குருவின் ஆளுக்குக் கொடுத்துவிடுவதோ ஏதாவதொன்று செய்ய வேண்டும். இவன் கேட்டுக் கொடுக்காமலோ, அதட்டுகிறவர்களையோ இவன் கோபிக்கக்கூடாது. கொடாதவரின் ஸர்வ வித தபஸ், தானம் முதலிய பலன்கள் முழுதும் போய்விடும். விருதம், அத்யயனமின்றி பிக்ஷை யெடுக்கும் திருட்டு பிரம்ஹசாரிக்குப் போடுவது கூடாது. அவனை அரசன் திருடனைக் கருதி ஊரை விட்டுத் துரத்தி விட வேண்டும். பிக்ஷை, ஊறுகாய், கறி இவைகளை உபபாத்திரத்தினாலின்றி கையினால் கொடுப்பவனுக்கு ஸ்வர்க்கம் பிராப்தமாகிறதில்லை அதை வாங்கியுண்பவனும் அசுத்தனேயாவன். பாத்திரத்தில் வாங்கி அதை சூரியன் அக்கினிகளுக்குக் காண்பித்து குருவினெதிரில் வைத்துவிட வேண்டும். அவர் அனுமதி கொடுத்த பிறகு அதைப் பரிஷேசனம், ஆபோசனங்களைச் செய்து உண்டு பிறகு பாத்திரத்தைச் சுத்தி செய்து வைக்க வேண்டும். இவ்விதம் இரு காலங்களிலும் செய்து வர வேண்டும். குரு ஊரிலில்லாவிடில் அவர் பத்தினி, புத்திரர், உறவினர்களின் அனுமதியின் பேரில் புசிக்கலாம். பிரம்ஹசாரிகளுக்கும் ஆஹிதாக்கினிகளுக்கும் புசிப்பதில் அளவே கிடையாது. வேண்டிய அளவு புசித்து தங்களது ஸர்வ விருதங்களையும் கொஞ்சமும் லோபமின்றி அனுஷ்

டித்து வரவேண்டும். யதிக்கு எட்டும், வானப் பிரஸ்த னுக்குப் பதினாறும், கிருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டு கவளங்களும் புசிக்க அளவாகும்.

### ப்ரஹ்மயஜ்ஞம்

உபநயனம் ஆன மறுதினமோ நான்காம் தினம் முதலோ வேதாத்யயனம் செய்யாதிருந்தாலும் ப்ரம்ஹ யஜ்ஞ ஸ்தானத்தில் காயத்திரியைச் சொல்லி பிரம்ஹ யஜ்ஞத்தையு மனுஷ்டித்து வரவேண்டும்.

### ஸமிதாதானம்

யமதர்மராஜனுக்கு பகவானின் உத்திரவானது என்று பிரம்ஹசாரி ஸமிதாதானத்தை விட்டிருக்கிருனே அன்றே அவனது ஆயுளைக் கவர்ந்து விடலாம் என்பதாம். ஆகையால் அபமிருத்யுவிற்குப் பயந்த பிரம்ஹசாரி இருவேளைகளிலும் விடாமல் அவசியம் ஸமிதாதானத்தைச் செய்துவர வேண்டும். ஸூர்யாஸ்த மனத்திற்கு முந்தியேபோய் உலர்ந்த பலாசம் அது கிடைக்காவிடில் சமீ, வேதஸம், அரசுமுதலியவற்றினதைக் கொண்டுவரலாம். ஸமித்தானது பூச்சிகளல்லாததும் பட்டையோடு கூடியதும் ஓட்டையென்னும் கட்டைவிரல் நீளமும் மூடின விரல்கள் அளவுள்ளதும், வீர்யமுள்ள தாயும், கோணல், குட்டை, பொத்தல் இவைகளில் ஒரு தோஷமுமில்லாததுமான ஸமித்தால் ஹோமம் செய்ய வேண்டும். ஒருவாரம் விட்டுப்போய் விட்டால் அவன் அவகிர்ணீபிராயச்சித்தத்தைச்செய்து சுத்திபெறவேண்டும்.

### ஸகால ஸம்ஸ்காரமில்லாததின் ப்ராயச்சித்தங்கள்.

கர்ப்பாதானம் முதல் சௌளம் வரையிலுள்ள கிரியைகள் செய்யப்படாமலிருந்தால் கால்க்ருச்ரம் செய்துவர வேண்டும். மனதொப்பி விடப்பட்டதிற்கு அரைக்ருச்ரம்

செய்ய வேண்டும். எட்டு முதல் பதினாறு வயதுக்கள் செய்யப்படும் உபநயனங்களுக்கு வியாஹ்ருதி ஹோமமும் த்வந்ந, ஸத்வந்ந முதலிய 8மந்திரங்களால் ஆஜ்யாஹுதிகளும் செய்யவேண்டும். இதைச் செய்யாது செய்யும் உபநயனம் செய்தும் சூத்திரனுக்கு ஸமானமானவனேயாவான்.

## எந்தெந்த சுபங்களுக்கு எத்தனை பேருக்கு போஜனம்.

ருதுசாந்திக்குப் பத்து அல்லது பனிரண்டு பிராம்ஹணர்களுக்கும், கர்ப்பாதானப் பிரகரணத்தில் இருவர்களுக்கும், ஸீமந்தம், பும்ஸவனம் இவைகளுக்குப் பஹுபேர்களுக்கும், சௌளத்தில் ஐம்பது பேருக்கும், உபநயனத்தில் நூறு பேருக்கும், விவாஹத்தில் தன் சக்தியானுஸாரமும், ஆதானத்தில் நூறு பேருக்கும் போஜனம் செய்விக்க வேண்டியது. யாசகத்தால் செய்யப்பபட்ட உபநயன பலன் தானங்கொடுத்தவனுக்கும், சூத்திரனால் செய்யப்பட்டது நரகத்தையும் அடைவிக்கும்.

## ரஜஸ்வலா, கர்ப்பங்களுள்ளமாதா விஷயகர்மம்.

சௌளம், உபநயனம், விவாஹம் இவைகளுள் கர்த்தாவின் மாதா கர்ப்பிணியாகவோ ரஜஸ்வலையாகவோயிருந்தால் இவை செய்வது கூடாது. அப்படிச் செய்தால் தாயின் கர்ப்பத்திற்கோ, சிசுவிற்கோ, தம்பதிகளுக்கோ விபத்து நேரிடும். அக்காலங்களில் நாந்தீயும் கூடாது. மீறிச்செய்பவன் வ்ராத்யனாயும், ஸம்ஸ்காரங்களும் நிஷ்ப்ரயோஜனமாகி வைதிக கர்மாக்களுக்கு அதிகாரம் பெறமாட்டாதவனாகி விடுகிறான். புநருபநயனம் செய்துதான் ஆகவேண்டும். பிரம்ஹகூர்ச்சத்தையும் பானம் செய்து வைக்கவேண்டும். கர்ப்பம் ஐந்தாறு மாதங்களுக்குட் பட்டிருந்தால் சுபகாரியங்கள் கூடுமென சௌனகர் அபிப்ராயப்படுகிறார்.

## மந்த்ரோபதேசம் செய்பவனுக்குரிய லக்ஷணங்கள்

தகப்பன், பாட்டன், ஸஹோதரன், ஜ்ஞாதிகள், அவரவர் கோத்திரத்திற் பிறந்தவர்கள் ஒருவித அதிகாரிகளாவர். ஜிதேந்திரியனையும், தபஸ், தானங்களைச் செய்பவனையும், ஸத்தியஸந்தனையும், விஷயங்களைத் தெரிந்தவனையும், நியமம், சுத்திகளையுடையவனையும், ஸந்தேஹமற்றவனையும், குலீனனையும், கர்மானுஷ்டானத்தில் சிரத்தையுள்ளவனையும், தோஷமில்லாதவனையும், நிக்ரஹானுக்ரஹ சக்தியுள்ளவனையும், காயத்ரீ ஜபத்தில் மிகக் குசலனாயிருப்பவனும், வேதவித்தாயும், கோபமில்லாதவனாயுமிருப்பவன் ஆசார்யனாயிருக்க அர்ஹனாவன். யதி, விதி நிஷேதம் அறியாதவன், அபத்னீகன், உபகுர்வாணன், நைஷ்டிகன் இவர்கள் உபதேசஞ் செய்யக்கூடாது. ஸகோத்திரத்திலில்லாவிடில் அன்னிய கோத்திரத்தவர்களும், அவரவர் ஸூத்ரகாரர், பந்துக்கள் முதலியோரும் கௌணபக்ஷமாய்ச் செய்து வைக்கலாம். இது பிதா யில்லாத விஷயத்திற்காகும். தகப்பனில்லாதவனுக்கு தமயன் உபநயனம் செய்விப்பதில் உத்தமனாகிறான்.

## இரட்டையாய்ப் பிறந்தவர்களுக்கு ஸம்ஸ்காரம்

ஒரு தாய் வயிற்றில் இரட்டையாய்ப் பிறந்தவர்களுக்கு ஒரே லக்னத்தில் ஒரே வேதியில் ஒரே ஆசார்யன் ஜாதகரணாதி உபநயன பர்யந்தம் செய்யவேண்டும். இரண்டு பெண்களாய்ப் பிறந்தாலும் விவாஹமுமிப்படியே. ஒரு ஆண், ஒரு பெண்ணாய்ப் பிறந்தாலும் அவர்கட்கும் ஒரே லக்னத்தில் உபநயனமும், கலியாணமும் செய்யவேண்டும். இரண்டு பத்னிகள் மூலமாய் ஒரே லக்னத்தில் ஜனித்தவர்களுக்கும் இப்படியே தானாகும். இக்கடைசிக்கு மட்டும் வேதிகைகள் இரண்டும், ஆசார்யர்கள் இருவரும் நாந்தி பிரிக்கப்பட்டும் செய்விக்கவேண்டும்.

## ஊமை, பைத்தியம் முதலியோரது உபநயந விஷயம்

நபும்ஸகன், பிறவிக் குருடன், செவிடன், ஒன்றுந் தெரியாதவன், உளறுபவன், நொண்டி, கூன், குட்டையன், தீர்க்கரோகி, ரோகத்தினல் இளைத்து வருகிறவன், அங்கங் குறையுள்ளவன் ஆகிய இவர்கட்கும் உபநயனம் உண்டு. ஊமைக்கும், பைத்தியத்திற்கு மட்டும் கிடையாது. ஆனல் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் ஸம்ஸ்காரங்களைப் பெற்று யஜ்ஞாதிகள் செய்துவரலாமென ச்ருதியின் கருத்தாகும். ஊமை, பைத்தியங்களுக்கு ஆசார்யனே அவர்களைத் தொட்டுக்கொண்டு அனுக்ஞை செய்து காயத்ரீ ஜபித்து வரவேண்டும். விவாஹ ஸமயத்திலும் கன்யாஸ்வீகரணம், பாணிக்கிரஹணம், ஸப்தபதீ இவைகளை விட்டு மற்றவைகளை யெல்லாம் ஆசார்யனே நடத்தி வரவேண்டும். முடவன் விஷயத்திலும் ஸப்தபதீ இவைகளை யெல்லாம் ஆசார்யனே நடத்தி வரவேண்டும். பதிதர்களுக்கு உபநயனமில்லை. ஊமை, பைத்தியங்களுக்கு ஆசார்யன் அவர்களை காயத்ரீயைச்ரவணம் செய்விப்பதும், படிக்கும்படிச் செய்வதும் அவர்களுக்குபநயனமாகும். இது விஷயத்தைப் பற்றி போதாயனர் விசேஷமாய்க் கூறியிருப்பதைக் கண்டுகொள்ளவும்.

## ஸ்வீகாரம்

ஸ்வீகாரத்திற்கு ஸஹோதரனின் மகன் உத்தமாதிகாரியாவன். அன்னிய கோத்திரத்தான் கூடாது. ஜனக பிதாவின் கோத்திரம், தனம், ச்ராத்தங்களுக்குப் பாத்தியதை யில்லாமல் தத்தன் இழந்து விடுகிருன். ஆசௌசம், பரிவேத்ருத்தவம் இவை யெல்லாம் தத்துப் புகுந்த குலத்தை யண்டிச் செய்து வரவேண்டும். பரிவேத்ருத்தவம் என்பது மூத்தவனிருக்கும்பொழுது இளையவனுக்கு உபநயனம் முதலியவைச் செய்து வைத்தல். ச்ரௌத ஸ்மார்த்த கிரியைகள் யாவும் அவர் தத்துப்

புகுந்த விடத்தை யொட்டிச் செய்து வரவேண்டும். தத் தெடுப்பது ஜ்ஞாதிகளில் உத்தமமும், மாத்ரு வர்க்கத்தில் மத்யமமும், அன்னிய குலங்கள தமமுமாகும். பனிரண்டு நாளுள்ள சிசுவைத் தத்தெடுப்பது மிக உத்தமம். சௌள காலத்திற் பெறுவது மத்தியமம். உபநயனமானவனை க்ரஹிப்பது அதமாதமம். விவாஹமானவனைக்கிரஹிப்பது குலக்ஷயம். பெற்றோர்களை விட்டவனை எடுப்பது முற்றிலும் கூடாது. புத்திரனே கிடைக்காவிடில் உபநயனம் ஆன இரண்டாம் புத்திரன் கூடும். வேத நிஷேதப்படி எந்த ஆபத்திலும் மூத்தபுத்திரனை தத்துகொடுப்பது கூடாது. விதவை தன் புத்திரனை தத்து கொடுத்தால் நரகமடை வாள். புத்திரனில்லாத விதவை தகப்பன், ஸஹோதரன் இவ்விருவரில் ஒருவர் அனுமதி பெற்று ஸ்வீகரிக்கலாம். அனுமதி பெருது செய்பவள் நரகமடைவாள். விதவை புரு ஷனது அனுமதி யிருந்தாலன்றிப் பிள்ளையை தத்து கொடுப்தோ, எடுத்துக் கொள்வதோ கூடாது. தனக்கு நெருங்கினவனை பெற்றோர்கள் அனுமதியின் பேரில் ஸ்வீ கரித்துத் தன்பந்துக்களுடன்கூடி நடுவீட்டில் வியாஹ்ருதி ஹோமம்செய்து ஸ்வீகாரம்செய்துகொள்ளவேண்டும். ஒரே புத்திரனையுடையவன் தத்துகொடுப்பதுகூடாது. கொடுப் பதினல் முன்னோர்கள் சந்ததி நாசமடைகிறது. மூன்று பிள்ளைகளுக்குக்குறைந்தால் புத்திரதானம் செய்யக் கூடாது. ஸ்வீகரிப்பவர் பலவந்தித்து ப்ரார்த்தித் தாலன்றித்தானேமேல் விழுந்து (சொத்தாசையினலோ, வேறேதாவது காரணத்தினலோ) கொடுக்கக்கூடாது. மாதா பிதாக்களால் சந்தோஷமாக மனம் ஒப்பி ஜல பூர்வமாகதத்து கொடுக்கப்பட வேண்டும். அவன்யாரா யினும் ஔரஸனுக்கு ஸமானமாகி ஸ்வீகார பிதாவை புத் தென்னும் நரகத்தினின்றும் விடுவித்து பித்ருகடனைத் தீர்த்தவனாய்ச் செய்விக்கிருன். தானகவே குலம் விட்டுக்

குலம்புகுபவன் காண்டபிரஷ்டன் எனப்படுவான். பித்ருகுலம் விட்டுவேறு குலம் புகுபவன் எவ்விதக் கிரியைக்கும் உபயோகப்படமாட்டான். ஆச்வலாயன, போதாயன ஸூத் திரங்களில் புத்திரஸ்வீகார ப்ரயோகங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன.

## குருக்களின் நிரூபணம்.

மூத்தகுமாரன் தன் ஸஹோதரனைத் தகப்பன் போல் ரக்ஷித்தும் தன்பிள்ளைகளைப் போல் அபிமானித்தும் வர வேண்டும். தம்பிகள் தமயனிடத்தில் பயபக்தியுடனி ருந்து அவன் மனம் கோணாது நடந்துவரவேண்டும். உப நயனம் செய்து விட்டால் மாத்திரமின்றி அவர்களை வேத சாஸ்த்திரம் அப்பியஸிக்கச் செய்யாமலும், தானும் படியா மலு மிருப்பவனும், கெட்ட நடத்தையுள்ளவர்களோடு காலம் கழித்து வருபவனும் குருவாகவே மாட்டான். கூலிக்கு வேதமோதிவைப்பவர் **உபாத்தியாயர்** எனப்படு வார். கூலியை எதிர்பாராது செய்பவன் **ஆசார்யன்** ஆவான். முந்தினவனை விடப் பிந்தினவன் பதின் மடங்கு சிலாக்யனா கிறான். தருமத்தையுபதேசிப்பவனே **ஆசார்யனாவான்.** புத்திரனைப் பெற்று அவனுக்குபநயனம் முதலியன செய் வித்து வேதம் முதலியவைகளைப் படிப்பித்து, அவனுக்கு விருத்தியைக் கற்பித்து வைப்பவன் **மஹாகுருவெனப்** படுகிறான். பிரம்ஹசாரிக்கு மாதா பிதாக்களைவிட ஆசார் யன் விசேஷ பூஜ்யனாகிறானென மனு அபிப்பிராயப்பட்டு விதிக்கிறார். வயதிற்சிறியவனாயிருந்தாலும் வயோதிகர் ஓர் வித்தையை அவனிடம் கற்பாராயின் அவனை அவர் குருவைப்போல் பாவிக்கவேண்டும். வயதிற்சிறிய அங்கிரஸ் நன்கு கற்றுணர்ந்து தன்வயது முதிர்ந்த சிற்றப்பன், பெரியப்பன், அவர்பிள்ளைகளுக்குப் படிப்பித்து வந்த காலத்தில் அவர்களை நோக்கிப் பிள்ளைகாள் தெரிந்து கொண்டீர்களா வென்று கேட்டார். பிள்ளைகாள் என்று

சொல்லிவிட்டதால் அவர்கள் அவர் மீது குற்றஞ்சாட்டித் தேவதைகளிடம் விண்ணப்பஞ் செய்துக் கொள்ள அவர்கள் அவர் சொன்னது கிரமந்தான், படிப்பில்லாதவன் வயது சென்றவனாயிருந்தாலும் பாலனுக்கு ஸமானம் என்றார்கள். வயது, தலைநரைப்பு, பணம், அதிக பந்துஜன பலம், அதிக சம்பாத்யம் இவைகளினால் ஒருவன் குருவாகிறதில்லை. வேதவேதாந்தங் கற்றறிந்தவன் சிறுவனாயிருந்தாலும் கிழவனுக்கு ஸமானகுரு(பூஜ்ய)னாகிறான். குரு, மாதா, பிதாக்களுக்கு சுச்ரூஷை செய்வதே பெருந்தவமாகிறது. இவர்களது அனுக்ரஹ விசேஷமே மூன்று லோகங்களைப் பெறுவதற்கும், மூன்று ஆச்ரமங்களையடைவதற்கும், மூன்று வேதங்களைக் கற்றறிவதற்கும். மூன்று அக்கினிகளைப் பெறுவதற்கும் காரணமாகிறது. அவர்களுக்கு எவ்விதத்திலும் எந்த கஷ்டத்திலும் அவமானமடையச் செய்யக்கூடாது. கெடுதியை மனதினால் நினைத்தாலும் ப்ரூணஹத்தி தோஷத்தை யடைந்துவிடுகிறான். ஜியேஷ்டப்ராதாவை அவமதிப்பவன் கோரமான நரகத்தைப் பெறுகிறான். கர்வியும், கார்யா கார்யங்களைத் தெரிந்து கொள்ளாதவனும் துர்நடத்தையுடையவனும் குருவாயினும் அவனை விட்டுவிட வேண்டும். தகப்பன் குற்றமுள்ளவனாயினும் அவனைப் பரித்தியாகம் செய்யக்கூடாதுஎனயமனின் கட்டளையாகும். படிப்பித்தவரும் குருவைப்போல் பாவிக்கப்படவேண்டும். விசேஷ காலங்களில் வந்தால் குருவைப்போல் அவருக்கும் பிரயோஜனம் செய்து வைக்கவேண்டும். த்விஜர்களுக்கு அக்கினியும், எல்லா வர்ணத்தாருக்கும்பிராம்ஹணனும், பெண்களுக்கு பர்த்தாவும், எல்லோருக்கும் அதிதியும் குருவாவர். பத்து வயதுள்ள பிராம்ஹணனும், நூறு வயதுள்ள க்ஷத்திரியனும் தகப்பன் புத்திரர் போலாகின்றனர். தொண்ணூறு வயதுள்ள சூத்திரன் த்விஜர்களால் மரியாதைப் பெறக்

கடவன், பணம், பந்துத்வம், வயது, ஸதாசாரம், வித்தை இவ்வைந்தும் பூஜ்யமானவைகளே. ஆனால் முதல் வஸ்துவை விட இரண்டாவது முறையே படிப்படியாய் சிரேஷ்டமாகும். ஸகல தர்மமும் வித்தையினால் அறியப்படுகின்றன. ஆதலால் வித்தை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

## மார்கம் விடவேண்டியவர்களைப் பற்றியது

வண்டி வந்தால் ஐந்து முழமும், யானைக்கு நான்கு முழமும், பசு, க்ஷுத்ரமானவர்களுக்கு நான்கு முழமும் ஒதுங்கவேண்டும். எதிரே வித்வான், அரசன், தொண்ணூறு வயதானவன், கர்ப்பிணி, பாரம் சுமந்து வருபவன், ரோகி, விவாஹத்திற்கு வருபவர், நாட்டுப் பெண், மந்தன். சிறு பிள்ளை, குருடன், முடவன் கிழவன், பித்தன், வானப்ரஸ்தன், பிராம்ஹணன், குரு, பலமற்றவன், ஸ்நாதகன் இவர்களுக்கு வழிவிடவேண்டும். அரசனும், பிராம்ஹணனும் மற்ற கும்பல்களோடு வந்தால் அவர்களுக்கு மட்டும் வழி விடுதல் போதுமானது. அரசன் பிராம்ஹணனுக்கு வழி விடவேண்டும்.

## அபிவாதநம்

ஸமிதாதானம் செய்த பிறகு பெரியவர்களை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெறவேண்டும். அபிவாதயே யென்றால் நமஸ்கரிக்கிறேன் என்று பொருள். பெரியவர்களை பெயரை யிட்டுக் கூப்பிடக்கூடாது. அதற்காக கடைசியில் போஹ் என்பது ஐயா எனப் பொருள்படும். தன் பெயரைச் சொல்லித் தான் இன்னான் என்று தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

பசுவின் முதுகைச் சொரிந்து பிறகு அரசமரத்தைப் பிரதக்ஷிணம் செய்து வணங்கி குருமார்களுக்கும், பிராம்

ஹண ச்ரேஷ்டர்களுக்கும் நமஸ்காரம் செய்யவேண்டும். காலையில் எழுந்ததும் குருவை நமஸ்கரிக்கவேண்டும். காதில் கையை வைத்துச் செய்வது ஸ்வர்க்கத்தையும் ஆயுளையும் தரும். ஒரு கையால் நமஸ்கரிப்பவனது தர்மங்கள்போய் விடும். மூர்க்கர்களுக்கு ஒற்றைக் கையினால் வந்தனமும், குருவிற்கு நமஸ்காரம் மட்டு மும் செய்யவேண்டும். இடது கையினால் வலப் பாதத்தையும் வலக்கையினால் இடப்பாதத்தையும் தொட்டு நமஸ்கரிக்க வேண்டும். பெரியோர்களைக் கண்ட தும் நமஸ்கரியாவிடில் பிராணன் சரீரத்தைவிட்டு நீங்க த்வரைகொள்ளுகிறது. பிரணமத்தால் சமனமடைகிறது. மதனி, மாமி, தமக்கைகளையும், இன்னும் வயதிற்பெரிய ஸ்திரீகளையும், குருபத்னிகளையும் நமஸ்கரிக்க வேண்டும். ஆனால் பாதஸ்பர்சம் அபிவாதனங்கள் வேண்டியதில்லை. காலில் பாதரக்ஷையோடாவது தலையில் முண்டாசோடா வது, ஸமித் பாணியாயிருந்தாவது நமஸ்கரிக்கக் கூடாது. குருவின் படுக்கை, ஆஸனங்களில் சிஷ்யன் ஏறி உட்காரக் கூடாது. அவரைக் கண்டவுடன் எழுந்து நமஸ்கரிக்கக் கடவன். பெரியவர்களை நமஸ்கரிப்பதின் பலன் ஆயுள், புத்தி, கீர்த்தி, பலம் இவைகள் விருத்தியடைகின்றன. ஸமித், புஷ்பம், தர்ப்பம், நெய், தீர்த்தம், அன்னம், மண், அக்ஷதை, அக்கினி, அர்க்கியம் இவைகளில் ஏதேனு மொன்றை தரித்தவனை நமஸ்கரிப்பவன் ஒருநாள் முழுதும் உபவாஸம் இருக்கக் கடவன். பாதரக்ஷை தரித் திருப்பவன், மடிதப்பாயிருப்பவன், இருளிலிருப்பவன், படுக்கையிலிருப்பவன், ஜபம், ஹோமம் இவைகளைச் செய்துக் கொண்டிருப்பவன் இவர்களை நமஸ்கரித்துவிட் டால் மூன்று நாளுபவாஸத்தால் பாவந்தொலையும். நமஸ் கரிக்கத்தகாதவர்கள் பலருண்டு. பஹிஷ்டையாயிருப்ப வள், சூதகமுள்ளவள், புருஷனுக்குக்குத் தீங்கு செய்தவள், கர்ப்பத்தைக் கலைத்தவள் இவ்விதப் பெண்களையும்,

பாஷண்டன், பதிதன், விராத்யன், மஹாபாதகம் செய்தவன், நாஸ்திகன், துஷ்டன், திருடன், செய் நன்றிமறந்தவன், கர்வி, பித்தன், ஓடுகிறவன், எண்ணெ தேய்த்துக் கொண்டிருப்பவன், ஸ்னனஞ் செய்கிறவன், அசுத்தனயிருப்பவன், பல்தேய்த்துக் கொண்டிருப்பவன், வாந்தியெடுப்பவன், கொட்டாவி விடுபவன், யாகத்தில் ரித்விக் முதலிய கார்யத்தைச் செய்கிறவன், யோகி, ரோகி, பணத்திஞல் கர்வமடைந்திருப்பவன், வெகுதூரத்திலிருப்பவன், மதம்பிடித்தவன் முதலியவர்களுமாம். க்ஷத்திரியனேயோ வைச்யனேயோ எவ்வளவு ஆசாரம் வித்தை இவைகளோடு கூடியிருந்தாலும் அவர்களை நமஸ்கரித்து விட்டவன் ஒரு நாள் முழுதும் உபவாஸமும், சூத்திரனை நமஸ்கரித்து விட்டவன் மூன்று நாட்கள் உபவாஸமுமிருக்கவேண்டும். வண்ணன், சண்டாளன் இவர்களை நமஸ்கரித்தால் சாந்த்ராயண வ்ருதமனுஷ்டிக்க வேண்டும். அல்லது க்ஷத்திரிய், வைச்ய ப்ரணமத்தில் பத்து பிராம்ஹணர்களை நமஸ்கரிப்பதும் சூத்திரப்ரணமத்தில் ஸசேலஸ்னனம் செய்து நூறு பிராம்ஹணர்களை நமஸ்கரித்து இஷ்ட தேவதையை அர்ச்சிப்பதும் பிரயாச்சித்தமாகும். ஸபை, யஞகசாலை, ராஜ கிருஹங்களிலிருக்கும் ஸமயத்திலும் நமஸ்கரிப்பது அவச்யமன்று.

## கோஷ்டி வந்தன மஹிமை

பிராம்ஹணர்களின் கூட்டத்தை தர்சிப்பது பாவத்தை நாசஞ்செய்கிறது. நமஸ்கரிப்பது அதிகமான மங்களத்தைக் கொடுக்கிறது. அவர்களை அர்ச்சிப்பதால் பரமபதமும் கிடைத்துவிடுகிறது. சிஷ்டர்களின் பாதஸ்பர்சமும் சிலாக்கியமாகும். வயோதிகர் மிகவும் பூஜ்யராவர் மூன்று தலைமுறையாக குலம், கோத்திரம், தேசம் இன்னதென்று அறியமுடியாதவருடன் விவாஹ ஸம்பந்தம். நமஸ்காரம், சிராத்தத்தில் நிமந்த்ரணத்திற் கழைப்பன

வுங் கூடாது. புத்திரன், சிஷ்யன், தௌஹித்ரன், ஜாமாதாக்கள் தவிற மற்ற சிறியவர்களும் ஸந்தியாவந்தனமானவுடன் நமஸ்கரிக்கத் தக்கவராவர். ஸஜாதியர்கள் ஒருவரை யொருவர் நமஸ்கரிப்பது ஆசீர்வதிப்பதும் செய்துக் கொள்ளலாம். தன்னை ஆசிர்வாதம் செய்யும் ப்ரதிவந்தனம் செய்த வயதிற் மூத்தோரை மறுபடியும் நமஸ்கரிக்கவேண்டும். அபிவாதனம் செய்த பிறகு கையைக் கூப்பவேண்டும். விக்கிரஹம், யதி, த்ரிதண்டி இவர்களை நமஸ்கரிக்காமல் உபேக்ஷயா யிருந்து விட்டவனுக்கு பாபப்பிராயச்சித்தம் உபவாஸமேயாகும். ஒரே ஊரில் வஸிப்பவர் பத்து வயது தாரதம்மியமுள்ளவர் ஒருவருக்கொருவர் ஸகாவாகின்றனர். வித்தையை போதிப்பவர் ஐந்து வயது தாரதம்யத்தால் ஸ்னேஹராகின்றனர். மூன்று வயது தாரதம்யத்தால் ச்ரோத்திரியர்களும் ஸ்நேஹிதராகின்றனர். இதற்கு மேற்பட்ட வயதுள்ளவர்களை நமஸ்கரிக்கவேண்டும். ஸ்வல்ப வயது வித்யாசமுள்ள தமயன் தாயாதிகளும் சிறுவனால் நமஸ்கரிக்கத் தகுந்தவர்களாவர். எதிரே ச்ரோத்திரியர் வந்தால் அவரை அவசியம் யோக க்ஷேமம் விசாரிக்கவேண்டும். சிறியவன், ஸ்னேகிதன், சூத்திரன் இவர்களையும் ஸௌக்கியமாவென்று விசாரித்து விட்டுப் போகவேண்டும். தனிமையான காடு வழிகளில் தனியாக வரும் ஸ்திரீயை நீ யார், எங்கு போகிறுயம்மா, பயப்பட வேண்டாம், என்னால் ஆகவேண்டிய உபகாரம் ஏதாவதுண்டா வெனத் தாய், தமக்கை போல் பாவித்து விசாரித்து விட்டுச் செல்லவேண்டும். திரிலோகங்களிலும் சுகத்தைத் தரத் தகுந்தது **ஸ்வஸ்தி** யெனப்படும். பிராம்ஹணன் யாவரையும் ஸ்வஸ்தி யெனக் கேழ்க்கவேண்டும். பிராம்ஹணர்களின் ஆசிர்வாதம் நம் கவசம் அம்பினாலும், இரும்பு நாராசத்தாலும் பிளக்கப்பட்டாலும் வஜ்ராயுதங்களாலும் பிளக்கப்படாது பலவத்தாகும். (பவதி, ஸ--பகே, பகினீக்கள்)

வயதிற் சிறிய மாமன், சிற்றப்பன், மாமனர், சித்விக்கு களுக்கு நமஸ்காரமின்றி எழுந்து மரியாதை செய்து தன் பெயரை உச்சரிப்பது மட்டும் போதும். அபிவாதனம் வேண்டியதில்லை. இல்லாவிடில் பரஸ்பரம் நமஸ்கரித்துக் கொள்ளலாம். குரு, மாதா பிதாக்களுள் குருதான் ச்ரேஷ்டராவர். அவர் அனுமதியின் பேரில்தான் மாதா பிதாக்கள் வந்தால் நமஸ்கரிக்கவேண்டும். ஆசார்யன், அவருக்கு ஆசார்யனேடு கூட யிருக்கும்பொழுது குரு விற்கு நமஸ்காரம் கிடையாது. அவரது குருவிற்கு மாத் திரந்தான். வித்தை ஆசாரங்களால் ஒருவன் பூஜ்யனு கிருன். தூரதேசஞ் சென்று நெடு நாட்கள் கழித்து வந்த பந்துஜன ஸ்திரீகளையும் நமஸ்கரிக்கவேண்டும். நமஸ்கார, அபிவாதன, பாதஸ்பர்சங்களுக்கு உபஸங்க்ரஹ ணம் என்று சொல்லப்படும். முலைப்பால் கொடுத்து வளர்த்தவள், அன்னம் கொடுத்துக் காப்பாற்றினவன், பயத்தினின்றும் ரக்ஷித்தவன், உபநயனம் செய்வித்தவன் வயதிற் சிறியவனுயிருந்தாலும் மந்திரம், வித்தைகளைச் சொல்லி வைத்தவன் இவர்களுடைய பத்னீக்களும் குரு வைப் போல் பாவிக்கத் தகுந்தவராவர்.

## ப்ரத்யபிவாதநம்

அபிவாதனம் செய்தனைப் பெரியவர் ஆயுஷ்மான் பவ என்றும், பிறகு அவனது பெயரைச் சொல்லிக் கடைசி அக்ஷரத்தை மூன்று மாத்திரை நீட்டியும் சொல்லுவது முறையாகும். நமஸ்கரித்தவனை ப்ரதி நமஸ்காரமோ, ஆசீர்வாதமோ செய்ய, ப்ரத்யபிவாதன ஸ்வரூபமும் ப்லுத மாய்ச் சொல்லத் தெரியாதவனுக்கு அபிவாதனம் செய்ய வேண்டியதில்லை. ஸம்ஸ்க்ருதத்திற் சொல்லப்படும் அபி வாதனத்தின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ள மாட்டாத மூடனுக்குத் தன் பெயரை மட்டும் தெரிவித்துக் கொள் ளலே போதுமானது. நமஸ்கரிக்கப்பட்டவன் ஊமை

போலிருந்தால் அவன் சுடுகாட்டில் மரமாகப் பிறந்து, கழுகு, காக்கைகளால் குத்தப்பட்டும், நமஸ்கரித்தவனது பாவத்தில் பாகம் பெற்றும் நரகத்தை யடைகிறான். நமஸ்கரித்தவன் சண்டாளனு யிருந்தாலும் அவனைக் கள்ளைக் குடியென்று தத்க்ஷணமே சொல்லிவிடவேண்டும். யஜ்ஞத்தில் யஜமானன் சிறியவனு யிருந்தாலும் ஸப்யர்கள் அவன் பெயரைச் சொல்லாமல் போ! யஜமான, இதை இப்படிச் செய்வீர் என மரியாதையுடன் சொல்லவேண்டும். யஜமானன் ஸமீபத்திலில்லாதவர்களுங்கூட அவன் விஷயமாய்ப் பேசும்பொழுது தத்ரபவான் யஜமான வென்று மரியாதையுடன் மறைவிலும் பேசவேண்டும். வயதிற் பெரிய பந்து ஜனங்களைப் பெயரிட்டு அழைக்கலாகாது.

## ப்ரம்ஹசாரியின் தர்மம்

பிரம்ஹசாரியானவன் ஒரே வேளை ஸ்னானம் செய்து இரு வேளைகளிலும் பிக்ஷை யெடுத்து ஸதாமேகலை, அஜினம், தண்டம், கௌபீனம், கடிஸூத்ரம் இவைகளைத் தரித்து வரவேண்டும். குருகுலவாஸம் செய்யவேண்டும். குருவின் முகம் தவிற அக்கம் பக்கம் பாராமல் வேதமோதி விளையாட்டு, சோம்பல்களை விட்டு படிப்பில் கண்ணுங் கருத்துமாயிருக்கவேண்டும். தன் கையிற் கிடைத்ததை குருவினிடம் ஸமர்ப்பித்து விடவேண்டும்; தினந்தோறும் ஸந்தை ஆரம்ப முடிவில் குருவை நமஸ்கரித்து ப்ரணவத்தைச் சொல்லவேண்டும். இரு கைகளையும் கூப்பிக் கொண்டுச் சொல்லவேண்டும். ஐம்புலனை (சரீரம், வாக்கு, இந்திரியம், மனது, புத்தி) அடக்கி குரு சுச்ரூஷை செய்துக்கொண்டு, வலது கை தவிற மற்ற அவயவங்களை யெல்லாம் துணியால் மறைத்தும் அவர் ஆஸனம், ஆஹாரம், உடை இவைகளுக்குத் தன்னுடையது சற்றுத் தாழ்வடைந்ததாயும், அவர் நித்திரை

செய்த பிறகு தான் தூங்கியும், அவர் எழுந்திருக்குமுன்னரே தான் எழுந்திருந்தும், அவர் கட்டளை யிடுங்காலத்தில்தான் படுத்தும், உட்கார்ந்தும், புசித்தும், வேறொன்றையுங் கவனித்துமிராமலும், அவருக்கு நாலடி தூரத்திலேயே இருந்துகொண்டும், வெகு தூரத்திலிருந்தால் கிட்டே ஓடி வந்தும், படுத்திருந்தால் தலை குனிந்து வாய் பொத்தியும், அவரது ஆஸனத்திற்குத் தன்னுடையது சற்றுத் தாழ்வாகவும், அவரது பெயரை அவர் மறைவிலும் வாய் விட்டுச் சொல்லாமலும், அவரைப் பற்றிப் பேசும்பொழுதெல்லாம் பெரியவாள் என்றுவ்யவஹரித்தும், தன் குருவை நிந்திக்குமிடத்தில் தான் காது கொடுத்துக் கேளாது இரு காதுகளை மூடிக்கொண்டும், பெண்களுடன் ஏகாந்தமாயிருக்கும்பொழுது நெருங்காமலும், தான் வண்டியிற் செல்லும்பொழுது அவரை ஸந்தித்தால் கீழே யிறங்கி நமஸ்கரித்தும், ஒருவர் காற்று ஒருவர்மேல் படாமலும், பெருங்காற்றடிக்கும்பொழுது அவருடன் பேசாமலும், பிரயாணத்திற்கூட அவருடன் ஸமமாயுட்காராமலுமிருந்து வர வேண்டும். அவர் காலாலிட்டதைத் தலையால் செய்து வருபவனாய்க் கொஞ்சமும் ஆலஸ்யமின்றி சொன்னதை உடனே செய்து முடித்துவிட்டு ஆச்சுதென்றறிவிக்க வேண்டும். குருவின் துர்க்குணத்தை யெடுத்துரைப்பவன் (பரிவாதம்) கழுதையாகவும், நிந்திப்பவன் (கெட்ட குணத்தை ஆரோபித்தல்) நாயாகவும், அவர் பணத்தை நியாயமின்றிப் புசித்தவன் சிறிய புழுவாகவும், ஆசிர்வாதத்தைப் பெறுதவன் பெரிய புழுவாகவும் பிறப்பான். அவர் கோபத்திலிருக்கும்பொழுதும், தூரத்திலிருக்கும்பொழுதும் நமஸ்கரிக்கக் கூடாது. தனக்கு போதிக்கும் குரு புத்திரனுக்கும் மரியாதை செய்ய வேண்டும். ஆனுல் கை, கால்களைப் பிடித்தல், ஸ்னனம் செய்வித்தல், உச்சிஷ்ட போஜனம் செய்தல், பாதப்ரக்ஷாளனம் செய்தல் முதலியன கிடையாது. குரு பத்னி சிஷ்யனுக்கு

எண்ணெ தேய்த்தல், ஸ்னானம் செய்வித்தலும், இவன் அவளுக்கு கை, கால்களைப் பிடித்தல், புஷ்பம் சூட்டுதல் முதலியனவும் கூடாதாம். ஸஹோதரி, பெண், தாய் இவர்கள் ஒருவரிடத்திலும் தான் தனியாக இருந்து வருவது கூடாது. காமக்ரோதங்கள் பண்டிதனையும் மூடனாக்கி ஸ்திரீகள் விஷயத்தில் மயக்க மடையச் செய்து விடும். ஆகையால் சிஷ்யன் குரு பத்னீயுடன் அவச்யமான காலத்தில் இரண்டொரு பதில் வார்த்தையைச் சொல்லி விட்டு உடனே ஒதுங்கிவிட வேண்டும். திரிகரண சுத்தியுள்ள ஜிதேந்திரியன் வேதத்தை முழுதும் கற்பதால் உண்டாகும் பலனைப் பெறுகிறான். பிறரைக் கடுமையாய் அதட்டிப் பேசுவது கூடாது. தேவர், ரிஷி, பிதிர் தர்ப்பணங்களைச் செய்தும், தேவ பூஜை செய்தும், தித்திப்பு வஸ்துவைத் தின்னாமலும், குடை பாதரக்ஷைகளைத் தரியாமலும், பிறர் தோஷத்தை எடுத்துச் சொல்லாமலும், ஆடல், பாடல்களை விட்டும், தாம்பூல, சந்தன, புஷ்பங்களைத் தரியாமலும், வம்பு பேசாமலும், ஸ்திரீகளைக் கண்ணெடுத்தும் பாராமலும், பிராணிகளை எந்த விதத்திலும் ஹிம்ஸியாமலும், பிறர் உண்டு மிஞ்சியதைப் புசிப்பது (சேஷான்னம்,) பகலில் உறங்காமலும், அலங்கரித்துக் கொள்ளாமலும், கை தட்டல், காலை நீட்டல், துடையை ஆட்டல், தலையாட்டுதல், சிரித்தல், காரித்துப்பல் இவைகளில்லாமலும், பணத்தில் ஆசை வைக்காமலும், மிதமாய்ப் புசித்தும், குரு சாப்பிடுவதற்கு முன் தான் சாப்பிடாமலும், அவர் உட்காருவதற்கு முன் தான் உட்காராமலும், அவர் படுக்கு முன் தான் படுக்காமலும், குரு முகங்கோணாமல் சுச்ரூஷையும், படிப்பும் உள்ளவனாயுமிருக்கவேண்டும். தரையிற் படுத்தும், குருவிற்கு தண்ணீர் கொண்டு வரல், பசுவிற்குப் புல் கொண்டு வரல், அவருக்கு வேண்டிய ஸமித், தர்ப்பம், வஸ்திரம் முதலியவைகளைக் கொண்டு வந்து கையில் கொடுக்கக்கடவன். பிரம்ஹசாரி பகலில் உறங்கினதற்குப் பிராயச்சித்

தம் ஸ்நானம் செய்து ஸூர்யனை அர்ச்சித்து நூற்றெட்டு காயத்திரிகளை ஜபிக்க வேண்டும். பிக்ஷாடனம் செய்யாமல் ஒரே அன்னத்தைப் புசிப்பவனும், ஸ்நானம் செய்யாமல் புசிப்பவனும் நூற்றெட்டு காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். ஆபோசனம் செய்யாமற் புசித்து விட்டவன் எண்ணூறு காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். எதையும் அவருக்குத் தெரிவித்தே புசிக்க வேண்டும்.

இவ்விருதங்களை அனுஷ்டியாமல் வேதாத்யயனம் செய்வது நிஷ்பலமாகும் கூத்து பார்க்கலாகாது. குங்குமம் சுமக்கும் கழுதைக்கு வேதார்த்த மறியாதவன் ஒப்பாவான். அத்யயனம் கொஞ்சம் பண்ணியிருந்தாலும் அதனர்த்தம் தெரிந்திருக்கவேண்டும். தெரியாமல் நாலு வேதங்களைக் கற்றவனைவிடக் கொஞ்சம் அறிந்தவனே சிறந்தவனாகிறான். ப்ரதி தினம் தர்ம சாஸ்த்ரம், வியாகரணம், புராணம், இதிஹாஸம், மற்ற ஆக்கியானங்கள், மஹான்களது சரித்திரம் இவைகளைப் படித்து வர வேண்டும் என்று சந்திரிகையிற் கூறப்பட்டிருக்கிறது. தன் சாகையை விட்டுப் பிறர் சாகையை அத்யயனம் செய்தல், அதன்படி ஸம்ஸ்காரங்களைப் பெறுபவன் சாகாரண்டனென இழிந்தவனாகிறான். பாம்பைக் கண்டு பயந்திருக்கிறவன் போலவும், கடனுக்குப் பயந்தவன் போலவும், ராக்ஷஸ ஸ்திரீகளைக் கண்டு பயப்படுகிறவன் போலவும் நரகத்திற்குப் பயந்து வித்தைகளைக் கற்கவேண்டும். கறையான் மிகவும் சிறியதாயினும் பெரிய புற்றைத் தன் ஸ்வயம்பிரயத்தனத்தினாலேயே கட்டி விடுவது போலும் சிறுகச் சிறுக நடந்து (காசி யாத்திரை போல்) வெகு தூரம் போய் வருவது போலும் வித்தையைச் சிறுகச் சிறுக க்ரஹித்து விட வேண்டும். வீண் கதைகளைப் படிப்பது, அதைக் கேட்பது, சீட்டு, சொக்கட்டான் ஆடுவது, நாடகத்தில் ஆவல், ஸ்திரீ ஸஹவாசம், சோம்பல், தூக்கங்களே படிப்பிற்கு

அறுவித விக்னங்களாகும். குரு சுச்ரூஷை, வேண்டும் பொருளையளிப்பது, தனக்குத் தெரிந்ததை அவருக்குச் சொல்லிக் கொடுப்பதுமான மூவுபாயங்களாகும். வேதத்தை அங்கங்களுடன் கற்க வேண்டும். சொல்லப்பட்ட நியமங்களெல்லாம் தவத்திற்கொப்பாகும். நியமமின்றி கற்ற வேதம், பிம்ஹுயக்ஞும், இதர வைதிக காரியங்களுக்கு உபயோகப்படமாட்டா. தவிறவும் ஆயுளைக் குறைத்து ச்வப்ர மென்னும் நரகத்தையடைவிக்கும். ப்ராஜா பத்தியம் ஸௌம்யம், ஆக்நேயம், வைச்வதேவம் என நான்கு விருதங்களை அத்யயன முடிவிற் செய்து அதை உத்ஸர்ஜனம் செய்யவேண்டுமென ஆபஸ்தம்பர் விதிக்கிருர். ஒவ்வொன்ருக ஆரம்பித்து விஸர்ஜனம் செய்யவேண்டும். போதாயனர் ஹோத்ரு விருதம், சுக்ரிய விருதம், உபநிஷத விருதம், ஆரணிய விருதம், இவைகளை உத்தராணத்தில் சுக்ல பக்ஷத்தில் நல்ல நக்ஷத்திரத்தில் ஆரம்பித்து நடத்தி வரவேண்டும் என விதிக்கிருர்.

## புநருபநயநம்

அஜினம், மேகலை, தண்டம், பைக்ஷசரியம், விருதங்கள் இவைகளை மத்தியில் தரித்தும், அனுஷ்டித்தும் வராமலிருப்பவன் எவனே அவன் புனருபநயனம் செய்துக் கொள்ளவேண்டும். ஸிந்து, ஸௌவீரம், ஸௌராஷ்ட்ரம், அந்தியதேசம், அவந்தீ, அங்கம், வங்கம், கலிங்கம் இத்தேசங்களுக்குப் போய் வந்தவனும், குரு, தமயன், தகப்பன்மார்களைத் தவிற இதர உச்சிஷ்டத்தைப் புசித்து வருபவனும், ஸ்திரிகளோடு சாப்பிடுபவனும், சிராத்தான்னம், ஸூதகான்னம், கன்று போட்ட பத்து தினங்களுக்குள்ளேயே அப்பசுவின் பாலை உபயோகிப்பவனும், தானுகப் பெருகின பால், (நெய்க்கசண்டு) வெங்காயம், பூண்டு, பெருங்காயங்களை உபயோகிப்பவனும், ஸங்கான்னம், சூத்திர ஸொத்தினன்னம், தாஸியின் அன்னம் (ஸொத்து மூலம்)

இவைகளைப் புசித்தவனும், ஸுராபானம், மூத்திரம், புரீஷம் இவைகளைக் குடித்தவனும், மாத்ரு, பித்ரு, ஆசார்யர்களைத் தவிர இதரனுக்குப் பிரேத கிருத்யத்தைச் செய்தவனும், ஒட்டகம், மனிதர், யானை, குதிரை, கழுதை இவைகளின்ஒன்றின் பாலைக் குடித்தவனும், கடலைக் கடந்தவனும், தமயனுக்கு முந்தி உபநயனம் ஆன தம்பியும் புனருபநயனம் செய்துக் கொள்ளவேண்டும். புனருபநயனம் செய்துக் கொண்டவர்களுக்கு சிரோமுண்டநம், தண்டம், மேகலை, பிக்ஷாடனம் இவைகள் வேண்டியதில்லை. வஸந்தம் முதலிய காலநியமமும் இதில் பார்க்கவேண்டியதில்லை. நெய்யை ஸாவித்திரியினால் நூறு தடவை அபிமந்த்ரணம் செய்து அதைச் சாப்பிடுவதினால் பிராயச்சித்தம் பெற்றவனாகிறான்.

மலம், மூத்திரம் இவைகளை பக்ஷித்தவன் பிராஜாபத்ய க்ருச்ரம் செய்துக்கொண்டு பஞ்சகவ்ய ஸ்நானபானங்களைச் செய்துக்கொண்டு புனஸ் ஸம்ஸ்காரங்களைப் பெறுவான். சண்டாளான்னத்தைப் புசித்தவன் சாந்த்ராயண விருதத்தை யனுஷ்டிக்கக் கடவன். மதுமாம்ஸ பக்ஷகன், தப்தக்ருச்ரம், மௌஞ்சீ ஹோமங்களைச் செய்து புனருபநயனத்தால் சுத்தியைப் பெறுவான். ஒருவனுக்குக் கர்மம் நடந்த பிறகு, உயிருடன் தேசாந்தரத்திலிருந்து திரும்பி வருவானாயின் அவனை நெய்க்குடத்திலாட்டி எடுத்து ஸ்நானம் செய்வித்துப் பிறகு ஜாதகர்மாதிகளைச் செய்துவைக்க வேண்டும். மாமன், மாதாமஹன், பிதாமஹன், மாதா, பிதா, குரு, ஆசார்யர்களுக்கு மட்டும்தான் சவக்ரியைச் செய்ய வேண்டும்.

### பிரம்ஹசர்ய காலாவதி

பிரம்ஹசாரிகள் மூன்று வேதங்களையும், நாற்பத்தெட்டு அல்லது முப்பத்தாறு அல்லது இருபத்திநான்கு

அல்லது பனிரண்டாண்டாவது குரு குல வாஸத்தில் அத்யயனம் செய்து வர வேண்டும். பிறகு அவரது அனுமதியின் பேரில் அதன் பொருள்களை யறிந்தவனும், வேதவ்ருதங்களை யனுஷ்டித்தவனும், ஸமாவர்த்தனம் பெறுவான். விருதத்தோடு ஒரு வேதத்தையாவது கற்று குருதக்ஷிணை கொடுத்து, அவருடைய அனுமதியின் பேரில் கிருஹஸ்தாச்ரமம் புகுவான்; அல்லது ஸந்நியாசம் பெற வேண்டும்.

## கோதாந நிரூபணம்

குரு குல வாஸம் பனிரண்டு வருடமிருக்கச் சக்தியற்றவன் ஆறோ, மூன்றோ, ஒன்றோ, அரையோ அல்லது கால் வருஷமாவதோ, அதமாதமபக்ஷம் பனிரெண்டு அல்லது மூன்று நாட்களாயினும் உபநயனம் ஆனதும் இருந்து பிறகு கோதான விருதம்செய்து ஸமாவர்த்தன விருதம் பெறவேண்டும். கோதான விருதம் வேதத்தைக் கற்று முடித்தவன் பதினாரும் வயதிற் செய்துக் கொள்ளலாம். அவ்வயதிற்குட் செய்வது அனுசிதமாகும். அதன் பிறகு ஒரு வருஷம் பிரம்ஹசர்யத்திலிருந்து அக்னியை யுபாஸித்து வர வேண்டும். வித்தையை ஸமாபனஞ் செய்து விருதங்களை முடிக்காதவர் **வித்தியாஸ்நாதக**ரென்றும், வித்தையை ஸமாபனஞ்செய்யாமல் விருதங்களை ஸமாபனஞ் செய்து வருபவர் **வ்ருதஸ்நாதக**ரென்றும், வித்தை, விருதம் இவ்விரண்டையும் ஸமாபனம் செய்து வருபவர் **உபய ஸ்நாதக**ரென்றும் கூறப்படுவார்கள். வ்ருதஸ்னனம் பெற்று விவாஹத்திற்குப் பின் வேதங்களின் அர்த்தங்களை யறிந்து படிப்பை நிறுத்தி வர வேண்டும்.

## ஸ்நாதகன் விதி

பிரும்ஹசாரி குருகுலவாஸம் செய்து வித்தையப்யஸித்த பிறகு அவரது அனுமதியின் பேரில் விருதஸ்னனம் செய்யவேண்டும். அவர் உத்திரவு கொடுத்ததும் அவ

ருக்கு ஒரு பசுவைத் தானம் செய்யவேண்டும். அது அவரது கிருபைக்குப் பாத்திரமாக ஹேதுவாகும். பூமி, பொன், பசு, குதிரை, குடை, பாதரக்ஷை, தான்யம், வஸ்த்ரம் இவைகளில் ஏதேனுமொன்றை விருத ஸ்னானம் பெற்ற பிரம்ஹசாரி குரு தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். சக்தி யில்லாதவன் சமையலுக்குரிய காய் கறிகளையாவது கொடுக்கவேண்டும். இதற்கு முன் ஏதேனும் அகப்படு வதைக் கொடுத்து வரலாம். குருகுலவாஸத்தில் அவருக் காகக் கஷ்டப்பட்டுத் தேடி ஒன்றுங் கொடுக்க வேண்டிய தில்லை. இவன் உலகில் குருவிற்கு எதைக் கொடுத்தாலும் அவர் படிப்பித்த ஓர் அக்ஷரத்திற்கு ஈடாகாது. ஆகை யால் தன்னாலியன்ற மட்டும் தக்ஷிணை முதலானவைகளைக் கொடுத்து விசேஷமாய் ஸந்தோஷிப்பித்து வேறு ஆச் ரமம் புகுவது ச்ரேயஸ்கரமாகும்.

## நைஷ்டிகப்ரம்ஹசரியம்

தன்னாயுள் முழுவதும் குருகுல வாஸஞ் செய்து மனோ வாக்காயங்களை யடக்கினவனாயிருந்து இறப்பவன், சாச் வதமான மோக்ஷத்தை யடைகிறான். குருவில்லா விடத்து அவர் புத்திரன், பத்னீ, அவர் ஜ்ஞாதி, அவர் சிஷ்யன், இவன் ஸஹாத்யாயீ அல்லது அக்கினி ஸாக்ஷியாக ஸ்வதந்த்ர மின்றி யிருந்து வரவேண்டும். இது தான் நைஷ் டிக ப்ரம்ஹசர்யமாகும். இதிலிருப்பவனுக்கு வேறு விவாஹம் ஸன்னியாஸம் யாதுமவசியமில்லை. இப்படிப் பட்டவனுக்கு மறு பிறப்பே கிடையாதென்று வேதமே உத்கோஷித்து விட்டது. குரு சுச்ரூஷை, வித்யாப்யாஸம் இரண்டுமே அவனுக்கு ஸ்வரூபமாகும். அலங்காரமின்றி ஜிஹ்வோபஸ்தங்களை யடக்கினவனாய்த் திரிகால ஸ்னானங் களையும், இருவேளை ஸமிதாதானத்தைச் செய்துக் கொண்டும், அவன் ப்ரம்ஹத்தியானத்தி லீடுபட்டு வர வேண்டும். கூனன், குள்ளன், குருடன், நபும்ஸகன்,

நொண்டி, தீர்க்கரோகி இவர்கள் இதற்கு அதிகாரிகளா வார். ஸ்தோத்திரம், நிந்தை, பட்டு அல்லது கம்பள ஸ்பர்சம், ஸுரூபம், குரூபம், ருசி, அருசி, வாஸனை, நாற்றம் இவைகளை அவ்வவ்விந்திரியங்களால் அனுபவிக்குங்கால் யாருடைய மனது ஒரு மாறுபாடையும் அடைகிற தில்லையோ அவனே ஜிதேந்திரியனாவான். தூங்கும் பொழுது இவனுடைய ரேதஸ் தானே வெளிப்படுமாயின், அப்பாவந் தொலைய அவன் ஸ்னானஞ் செய்து, ஸூர்யனை அர்ச்சித்து புநர்மாமைத்விந்த்ரியம் என்றரிக்கை மூன்று தடவை ஜபிக்க வேண்டும். மனம் விகாரமடைந்து ரேதஸ் வெளி யானால் இவன் ப்ருஹ்மசர்யம் ப்ரஷ்டமடைந்ததாகும். இவன் தனியாகப் படுக்க வேண்டும். பாயு, உபஸ் தம், ஹஸ்தம், பாதம், வாக்கு ஐந்து கர்மேந்த்ரியங்களும், கண், காது, மூக்கு, நாக்கு த்வக் இவ்வைந்து ஜ்ஞாநேந்த்ரியங்களும், மனதும் ஆகப் பதினொன்றும் அடக்கப்பட வேண்டும். மனதொன்றடக்கப்பட்டால் மற்றவை யாவும் அடக்கப்பட்டதாகும். ஸ்திரீயை ஸம்போ கித்த ப்ரம்ஹசாரி செய்யும் அவகீர்ண விருதத்தை புத்தி பூர்வகமாய் ரேதஸை மனோ விகாரத்தால் வெளிப்படுத் தும் ப்ரம்ஹசாரி யனுஷ்டிக்கக் கடவன். அதன் ஸ்வரூப மாவது, மனு, வஸிஷ்டர், ஆபஸ்தம்பர் முதலியோர் கூறு வது. நான்கு சாலைகள் சேறுமிடத்தில் பெண் கழுதையை ஆலபநம் செய்து நிருதி, யமன், ரக்ஷஸ் தேவதைகளை யுத்தேசித்து ஸ்தாலீபாக முறைப்படி யஜனம் செய்ய வேண்டும். காமாவகீர்ணோஸ்மி, அவகீர்ணோஸ்மி, காம காமாய ஸ்வாஹா முதலிய மந்திரங்களாகும். அதன் சர்மத்தைத் தரித்து நான் அவகீர்ணி, எனக்கு பிக்ஷை கொடுங்களென ஏழு வீடுகளிற் பிச்சை யெடுத்து ஒரே வேளை புசித்து ஒரு வருஷ காலம் இம்மாதிரி கழிக்க வேண்டும்.

மூங்கில்தடி, வெளுப்பான வேஷ்டி, உத்தரீயம், இரண்டு பூணூல், தண்ணீரையுடைய கமண்டலு, குடை, செருப்பு, அழகிய தலைப்பாகை, பொற்குண்டலம் அல்லது கடுக்கன்களை தரித்து, படிப்பில் மிகுந்த ஊக்கத்தோடும், க்ஷௌரம் செய்துக்கொண்டு புஷ்ப, சந்தனங்களைத் தரித்துக்கொண்டு பார்ப்பவர்களின் மனம் களிக்கும்படி யிருந்து வரவேண்டும். தீர்த்தாடனம் செய்யவேண்டும். அக்கினியில் ஸமித்தாலும் நெற்களாலும் ஹோமம் செய்ய வேண்டும். விருதம் பெற்று ஸ்னானம் செய்தவன் விவாஹமின்றி யிறந்தால் இவனுக்கு நல்லுலகங் கிடையாதாகையால் விவாஹ ஸமீபத்தில் இவ்விருதத்தை யனுஷ்டிக்கவேண்டும். ஆச்ரமமில்லாதவன் பிராயச்சித்தத்திற் கர்ஹனாகையால் இவன் ஏதாவது பிரம்ஹசாரியாகவோ, கிருஹஸ்தனாகவோ யிருக்கவேண்டுமே யின்றி இவ்வலங்காரங்களுடன் வெகுகாலம் இரண்டாச்ரமங்களிலும் சேராது யிருந்து வரக்கூடாது. இவன் **அஷ்டாங்க மைதுநந்தை** விடவேண்டும். அதாவது :—ஸ்திரீயை ஸதாஸ்மரித்தல், அவளைப் பற்றிப் பிதற்றல், அவளுடன் வேடிக்கையாய் விளையாடல், அவளை உற்று நோக்கல், அவளிடம் ரஹஸ்யம் பேசல், நான் அவளை யிப்படியெல்லாம் அனுபவிப்பேன் என நினைத்துவரல், அதற்காக மற்ற வேலைகளில் சிரத்தையின்றி யத்தனித்து வருபவனவுமாம்.

## விவாஹம்: கந்யாலக்ஷணம்

விருத ஸமாபனம் செய்துவிட்டு விவாஹம் செய்துக்கொள்ளவேண்டும். செம்பட்டை மயிர், தீரா நோய், ரோமம் மிகுந்தவள், புருஷனை விடப் பருத்திருப்பவள், பூனைக்கண்ணி, கருப்பானவள், பெரும்பேச்சுக்காரி, நக்ஷத்திரம், நதி, மரம் (ரேவதி, காவிரி, வேம்பு) போன்ற பெயரையுடையவள், பயங்கரமான பெயரை யுடையவள்,

மிகக் குட்டை, நெட்டை, அங்கங் குறைந்தவள், தலையில் கொஞ்சமாக மயிரையுடையவள், அன்னியனை மோகித் திருப்பவள், தைர்யம் பெற்றவள், பரு, மீசையுள்ளவள், கர்க்கஸ்வரம், காக்கைக்குரல், கர்ஜனைக்குரல்களையுடைய வள், கண்ணில் கெடுதியுடையவள், முழங்கால்களில் மயிர் மிகுந்தவள், ஸதா நகைப்பவள், கைகால்கள் வெளுத் திருப்பவள், சிவந்த கண்ணையுடையவள், அங்கங் கோணி யிருப்பவன், சரீர திட்டமின்றி கைகால்கள் பருத்திருப் பவள், புருவங்கள் சேர்ந்திருப்பவள், பற்கள் விசாலமா யிருப்பவள் இரட்டையாய்ப் பிறந்தவள், பந்துக்களற்ற வள், கூடப்பிறந்தவரே யில்லாதவள், கூனி, பலஹீன மானவள், துர்நடத்தையுடையவள், கொடிய வார்த்தை களைப் பேசுபவள், தாய், தகப்பனின்றி வருபவள் ருது வாகாதவள் முதலியவர்களை விவாஹம் செய்துக் கொள் ளக்கூடாது. மாத்ரு வர்க்கத்தில் ஐந்தும், பித்ரு வர்க் கத்தில் ஏழு தலைமுறை விட்டவளாயும், ஸகோத்திரம், ஒரே ப்ரவரமில்லாதவளாயும், வயதில் ஐந்து வருடமாவது சிறியவளாயும், புருஷனைவிட உயரமில்லாதவளாயும், பார்ப்பதற்கு இளைத்தவளாயுமிருக்கிறவளை விவாஹம் செய்துக்கொள்ளுவது ஸம்பத்யபிவிருத்திக்கு ஹேது வாகும். வாதம், குன்மம், அச்மரீ, குஷ்டம், மஹோதரம், பகந்தரம், மூலம், கிரிகிணீ என எட்டும் மஹாரோஹங் கள். இது ஸம்பந்தமானவளை விவாஹத்திற்கு விலக்கி விடவேண்டும், ஒரே பெண்ணையுடையவன் அவள் மூலம் பிறக்கும் ஸந்ததியால் தன் அபர காரியத்திற்கு அதிகாரி யாவானென அவளைப் புத்திரிகா பாவத்தோடிருப்பதால் அவளை மணக்கக்கூடாது. விச்வாமித்திரர், ஜமதக்னி, பரத்வாஜர், கௌதமர், அத்திரி, வஸிஷ்டர், காசயபர் ஆக எட்டு பெயர்களும் கோத்திர ரிஷிகளாவர். மரீசி, ப்ருகு, அங்கிரஸ், புலஸ்த்யர், புலகர், கிருது, தக்ஷன், அத்திரி, வஸிஷ்டர் ஆக இவர்களே நவப்ரஜாபதிகளாவர். இவர்

களில் தக்ஷனுக்குப் பெண்வம்சமாதலால் கோத்திரமில்லை. அகஸ்த்யர், விச்வாமித்ரர் சேர்ந்து ப்ரம்ஹதேவன் முகத்தினின்று வம்ச கர்த்தாக்களாய்ப் பிறந்தவர் பதின்மர் கோத்திர மூல ரிஷிகளாவர். எந்த பிரம்ஹ கோத்திரத்திலும் இதில் ஏதாவது ஒரு பெயர் ஸம்பந்தப்பட்டிருக்கும். மரீசிக்கு அவர் புத்திரரான காச்யபர் மூலமே கோத்திரம் எழுந்தது. அங்ஙனமே வேறு சிலரும் புத்திரனையே கோத்திர ரிஷியாகக் கொண்டவருமுண்டு. ஸகோத்ரத்திலும், ஸமான ப்ரவரத்திலும் விவாஹம் செய்தால் மாத்ருகமனம் போன்ற மஹாபாபம் என்றும் அதனுல் பிறப்பவன் கர்ம சண்டாளனென்றும் ரிஷிகள் அபிப்ராயப் படுகின்றனர். மாமன், அத்தை, தாயின் சகோதரிகளின் பெண்கள் ஜ்ஞாதிகளாதலால் மணந்தவன் சாந்த்ராயண விருதம் அனுஷ்டிக்கவேண்டும். இவன் இஹபரலோக காரியங்கள் ஒன்றுக்கு மர்ஹனுகமாட்டான். தெரியாது விவாஹம் செய்துக்கொண்டவன் அவளை விலக்கித் தாயைப் போல் பரிபாலித்து வருவான். அவளிடத்தில் ஸங்கமம் செய்ததற்கு அதிக்ருச்ரம் ப்ராயச்சித்தமாகும். தெரிந்து மணந்தவன் குருதல்பத்தைப் புணர்ந்தவன் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும். கீழ்ச்சொன்ன பந்து வர்க்கம் தாயினுடையதும், தகப்பனுடையதுமான அவ்வித பந்துக்களையும் கூட விவாஹம் செய்துக்கொள்ளக்கூடாது. மனுஸ்ம்ருதிக்கும் யாஜ்ஞவல்க்கியஸ்ம்ருதிக்கும் விரோத இதர ஸ்ம்ருதி வசனங்கள் ப்ரமாணங்களாகா. லோகாசாரமும் ஸ்ம்ருதிக்கு விரோதமாயிருப்பது ப்ரமாணமாகாது. தாயின் சக்களத்தியான ஸபத்னீ மாதாவின் ஐந்து தலைமுறைகளுக்குட்பட்ட கன்னிகையை விவாஹம் செய்துக் கொள்ளலாகாது. மீறிச்செய்தால் ஸங்கர தோஷமேற்படும். (முன்பக்கத்தில் அகஸ்த்யருங்கோத்ரரிஷி).

தத்தன், க்ரீதன், க்ருத்ரிமன், புத்திரிகா புத்திரன் இவர்கள் இரண்டு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் இருவிடத்திலும் (சில விடத்தில்), சொத்துக்களைப் பெறுகின்றனர். ஆனதால் தாய் வழியில் ஐந்து தலைமுறையும், தகப்பன் வழியில் ஏழு தலைமுறையும் இரு கோத்திரங்களிலும் விலக்கி இவர்களுக்கு விவாஹம் செய்யவேண்டும். தர்மமாயிருந்தாலும் லோக நிந்தைக்கிடமாகும் காரியத்தை விட்டுவிடவேண்டுமென்று மனு விதிக்கிறார், ஸ்திரீ, அநுபநீதர்களோடு புசிப்பது. பழயதைச் சாப்பிடுவது, அத்தை, மாமன் பெண்களை மணப்பதும் கூடாதவையாகும். வித்தை, ஸந்தர்ன ஸம்ருத்தி, ஸம்பத்து, தாந்யம், பசுமாடு இவைகளுள்ளவர்களுடனும், ஆசாரம், குலம் குணம் (காமம், ரோமம். ரோகம், தோஷம் முதலியன இல்லாத), ஸம்பந்தம் செய்யவேண்டும். ராஜஸேவை செய்வதாலும், தகாதவர்களுக்கு வைதிக கர்மங்களைச் செய்து வைப்பதாலும், பசுவை விற்பதாலும், சிற்பவேலை, கெட்ட வியவஹாரங்களிற் புகுந்து பிழைப்பதினாலும், சாஸ்த்ர விரோத காரியங்களைச் செய்து வருவதாலும் குலங்கள் கெட்டு நசித்துவிடுகின்றன.

### கந்யாதாந காலம்

சிறு வயதில் வெட்கம் தெரியாது துணியின்றி தெருப் புழுதியில் விளையாடி வருபவள் **நக்நிகை** யெனப்படுவாள், அதுதான் விவாஹத்திற்கு சிரேஷ்டமான காலமாகும். எட்டு வயதுள்ளவள் **கௌரீ** யெனவும், ஒன்பது வயதுடையவள் **ரோஹிணீ** யெனவும், பத்து வயதுடையவள் **கன்னி** யென்றும் அதற்கு மேற்பட்டவள் **ரஜஸ்வலே** யென்றும் வியவஹரிக்கப்படுவர். புருஷனுக்கு உபநயன காலமே ஸ்திரீயின் உபநயனஸ்தானமான விவாஹத்திற்கு காலமாகிறது. பனிரண்டு வயதாகியும் விவாஹம் செய்யாமலும், ரஜஸ்வலேயானவளை விவாஹம் செய்யாத அவனது

மாதா, பிதா, ப்ராதாக்கள் அவளது ரஜஸ்ஸைப் பருகும் தோஷத்தை யடைந்தவர்களாய் நரகமடைகின்றனர், எட்டாவது வயதில் விவாஹம் செய்துவிடுபவர் நாகப் ருஷ்டம் என்ற நல்லுலகையும், ஒன்பது வயதுள்ளவளைச் செய்துக் கொடுப்பவன் வைகுண்டத்தையும், பத்து வய திற் செய்பவன் ப்ரம்ஹலோகத்தையு மடைவர். அவள் தேஹத்தில் ரோமம் முளைத்துவிடுவதும், ஸ்தனங்கள் வளருவதும், ரஜஸ் வெளிவருவதும் ஸோம, கந்தர்வ, அக்கினிகளாலனுபவிக்கப் பட்டவளாகி அவளது மாதா பிதாக்களுக்கு இஹபர க்ஷேமத்தைக் குலைத்து துர்க் கதிக்கு ஆளாக்கிவிடுகின்றன. ப்ரூணஹத்தி தோஷத்தை யடைகின்றனர். பிள்ளை பெருத மலடியும், பிள்ளைகளைப் பெற்றுப் பெற்று அவைகளை சாகக் கொடுப்பவளும், விவாஹமின்றி ருதுவானவளும் வ்ருஷளீ யெனப்படுவள். அவளை மணந்த வ்ருஷளீபதி அபாங்க்தேயனும், முகாவ லோகனத்திற்கு மநர்ஹனுவன். அவன் எப்பொழுதும் ஸூதகம் பெற்றிருக்கிறுன். ப்ரம்மஹத்தி தோஷத்தை யடைந்தவனுகிறுன். அவன் ஒரு தரமாவது அவளைப் புணர்ந்தால் அத்தோஷம் துலைய மூன்று வருஷம் பிக்ஷை யெடுத்துப் புசித்தும் ஸதாஜபம் செய்தும் வரவேண்டும். ஒரு மாதம் அவளைப் புணர்ந்தவன் சூத்திரனுக்கு ஸமான னுகி நாயாய்ப் பிறக்கிறுன். இரண்டு வயதிற் கலியாண மாகிச் சாகும் குழந்தைக்கும் புதைக்காது மந்திர பூர்வக மான தஹனம் செய்யவேண்டும். குணவானுயிருப்பவன் கிடைத்து விட்டால் நக்நிகையாயிருக்கும் போதும் கொடுத்துவிடலாம். குணமில்லாதவனுக்குக் கொடுப்பது எப்பொழுதுங் கூடாது.

ருதுமதியாகி மூன்று வருஷ காலம் வரை பிதா அவளை விவாஹம் செய்துக் கொடாவிடில் அவள் தானே யாரையாவது வரிப்பது தோஷமாகாதெென மநு அபிப் ராயப்படுகிறுர்.

விவாஹ மத்தியில் ரஜஸ்வலையானால் அவளைத் தனியாக ஒதுக்கி நான்காம் நாள் ஸ்நாநம் செய்த பிறகு முன்னிருந்த விவாஹாக்நியிலேயே விதிவத்தாய் அந்தந்த க்ரியைகளை நடத்தவேண்டும்.

தத்தம் செய்தவளைக் கொடாத தகப்பன் திருடனாகிறான். வாசா கொடுப்பதாய்ச் சொல்லப்பட்டவள், மநஸால் ஸங்கல்பம் செய்தானவள், கங்கணபந்தமானவள், ஜல பூர்வகமாய் தாநம் செய்யப்பட்டவள், பாணிக்ரஹணமானவள். அக்நி ப்ரதக்ஷிணம் செய்தானவள் (அம்மி மிதித்தல்) புநர்ப்பூவுக்குப் பிறந்தவள், இவ்வெழுவரும் குலத்தை தஹிக்கும் பௌநர்ப்பவை (புநர்ப்பூ) யாவர். இவர்களை மணப்பவர் குலம் வ்ருத்தியே ஆகாது. நிச்சயதார்த்தமான பிறகு வரன் கெட்டதென்று தெரிந்தால் அவனுக்குக் கொடுக்கவேண்டியதில்லை. தோஷமில்லாதவனுக்குச் சொன்னதை மறுப்பதே மஹாபாபமாகும். நிந்திக்கப்பட்டவள், நோயாளி, தூர தேசத்திலிருப்பவள், கபடமாய்க் கொடுக்கப்பட்டவள் இவர்களை த்யஜிப்பது தோஷமாகா. தள்ளிவிடல் என்பது ஸப்தபதிக்கு முந்தின விஷயமாகும். அதற்குள் வரன் மரித்தாலும் வைதவ்ய தோஷமேற்பட்டுவிடாது. புநர்விவாஹத்திற் கர்ஹமானவளே. பெண்ணை வரித்த பிறகு வரன் தேசாந்த்ரம் போய்விட்டால் அவள் மூன்று ருதுகாலம் வரை ப்ரதீக்ஷித்துப் பிறகு வேறு பர்தாவை யடையலாம். க்ஷத, அக்ஷத (ருதுவாகாதவள்) யோநிகளுக்கும், புருஷனால் அநுபவிக்கப்பட்டவளுக்கும், அநுபவிக்கப்படாத விதவைக்கும் புநர்விவாஹங் கூடாது.

## கந்யாதாநாதிகாரி

பிதா, பிதாமஹன், ஸஹோதரன், ஜ்ஞாதி, மாதா, மாதுலன், மாதாமஹன், இதர பந்துக்கள் கந்யாதாநாதிகாராவர். முந்தியவரில்லாவிடிற் பிந்தியவற் செய்யலாம்.

அதிகாரி தத்தம் செய்துக் கொடுக்குங் காலத்தில் வ்யாதி; பைத்தியம் முதலியன ஒன்றுமிருக்கக்கூடாது.

## அஷ்டவித விவாஹங்கள்

சக்தியாநுஸாரம் பெண்ணை யலங்கரித்து யாசிக்கப் படாமலேயே ஓர் ப்ருஹ்மசாரியை யழைத்து அவனுக்கு விதிவத்தாய் பாணிக்ரஹணம் செய்விப்பது ப்ருஹ்மவிவாஹ மெனப்படும். இவ்வித விவாஹத்தால் பிறக்கும் புத்ரன் இரு குலத்திலும முன்பத்து, பின்பத்து, தானுமாக இரு பத்தோரு தலைமுறையிலுள்ள புருஷர்களை பாபவிமோசநம் செய்விக்கிறான். யஜ்ஞம் செய்து வைக்கும் ரித்விக்குக்கு கந்நிகையைக் கொடுப்பது தைவ மெனப்படும். இதில் ஜநித்தவன் தன்னோடு முன்னேழு பின்னேழு குலத்தாரை உத்தாரணம் செய்விக்கிறான். ரிஷிகள் கூலி வாங்கி வேத மோதிவைத்தவர்களல்லர்; சிஷ்யனது பக்திக்காகத்தான். அதுபோல் பணத்திற் காசைப்பட்டவர்களின்றி தர்மம் செய்ய உத்தேசித்தவர்களாய் பிள்ளையினிடம் கோமிதுந மெனப்படும் ஒரு காளை அல்லது பசு ஒன்றோ இரண்டோ பெற்று அவனுக்கு கந்நிகாதாநஞ் செய்வது ஆர்ஷ மெனப் படும். இதனால் பிறப்பவன் பதிமூன்று முன்பின் சேர்ந்து பெயர்களை நற்கதி யடைவிக்கிறான். நீங்களிருவரும் சேர்ந்து தர்மாநுஷ்டாநஞ் செய்து வாருங்களெனச் சொல் லிக் கொடுப்பது ப்ராஜாபத்ய மெனப்படும். இவனும் தன் னோடு முன்னாறு பின்னாறு புருஷர்களை பாவநம் செய்து வைக்கிறான். கந்யாசுல்க மெனப்படும் விலைக்கு வாங்கு வதுபோல் பணத்தை அவளுக்கும் அவள் பெற்றோர் களுக்கும் கொடுத்து மணப்பது ஆஸுர மெனப்படும்.

காமத்தினாலாணும் பெண்ணும் ஸம்மதித்துச் செய் துக்கொள்ளும்விவாஹம் காந்தர்வ மெனப்படும். அவளுக்கு மவனைச் சேர்ந்தவர்களுக்கும் இஷ்டமின்றி பலாத்காரமாய் ஒருத்தியை அபஹரித்து வருவது ராக்ஷஸமாகும். வஞ்சனை

யினால் ஒருத்தி தூங்கும்பொழுதோ, மதிமயங்கிக் கிடக்கும் பொழுதோ, ஆசாரமா யில்லாதிருக்கும்பொழுதோ மேல் விழுந்துப் புணர்வது பைசாச விவாஹமெனப்படும். முன் நான்கும் சாஸ்த்ரீயமாகும். பின்னான்காகாது. ப்ராஹ்ம ணார்ஹமன்று. முதற் கூறப்பட்ட நான்காலுதிப்பவன் வைதிகனாயும், தேஜஸ், ஸம்பத், ஸந்தானம், ரூபம் குணங் களோடு இஹபரங்களில் ஸுகமாய் தம்பதிகள் ஸந்தோ ஷித்து வாழ்ந்து வருவர். பின் நாலாவதாலுண்டாகு மவன் நாஸ்திகனாய், வேத, அநுஷ்டானத்வேஷியாய், பொய் பித்தலாட்டங்களால் ஜீவித்து நிந்திக்கப்பட்ட வனாய் பாபியாவான்.

பெண்ணை யுத்தேசித்துக் கொடுக்கப்படும் பணம் (சுல்கம்) ஜலபூர்வகமாய் தத்தம் செய்யப்படவேண்டும். அதை அவள் பிதா தம்பதிகளின் ஆடையாபரணங்களுக் கின்றி இதரமானவைகளுக்குபயோகப் படுத்தக் கூடாது. அதற்கு சற்றேறக்குறைய ஆடையாபரண பூமிகளைக் கொடுக்கவேண்டும். இது சாஸ்த்ரீயமே யாகையால் தோஷமே யில்லை யென மந்வாதிகள் ஒப்பியிருக்கின்றனர்.

பெண், ஸஹோதரி, அவள் மக்கள் இவர்கள் மநந் நொந்தால் குலம் நசித்துவிடும். தாரத்தையும் ஆடை யாபரணங்களாலலங்கரித்து இருவரும் ஸுகித்திருந்து வருவது தேவதைகளின் நித்ய ஸாந்நித்யத்திற்கு இட மாகிறது. வீடுகளில் சுபம் நேரிடுங் காலங்களில் பெண், ஸஹோதரி முதலானோர்களுக்கு வஸ்த்ரம் முதலியன அளித்து வரவெண்டும். அவர்கள் மநந்நொந்து சபித்தால் குடும்பம் நாசமாய்ப் போய்விடும்.

யமன் சொல்லுவது :—சுல்கங் கொடுத்து பெண்ணைப் பெறுவது ஆஸுரமாகும். விற்கும் பிதா தம்பதிகளின் மல மூத்ரங்களை புஜிப்பவனாகிறான். மீளா நரகிற்காளா கிறான். இதால் ஜநிக்கும் ஸந்ததியும் ஏழு தலைமுறை

களையும் தஹிக்கிறது. வாங்கப்பட்டவள் தாஸிக்கு ஸமாந மாதலால் அவள் ஹவ்யகவ்யங்களுக்கநர்ஹை யாவள். அவளை மணந்தவன் பாஷணத்திற் கநர்ஹ அபாங்க்தேய வ்ருஷளீயுமாகிருன். பெண்ணின் புடவையைக் கூட தாயா ருபயோகிக்கக்கூடாது. பிதா சுல்கபணத்தில் பைசாவும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆஸுரம், காந் தர்வம் முதலிய நான்கிலும் முதல் முதல் பெண்ணின் பரிக்ரஹமிருந்தபோதிலும் பிறகு ஓர் சுபமுஹூர்த்தத்தில் ஹோமம் முதலிய விவாஹத்திற் கங்கமானவைகளை ப்ராஹ்மணர்கள் முன்னிலையிற் செய்யவேண்டும்.

கநகம், பூ, கந்யா, க்ருஹம், தாஸி, காராம்பசு, திலம் ரதம், கஜம், அச்வமிப்பத்தும் மஹாதாநங்களெனப்படும்.

**கந்யாதாந பலன்** விச்வஜித் யாகத்திற்கும், விதிவத் தாய்ச் செய்யப்படுவது ஜ்யோதிஷ்டோமம், அதிராத்ரம் முதலியவைகளை சதாவ்ருத் செய்வதாலுதிக்கும் பலனைத் தருகின்றது.

## ஏககாலத்தில் சுபத்வய நிஷேதம்

ஒரே மாத்ரு புத்ர, புத்ரீக்களுக்கோ ஒரே முஹூர்த் தத்தில் விவாஹம் செய்வது கூடாது. இரண்டு சுபங் களுக்கும் மத்தியில் ஒரு வர்ஷ விராமமாவதிருக்க வேண் டும். வர்ஷங்கள் பேதித்தால் ஆறு மூன்று மாத விராமமே போதும். ப்ராதாக்களுக்குச் சேர்ந்தாப்போல் உபநயநமுங் கூடாது. புத்ர, புத்ரிகளுக்குங் கூடாது. அதால் நிச்சயமாய் அசுபம் ப்ராப்தமாகிறது. புத்ரீயின் விவாஹாநந்தரம் புத்ரனுக்குச் செய்வதே சுபகரம். இரு சுபங்களும் ஒரே திநமானல் ஊர்கள், முஹூர்த்த காலங் கள் வேறுபட்டிருக்கவேண்டும். இது கௌணபக்ஷமே. இரட்டையாய்ப் பிறந்தவர்களுக்கோ, பிந்நோதரர்களுக்கோ ஒரே முஹூர்த்தத்திற் செய்யலாம்.

மூத்தாளுக்கு ஜநித்தவன் ஜ்யேஷ்டன, இளையாளின் பிள்ளை கநிஷ்டனென்பது பிசகாகும். இரு புத்ரருள் வய திற் பெரியவனே மூத்தவனுவன். இரட்டையாய்ப் பிறந்த வர்களுக்குள் முதலிற் பிறந்தவனே இளையவனுவன். இவை அப்பொழுது கர்ப்பத்தில் மேலுங் கீழுமாக இருந் திருக்கவேண்டும். பக்கவாட்டான கர்ப்பத்தில் ஜநநத்தை யநுஸரித்து ஜ்யேஷ்ட கநிஷ்டர்களாகின்றனர்.

தத்தனிருக்கும்பொழுது ஔரஸன் பிறந்துவிட்டால் தத்தன் கநிஷ்டனேயன்றி ஜ்யேஷ்டனுகமாட்டான். தத்த னுக்கு வயது இருபதாயிருந்தாலும் ஔரஸனுக்கு மூன்று நான்காயிருந்தாலுங் கூட ஔரஸனுக்கான பின்புதான் தத்தனுக்கு விவாஹம் செய்யவேண்டும். தத்தனுக்கு ஜநககோத்ரத்தில் அவன் ஸந்ததியாரில் விவாஹம் செய் வது கூடாது. பத்து தலைமுறைகளாவது கழிந்திருக்க வேண்டும். பிதாவற்ற ஸபத்நீபுத்ரர் விஷயங்களில் இந் நியமங்களை கவனிக்கவேண்டியது அநாவச்யம்.

## ஜ்யேஷ்டமாஸவிவாஹ நிஷேதம்

ஸீமந்த புத்ரன், புத்ரிக்கு ஆடியில் விவாஹங்கூடாது தம்பதிகள் ஒருவருக்கு ஆடி ஜந்மமாஸமாயிருந்தால் அவ் வளவு பாதகமில்லை. ஜந்மமாஸம், ஜந்மநக்ஷத்ரம், ஜந்ம திதி, ஜந்மதிநம் இக்காலங்களில் சௌளம், உபநயநம், வித்யாஸ்நாநம், ப்ரதம விவாஹங்கள் கூடாததாகும். அபபரணீ, மக நக்ஷத்திரங்களில் பெண்ணுக்கு விவாஹம் செய்தால் வைதவ்யமேற்படும். அந்நப்ராசநம், ஆதித்யம், விவாஹம் வாஸ்துகர்மாக்களை இரவிலுங் கூடச் செய்ய லாம். மற்றவைகளை அஹஸியேயேதான் செய்யவேண்டும்.

## சுபத்திற்கு காலம்

விஷ்ணு சயநத்திற்கு ஆரம்பித்தது முதல் எழுந் திருக்கும் வரையிலுள்ள மத்ய மாஸங்களில் உபநயநம் விவாஹம், மஹோத்ஸவம் இவைகளைச் செய்யக்கூடாது

(சயந ஏகாதசி முதல் உத்தாந ஏகாதசி வரை ஆடி சுக்லைகாதசி) ஊரில் உத்ஸவம் நடந்துவரும்பொழுது வீட்டில் சுபங்களைச் செய்வானாயின் நாசமடைவான். அதே காலத்தில் வேறோரூரிற் செய்வது பாதகமாகாது.

## வதுவை பரீக்ஷிக்கும் விதம்

ஒரு தாம்பாளத்திற் கழனிமண், யாகபூமி மண், ஸ்மசாநமண், தொழுவத்து மண் முதலியவைகளை யெடுத்து அவளை ஒன்றை யெடுக்கச் சொல்லி அது கழனியோ, யாக, தொழுவத்தினதோ மண்ணாயிருந்தால் பூமி, ஸத்புத்ரன், பசு முதலியன முறையே லபிக்கும். நாற்சந்தி கூடுமிடத்து மண்ணாயின் தூர்த்தையாயிருப்பாள். பாலைவந மண்ணாயின் தேசாந்த்ரம் போய்விடுவாள். ஸ்மசாந மண்ணாயின் வைதவ்ய மடைவாளென்றும் ரிஷிகளபிப்ராயப்படுகின்றனர்.

## ஸம்ஸர்கம் செய்யக்கூடாத குருபத்நீ துல்யர்

ஒருவனுக்கே இரு பெண்களை விவாஹம் செய்து கொடுக்கலாகாது. ஒரே ஸஹோதரர்களுக்கு மற்றோர் ஸஹோதரிகளை விவாஹமாய்க் கொடுக்கக்கூடாது. அத்தை, சித்தி, மாமி, நாட்டுப்பெண், தாயின் சக்களத்தி, ஸஹோதரி, குருபுத்ரீ பத்நீ, தன் பெண், இவர்களைப் புணர்பவன் குருதல்பத்தைப் புணர்ந்தவனாவான். தமயன் பத்நீ, பிதாவின் இளைய பத்நீக்கள் மாதாவிற்கு ஸமானமாவர்.

## கந்யாதாநகால நியமக்ரமங்கள்

கந்யா தாநஞ் செய்பவன் கிழக்கு நோக்கியும், அவளைப் பெறுகின்றவன் வடக்கு நோக்கியுமிருப்பது ஆயுஸ் வ்ருத்திகரமாம். வரன் மேற்கு முகமாயிருக்கலாம். தாதா உபோஷிதனாயிருக்க வேண்டும். விவாஹாக்நி அன்றிரவு நடக்கும் ஔபாஸந காலத்திலில்லாதிருப்பின் புநர் விவா

ஹம் செய்யவேண்டும். அதில் அங்குரம், ப்ரதிஸரம் வரணம், ப்ரதிக்ரஹம், வாஸஸாபரிதாநங்கள் அவச்ய மில்லை. நான்கு திநங்களுக்குள் விவாஹாக்நியும், பனி ரண்டு திநங்களுக்குள் ஜாதகர்மாக்நியும், ஸஞ்சயநத்திற் குள் ஸ்மசாநாக்நியும் அணைந்துவிட்டால் அக்நியை வைத்து பரிஸ்தரணம் செய்து ப்ராயச்சித்தஞ் செய்ய வேண்டும்.

### ஔபாஸநாரம்பம்

விவாஹதிந ராத்ரி பத்து நாழிகைக்குள் ஔபாஸந மாரம்பித்துச் செய்து வரவேண்டும். அஷ்டமுஷ்டிகள் கொண்டது கிஞ்சித்தும், நாலு கிஞ்சித்தோர் புஷ்கலமும், நாலு புஷ்கலங்கள் பூர்ணபாத்ரமு மாகும். விவாஹத்திற்குள் ப்ர விச்யஹோமத்திற்குப் பிறகும் சேஷஹோமத்திற்கு முன் னும் தம்பதிகள் உபவாஸமிருந்து ஸ்தாலீபாகமாரம்பிக்க வேண்டும். பூர்ணபாத்ரத்தை தக்ஷிணையாகக் கொடுக் கலாம். விவாஹ நான்கு திநங்களுக்குள் பருவம் வரு மாயின் விதிவத்தாய் ஸ்தாலீபாகம் செய்யவேண்டும். விவாஹமான முதற்பருவத்தில் க்ரஹணம் அதிமாஸத் வம், குருசுக்ர மௌட்யம் முதலிய தோஷமேதாவதிருப் பின் ப்ரதமேஷ்டியைச் செய்வது கூடாது. பகுநாள் கழித் தாரம்பிப்பது ஆயுளைசச்வர்யங்களை நாசஞ் செய்து விடு கிறபடியால் சீக்ரமோர் சுபதிநத்திலாரம்பித்துச் செய்ய வேண்டும். பித்ரு மாஸங்களும் கூடாது (சூன்யமான ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசிகள்.)

### பஹிஷ்கரிக்கத் தகுந்தவளும் புநர்விவாஹமும்

க்ரூரமாய்ப் பேசி வருபவர்களைப் பற்றி எந்த க்ஷண மாவது தள்ளிவிட மநு, போதாயநர் விதிக்கின்றனர். ஸுராபாநம், ரோகம், துர்நடத்தை, மலடி, பண்டங்களைப் பாழாக்குகிறவள், கோபிஷ்டி, ருதுவையடையாதவள், வ்ரு தம் தர்மங்களைக் கெடுத்து வருபவள், பைத்தியம், மநம்

நோகப் பேசி வருபவள், பெண்ணுகவே பெறுகிறவள், புருஷனை த்வேஷிப்பவள், இவர்களைத் தள்ளி புநர் விவாஹம் செய்துகொள்ளலாம். நன் நடத்தையுள்ள மலடி, பெண்களையே பெறுகிறவர்களின் அநுமதியின் பேரில் அவளையும் வைத்துக்கொண்டு புநர்விவாஹம் செய்து கொள்ளலாம். தள்ளப்பட்டவள் அதிவின்னை யெனப்படுவள். நிஷ்காரணமாய் த்யஜிப்பவன் மஹாபாபியாவன். தர்மங்களுக்கு தோஷமேற்படுவதால் துஷ்டையை பரித்யாகம் செய்தே தீரவேண்டும். மலடியை 10 வர்ஷங்களும், பெண்களையே பெறுகின்றவளை 12 வர்ஷங்களும், பெற்றவுடன் மரிக்கும் சிசுக்களைப் பெறுபவளை 15 வர்ஷங்களும் பார்த்துவிட்டு புநர்விவாஹம் செய்துகொள்ள வேண்டும். காமியும் புநர்விவாஹம் செய்துகொள்ளலாம், மூன்றும் விவாஹம் நிஷித்தமானதால் நான்காம் விவாஹமுங்கூடும்.

## அர்க விவாஹம்

மூன்றும் விவாஹம் செய்துகொள்ளுபவன் தநம், தாந்யம், ஆயுட்களை யிழந்து ரோகியாகிறுன். அதற்கு பதிலாக ஓரெருக்கஞ் செடியை யடைந்து அங்கு மெழுகிக் கோலமிட்டு விவாஹ சுபங்களை நடத்தவேண்டும். பிறகு அதை வஸ்த்ரத்தாலலங்கரித்து அதை விவாஹம் செய்து விவாஹாக்நியை ஆராதித்துப் பிறகு அவ்வக்நியை ஆத்ம ஸமாரோபணம் செய்துவிடவேண்டும். அவரவர் க்ருஹ்யத்தின்படி இவற்றைச் செய்யவேண்டும். பிறகு திநத்ரயம் ப்ருஹ்மசர்ய வ்ரதத்தோடிருந்து வரவேண்டும். அபத்நீகன் பத்நீம்ருத வர்ஷத்திலேயே புநர்விவாஹம் செய்துகொள்ளலாம்.

## பரிவேதநம்

அக்காளிருக்கத் தங்கை விவாஹம் செய்துகொள்ளுவதும், அக்நிஹோத்ரங்களைப் பெறுவதுங் கூடாது. **தமயன் வித்யாப்யாஸத்திற்காக தேசாந்த்ரம் 12 வர்ஷங்**

கள் பார்த்துத் தான் தம்பி கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். தமயன் ஊமை, பைத்யமாயிருந்தாலிது பாதிக்காது. நிர்தோஷ ஜ்யேஷ்டனிருக்க அவனனுமதியின்றி விவாஹஞ் செய்துகொள்ளும் கநிஷ்டன் பரிவேத்தா யென்றும் தமயன் பரிவித்தி யுமாகிறான். பரிவித்தி, பரிவேத்தா, கந்யா, தாதா, புரோஹிதரைவரும் பரிவேதந தோஷத்திற்காக நரகமடைவார்கள். பரிவேத்தாவின் ஹவ்யகவ்யம், தபஸ், வேதம் யாவும் வ்யர்த்தம். அங்கஹீநாதி நிர்தோஷ மூத்த பெண்ணை விட்டு இளையவளுக்கு விவாஹம் செய்வதும் தோஷமே. துஷ்டமான ஆணோ பெண்ணோ விஷயத்தில் தோஷமாகாது.

## பதிதன் விஷயம்

பதித ஸஹவாஸத்தால் இவனும் பதிதனாவதால் அவனை ஊரை விட்டோட்டவேண்டும். ஊருக்கு வெளியே யிருந்தே அவர்கள் ஸர்வ லௌகிக வைதிகங்களை நடத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் பிள்ளைகளைப் பார்த்து நாங்கள் கெட்டுப்போய்விட்டோம், நீங்களாவது ஸத்ஸஹவாஸத்தால் ஸத்தாகுங்க ளென அவர்களை வித்யாப்யாஸ நிமித்தம் பெரியோரிடமனுப்ப வேண்டும். அவர்கள் பெண்ணை மணக்க இச்சித்தால் அவளுக்கு உபவாஸத்தால் வ்ருதாநுஷ்டாநஞ் செய்வித்து, ஸ்நாநஞ் செய்வித்து, நாலு பேர் முன், நான் பதிதர்களிடம் எக்காலத்திலும் சேருவதில்லை, அவர்களது தோஷங்கள் என்னை அணுகாதென மும்முறை உரத்துச் சொல்லச் சொல்லிப் பிறகு விவாஹம் செய்துகொள்ளவேண்டும்.

## ஸ்த்ரீகளை ஸம்ரக்ஷிக்கும் ரீதி

ஸ்த்ரீகள் புமான்களுக்கு போகார்ஹமாகின்றனர். அவர்களுக்கு துஸ்ஸஹவாஸமேற்படாது பார்த்து வரவேண்டும். அதனால் நிர்தோஷ ஸந்ததி, நல்ல பெயர், குலத்திற்குயர்வு, ஸத்கர்மங்களைச் செய்ய மஹிமை, பர

லோகப்ராப்திக்கும் ஹேதுக்களேற்படுகின்றன. அவர்கள் புத்தி ஸத்விஷயத்திலேயே ஈடுபட்டிருக்கப் பார்த்து வர வேண்டும். பதியென்கிற பர்தாவே அவளிடத்து சுக்ல ரூபத்திற் ப்ரவேசித்து புத்ர ரூபத்திலுதிக்கிருனென்று வேதமுத்கோஷிக்கிறது. அதனால் அவள் ஜாயா எனப் படுகிருள். ஸ்த்ரீ புமான்கள் எவ்வித ஸ்மரணையோடு கூடு கின்றனரோ அவ்வித புத்ரர் ஜநிக்கிருர்கள். தர்மத் திற்கு விரோதமின்றி அவர்கள் மநங்கோணுது நடத்தி வரவேண்டும். அவர்கள் அழகு, வயதொன்றையுங் கவனி யாது அந்யர் மேல் மோஹங்கொள்வர். அவர்களுக்கு ஆடையாபரணங்களில் ஆவல், காமம், க்ரோதம், ஒழுங் கின்மை, த்ரோஹ சிந்தனை, துர்நடத்தைகளை ப்ருஹ்மா ஸ்வபாவமாகவே ஸ்ருஷ்டித்திருப்பதாய் மநு கூறுகிருர். ஆகையால் வெகு ஜாக்ரதையாய் அயல் வீடு, ஊர் செல் லாது அந்யரோடு பேசாது தங்கள் பார்வையிலேயே இருக்கப் பார்த்து வரவேண்டும். அவர்களுக்கு மந்த்ர தந்த்ராதிகளி லதிகாரமில்லாததால் அஸத்யம் போல சுத்தர்களாய் பாபங்கள் அவர்களை விட்டொழியாதவர் களாயிருந்து வருகின்றனர். நமது நற்குணங்களால் ஸமுத்ரகாமி நதி கௌரவமாவது போல் ஸுகுணிகளாக வேண்டும். புருஷன் வெள்ளியூர்ச் சென்ருல் குடும்ப செல விற்கு வேண்டியவற்றைக் கொடுத்துவிட்டுப் போக வேண்டும். ஸ்த்ரீயானவள் புருஷனின் மநதிற்கநுகுண மாய் நடப்பாளாயின் க்ருஹஸ்தாச்ரமம் மற்ருச்ரமங்களை விட ஸர்வ ச்லாக்யமாகும். இதுவேதான் ஸ்வர்கம். இல்லாவிடில் இதுதான் நரகம். ஐகமத்யப்ராப்திக்கு புண்யமே ஹேதுவாகிறது. அநுகூலை ஸ்ரீதேவிக்கு ஸமாநம். பர்தாவை வார்த்தகத்திலும் உபேக்ஷிக்கக் கூடாது. த்ருப்தியடைந்த புருஷனையுடையவள் பார்யை யாவள். இல்லாதவள் ஜாரை யெனப்படுவாள். பர்தாவி னநுமதியின்றி ஸ்த்ரீ உபவாஸாதி வ்ருதமநுஷ்டிப்பது

அவனது ஆயுஸுக்கு ஹானியாகிறது. அவளும் நரக மடைகிருள். அவன்விடன், தரித்ரன், மூர்க்கன் முதலிய எதாயிருப்பினும் அவனை யவமதிக்கலாகாது. ஸ்த்ரீகள் மாமனர், மாமியார்களுக்குமடங்கி மநஸ் ஸந்தோஷப்படுத்தி நமஸ்காராதிகளைச் செய்து அநுக்ரஹம் பெற்று க்ஷேம மாயிருக்கவேண்டும்.

ஸ்த்ரீகள் பர்தாவையே தைவமாய் பாவித்து பய பக்தியுடன் அவன் மநம் கோணுது ஸதாஸந்தோஷித் திருக்கும்படி நடந்துவரவேண்டும். அவனது அநுமதி யின்றி ஸ்வாமி தர்சநார்த்தங்கூட ஆலயத்திற்கும் போக லாகாது; வ்ரதாநுஷ்டாநங்கள் கூடாது. ஓரிரவாவது பர்தாவைப் பிரிந்திருப்பவள் பதிவ்ரதை யென்னும் பெய ருக்கர்ஹமாகாள். பதிவ்ரதா லக்ஷணங்கள், பர்தா வெளிச் சென்றிருக்குங் காலத்தில் இவள் இருக்கவேண்டிய ரீதி கள், பஹிஷ்டா (தூர) ஸ்த்ரீநியமங்கள், அவைகளை மீறி ஞல் ஏற்படக்கூடிய அநர்த்தங்களை வேதமுத் கோஷிப்பது கர்ப்பிணீ தர்மம், விதவா தர்மம், அநுமரணம், ஸாமாந்ய தர்மங்கள் பல நூற்றுக் கணக்கிலிருக்கின்றன.

### க்ருஹஸ்த தர்மங்கள்

அதிதிஸத்காரம் அத்யாவச்யமாகும். வந்தவரை முகமலர்ச்சியுட னெழுந்து நின்று ஸ்வாகதங் கூறி, ப்ரிய மாய்ப் பேசி, அவரிஷ்டத்தை பூர்தி செய்து, போஜந மளித்துப் புறப்படுங்கால் வழிவிட்டு வரவேண்டும். அவர் புஜிப்பதற்கு முன்தான் கூடாது. ஸந்த்யா, ஸ்நாநம், ஜபம், ஹோமம், அத்யயநம், தேவபூஜை, வைச்வதேவம், அதிதியை ப்ரதீக்ஷித்தல், சக்தியாநுஸாரம் அவரை பூஜித் தல் இவைகளை யாவச்சக்ய மநுஷ்டித்து வரவேண்டும். தேவ பித்ருமநுஷ்யர், தீனர், அநாதர், தபஸ்விகள், குருக் கள், மாதா பிதாக்கள் ஆகிய இவர்களுக்குரிய மர்யாதைப் படி நடந்துவரவேண்டும். பரதாராகமநம், சௌர்யம்,

**குறிப்பு :-ஸ்த்ரீ தர்மம் விஷயவிவரம் நம் வேருேர் நூலிற் கண்டுகொள்வது.**

அஸத்யம், வர்ஜிதாந்நபாநபக்ஷணம், ஹிம்ஸை, வேத விருத்தாநுஷ்டாநங்கள். கோட்சொல்லல், காமம், க்ரோதம், டம்பம், மாயை அப்ரியம், த்வேஷம் **விகர்மங்க** ளெனப் படும். சாஸ்த்ரோக்தமாயினும் சிலவற்றை ரஹஸ்யமாகவே செய்துவரவேண்டும். சக்தியாநுஸாரம் பரோபகாரம் அத்யாவசயமாகும். ஒருவன் கேட்டுக் கொடுப்பதாய்ச் சொன்னது, பிறர் பந்தகம் வைத்ததைக் கையாளல், ஆபத்திற்காக வைத்து வைத்ததைச் செலவிடல்கள் கூடாவாம்.

### க்ருஹஸ்தாச்ரமப்ரசம்ஸை

ப்ருஹ்மசாரி, வாநப்ரஸ்தன், யதி இம்மூவர்களுக்கும் இவன் கதியாகிறான். அக்நிஹோத்ராதிகள் செய்யும் சிஷ்டனே க்ருஹஸ்தனே யன்றி அவைகளை விட்டு வீடு வாசல்களைப் படைத்தவன் க்ருஹஸ்தனுகான். தேவ பித்ரு மநுஷ்யர்களும் க்ருஹஸ்தனின் கர்மாக்களால்தான் த்ருப்தராகின்றனர். இவனையும் எல்லோருமாதரித்து வரவேண்டும். அப்பொழுதுதானிவன் தர்மமோங்கும். ராகம், பயம், க்ரோதம், லோபம், மோகம் இவைகளை விட்டொழித்து காயத்ரீ ஜபத்தில் ஆஸக்தி, ச்ரத்தையோடு ச்ராத்தாதிகளைச் செய்து வருபவன் முக்திக்கர்ஹனுகிறான். ஆத்ம ஜ்ஞாநமடையாதவன் பித்ருலோக மெனப் படும் சந்த்ரலோகஞ் சென்றுத் தன் புண்யங்கள் போனதும் மழை மூலமாய் பூமியையடைந்து பயிர், புல், பூண்டுகளிலொன்றுகி ஒருவனுல் புஜிக்கப்பட்டு சுக்லமாய் பரிணமிக்கிறான். பிறகு ஸம்போக காலத்தில் ஸ்த்ரீயோநியுட் சென்று கர்ப்பமாகி புண்யாத்மாவாயின் நல்ல யோநியிலும், பாபியாயின் நீசஜாதியிலோ, ஸ்த்ரீயாகவோ, பசு பக்ஷ்யாதி திர்யக்காகவோ ஜநிக்கிறான்.

வேதத்ரயத்தையும் அர்த்தத்துடனுேதி யிருப்பவர் **த்ரைவித்ய** ரெனப்படுவர். ப்ரஜாபதி, ஹிரண்யகர்ப்பர்

முதலான தேவசரீரமும், மரீசி முதலான ரிஷிகளது சரீரமும் அவரவர்களது கர்மங்களை யநுசரித்து மேன்மையைப் பெற்றது. புண்யசாலிகளான வஸிஷ்டாதிகளின் சரீரம் மிக உயர்வு பெற்று ஸப்தரிஷி மண்டலத்தில் மிகச் சிறப்பாய் விளங்குகின்றன. க்ருஹஸ்தர்கள் யாகம் செய்வதற்கும், தவம் புரிவதற்கும் அதிகாரம் பெற்றிருப்பதால் ஆச்ரம சதுஷ்டயங்களுள் க்ருஹஸ்தாச்ரமம் அத்யுத்க்ருஷ்டமென்று வஸிஷ்ட பகவான் கூறுகிறார்.

## வாநப்ரஸ்தம்

ஆயுஸின் மூன்றும் பாகமான 50 வயதிற்கு மேல் பார்யையை புத்ரனிடமொப்பித்தோ தன்னுடனோ வநத்திற்கழைத்துச் சென்று வேதபாராயணம், அக்நிஹோத்ரம் ஸ்தாலீபாகம் இஷ்டி முதலியவைகளையும் அதிதிபூஜை, தேவபூஜை, ஜபதபங்களை யொன்றுங் குறைவின்றி நடத்தியும், ப்ருஹ்மசர்ய வ்ரதத்தோடும், ஜிதேந்த்ரியனாய், காய் கிழங்குகளைத் தவிர வேறொன்றையும் புஜியாது, தாநம் வாங்காமல், ஜடைதரித்து. மரியுரி யுடுத்தி, ஸந்த்யைகளில் ஸ்நாநஞ் செய்தும், வருகிறவர்களுக்கு கந்தமூலங்களாலேயே உபசரித்தும் மனஸ்சாந்தியாய், பசியை ஸஹித்தும் தபஸ் செய்து வரவேண்டும்.

## ஸந்யாஸம்

ப்ருஹ்மசர்யாச்ரமத்திலிருந்தோ, இதர க்ருஹஸ்த, வாநப்ரஸ்தாச்ரமத்திலிருந்தோ வைராக்ய நிதியும்,பரிபக்வ ஜ்ஞாநமடைந்திருப்பவனும், ஜிதேந்த்ரியமுமுக்ஷுவும் ஸந்யாஸம் பெறலாம். வரிசையாய் ஒவ்வோராச்ரமத்திலுமிருந்து இதை யடைய வேண்டுமென்கிற நியதியில்லை. க்ருஹஸ்தன் மோக்ஷகாமனாயிருப்பின் தன் பத்நீயை புத்ரனிடம் ஒப்பித்துவிட்டு, அக்நியை ஆத்ம ஸமாரோபணம் செய்துவிட்டு இவ்வாச்ரமத்தை எந்த க்ஷணத்திலும் ஸ்வீகரிக்கலாம், இதன் த்வரைக்கு மோக்ஷத்தில் அதி

கச்சைதான் காரணமாகும். பக்தி விசேஷமாகக் குடி கொண்டிருக்கப் பார்க்கவேண்டும். விவாஹம் செய்து கொள்ளாது நைஷ்டிக ப்ருஹ்மசாரியாகவேயு மிருந்து விடலாம். அதுவுமிதற்கு ஸமாநமே. ப்ரஷ்டன், பதிதன், வ்ராத்யன் ரோகி இவர்களே இதற்கநதிகாரிகள். ஆசையுள்ள யதிநரகமடைவான். யதிக்கு தீங்கிழைத்து பாதித்யம் உண்டாகும்படி செய்பவனும், பதிதர்களுக்கு ஸந்யாஸம் செய்துவைப்பவனும், ஸந்யஸித்துக் கொள்பவனுக்கு விக்நஞ் செய்பவர்களும் பதிதராவர். வ்ரதம், யஜ்ஞம், தபஸ், தாநம், ஹோமம், அத்யயநம், ஸத்யம், சௌசம், முதலியன இல்லாதிருப்பவர்களுக்கு ஸந்யாஸம் செய்து வைக்கக்கூடாது.

## ஆதுர ஸந்யாஸ விதி

ஆபத்காலத்திலும், வார்த்தகத்திலும், வ்யாதியிலும் சத்ரு பயத்திலும், ப்ராணபத்திலும் திடீரென்று ப்ரணவ வ்யாஹ்ருதி பூர்வகமாயுள்ள ப்ரேஷோச்சாரணம் த்ரியாவ்ருத் ஜபித்து தான் ஸந்யஸித்துக்கொண்டதாயும், அஜ்ஞாநம், மோஹம் தவறுதல்களால் ஸம்பவித்த தோஷங்களைத் தானொழித்துவிட்டதாயும் இனி தன் த்ரிகரணங்களாலும் ஒரு ப்ராணிக்கும் ஹிம்ஸை செய்வதில்லை, இனி ஒன்றுமென்னிடம் பயப்படவேண்டாம் என்று அர்த்தந்த்வநிக்கும் மந்த்ரங்களை யுச்சரித்தும் விதிவத்தாய் ஸந்யாஸம் பெறுவான். ஸாவித்ரீ ப்ரவேசநம், பாணி ஹோமம், ப்ரேஷோச்சாரணம் இவைகள் ஸங்கல்ப பூர்வமாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. ப்ராணன் போகும் ஸமயத்தில் ஸந்யஸ்தம் (நான் ஸந்யஸித்துக்கொண்டேன்) என்று ச்ரத்தையுடனுச்சரித்து ப்ராணனை விட்டவனும் ஸந்யாஸியாவான். ஆதுரனுயிருப்பானுயின் மநதினுலும் அல்லது வாக்கினுலும் ஸந்யாஸத்தை யடையலாம்.

## ஸந்யாஸ பலன்

பரபுருஷனை இச்சிக்கும் ஸ்த்ரீ (மாநஸவ்யபிசாரீ) ரஜஸ்ஸினுல் சுத்தையாவள்; நதீ வேகத்தாலும், தோஷமுள்ளவை தாநங்களாலும், ப்ராஹ்மணன் ஸந்யாஸத்தா

லும் சுத்தியாகின்றனர். த்யாகத்தால் மட்டுந்தான் மோக்ஷமடைய முடியுமென வேதமுத்கோஷிக்கிறது. தன் மண்டலத்தைப் பிளந்து நித்யஸ்தானம் பெற தன் லோகம் வரும் விரக்தனைக் கண்டு ஸூர்யனும் பயந்து வழி விடுகிறான். யதி தன் முன்னூறு பின்னூறு குல பித்ருக்களை நரகத்தினின்றும் தரணம் செய்து வைக்கிறான். ஸந்யாஸத்தால் ப்ருஹ்மலோகமும், விரக்தியால் ப்ருக்ருதிலயமும், ஜ்ஞானத்தால் கைவல்யமும் (மோக்ஷப்) ப்ராப்தமாகின்றன. முமுக்ஷு ஆத்மசுத்திக்காக தப்தக்ருச்ரம் ஒன்றைச் செய்து வருவான். ஜாதிதர்மம், வேதவழியும் எது வரையிலிருந்து வருகின்றனவோ அது வரையில் தான் கலியில் ஸந்யஸித்துக்கொள்ளலாமென வ்யாஸ பகவான் விதித்துவிட்டனர். க்ருஹஸ்தாச்ரமி அநேக யாகங்களைச் செய்தவனாயிருந்தாலும் ஒரு நாள் ஸந்யாஸாச்ரமத்திலிருப்பவனின்பலனுக்கீடாகமாட்டானென்றார் விஷ்ணு.

## ஜீவச்ராத்தாதி அஷ்டச்ராத்தங்கள்

பித்ருக்கள், தேவர்கள், தன் பித்ருக்கள், ரிஷிகள், மநுஷ்யர்கள், மாத்ருக்கள், மேலுலகத்தினர், பூதங்கள், ஆத்மா இவ்வெட்டு பேர்களுக்கும் ச்ராத்தஞ் செய்து வைச்வாநரேஷ்டியையுஞ் செய்து ப்ராஜாபத்ய வ்ருதமநுஷ்டித்து பிறகு மந்த்ர பூர்வகமாய் அக்நியை ஆத்மஸமாரோபணம் செய்தும் ஸந்யாஸம் பெறவேண்டும். நாந்தி முதலியவற்றைச் செய்து ப்ராஹ்மணர்களுக்கு போஜநம் செய்வித்து புண்யாஹவாசநஞ் செய்து தலை, முகம், இவைகளை வபநம் செய்துகொண்டு விதி முறைப்படி ஸ்நாநஞ் செய்து ஹோமஞ் செய்து ப்ராஹ்மணர்களை ஸந்தோஷமாய் பக்தியுடன் ப்ரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்து ப்ராஹ்மணர்களிடம், விப்ரர்களே! ஸந்யாஸார்த்தம் ச்ராத்தாதிகளைச் செய்து ஸித்தமாயிருக்கிறேன்; க்ருபை செய்து என் க்ஷேமத்திற்கு ஸந்யாஸம் பெற ஆஜ்ஞாபிக்கவேண்டுமென ப்ரார்த்தித்து அநுஜ்ஞை பெற்று மறு நாள் தண்டர், காஷாயம் முதலியவற்றை ஓர் தேவாலயத்திலோ, நதீ தீரத்திலோ உட்கார்ந்து ப்ருஹ்மணே நம; முதலிய மந்த்ரங்களை யுச்சரித்து ஸந்யஸித்துக் கொள்ளவேண்டும்.

## ச்ராத்ததேவர்கள்

மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்த்யர், புலகர், க்ரது, ப்ரசேதஸ், வஸிஷ்டர், ப்ருகு, நாரதர் இவர்கள் ரிஷி ச்ராத்த தேவர்களாவர். ஹிரண்யகர்ப்பர், விராட், ப்ரஜாபதி, ஸநகர், ஸநந்தநர், ஸநாதநர், கபிலர், ஆஸுரி, பஞ்சசிகர், இவர்கள் திவ்யச்ராத்ததேவர் களாவர். மநுஷ்ய ச்ராத்தத்தில் ஏழு தேவர்களாம். பூத ச்ராத்தத்தில் ப்ருதிவ்யப்தேஜோவாய்வாகாசங்களைந்தும், பித்ரு ச்ராத்தத்தில் கவ்யவாட், அநலன், ஸோமன், அர்யமா, அக்நிஷ்வாத்தா, பர்ஹிஷத்துக்கள், ஸோமர்கள் இவர்களும், மாத்ருச்ராத்தத்தில் கௌரீ, பத்மை, சசீ, மேதை, ஸாவித்ரீ, விஜயை, ஜயை, தேவஸேனை, ஸ்வதா, ஸ்வாஹா இவர்களும், ஆத்மச்ராத்தத்தில் பரமாத்மாவும் தேவர்களாகின்றனர். பார்வண, வ்ருத்தி ச்ராத்தங்களையும் செய்யவும்.

## ஸந்யாஸபேதங்கள்

குடீசகன், பஹூதகன், ஹம்ஸன். பரமஹம்ஸனென ஸந்யாஸத்தில் நான்கு பேதங்களுள. குடீசகன் சிகை, யஜ்ஞோபவீதம், த்ருதண்டம், கமண்டலு, காஷாயங்களை தரித்து அயல் வீட்டிலோ. தன் புத்ரனிடமோ பிக்ஷை வாங்கித் தன் வீட்டை விட்டுத் தனியே ஓரிடத்திலிருந்து ஸாவித்ரீயைக் கணக்கில்லாமல் ஜபித்து வரக்கடவன். கௌபீநம், காஷாயம், பாத்ரம், பவித்ரம, மூன்று மூங்கில்களாலான தண்டம், அது கோவின் க்ருஷ்ண ரோமத்தால் கட்டப்பட்டதாயும், மண்வெட்டி, கத்தி, இரண்டு பாதுகை, காவடியின் உரி, மரபாத்ரங்களையும் தரிக்க வேண்டும். தேவதர்பணம், பூஜை, ஸூர்ய நமஸ்காரம், ப்ராணயாமாப்யாஸம், காயத்ரீ ஜபம், த்யாநம், அத்யயநம, இதிஹாஸபடநம், ஸந்த்யோபாஸநம், தேவாலயவாஸம் இவைகளோடிருந்து வரவேண்டும். மௌநமே வாக்தண்டமும் விரக்திகர்மதண்டமும், ப்ராணயாமம் மனோதண்டமுமாகும்.

**பஹூதகன்** ஏழு வீடுகளில் பிக்ஷை யெடுத்துண்ண வேண்டும். **ஹம்ஸன்** த்ரிஷவணஸ்நாநம், சாந்த்ராயணாதி வ்ருதம், க்ராமத்திற்கு வெளியே வாஸங்களைச் செய்து ஸஞ்சரித்து வரவேண்டும். **பரமஹம்ஸன்** ப்ரணவத்தை ஜபித்துக்கொண்டு நிதித்யாஸநதத்பரனாய், ஸர்வத்தையும் ப்ருஹ்மமாய் பாவித்து ஆத்மாவிலேயே ஆசையும், த்ருப்தனையுமிருந்து வரவேண்டும். ஆகையால் கர்மம், வேதம், தண்டம், சிகை, உபவீதங்கள் இவர்களுக்குக் கிடையாது. க்ருஹஸ்தர்களை பீடித்துவயிறு வளர்த்து வருபவன் ரௌரவநரகமடைகிறான். வெளி வேஷங்களால் இவன் இவ்வாச்ரமியாகான்.

## யதிதர்மங்கள்

உஷஹ்காலத்திலெழுந்திருந்து தந்ததாவந, ஸ்நாந ஸந்த்யோபாஸநங்களைச் செய்து, தேவபூஜைகளைச் செய்துவிட்டு ப்ரணவத்தை ஜபித்து வரவேண்டும். எலும்புகளாகிற கம்பங்களில் நரம்புகளாகிற பிரிகளைச் சுற்றி, மாம்ஸரக்தங்களால் நிரப்பினதும் அவைகளுக்கு மேல் தோலினல் போர்க்கப்பட்டதும், அதிதுர்கந்தங்களுக்கிடமும், மல மூத்ரங்களால் நிறைந்ததும். ஜரை சோகங்களால் வ்யாபிக்கப்பட்டதும், ரோகங்களால் குடிகொண்டும் எக்ஷணத்திலாவது நசிக்கக்கூடியதும், பசி தாகங்களை யுண்டு பண்ணும் இச்சரீரத்தை மறுபடி யடையா வண்ணம் மௌநியாய், சாந்தமாய், கோபிப்பவரிடம் ஸந்தோஷமாய்ப் பேசியும், அவமாநங்களை அம்ருதமாய் பாவித்தும், ஆத்மாவே கதியாய் மநஸை லயப்படுத்தி த்யாநித்து மரத்தடியிலோ, குஹையிலோ வஸித்துவரவேண்டும். தனித்தே வஸிக்கவேண்டுமேயன்றி மற்றொருவரோடோ, பல ஸந்யாஸிகளோடோ சேர்ந்து வஸிக்கக்கூடாது. அதனல் பேச்சுமுற்றும். த்யாநமோங்காது, அக்கம்பக்கங்களில் இருப்பது, நடப்பது, ஒன்றையுமிவன்மநம் உணராவண்ணமிருக்கவேண்டும். சிஷ்யர்களைச் சேர்ப்பது, திவாஸ்வாபம் முதலியனவுங் கூடாவாம். ஸேவகன் சம்பள திநத்தையெதிர்பார்ப்பது போல் இவனும் தன் தபோபலமான மோக்ஷப்ராப்த கால மரணத்தை ப்ரதீக்ஷித்திருக்கவேண்டும். **க்ராமமாயிருந்தால் ஒரு நாளும், நகரத்திலைந்து நாட்**

களுக்கு மேலுந்தங்காது ஸஞ்சாரத்திலிருக்க வேண்டும். வர்ஷா காலத்தில் மட்டும் நான்கு மாஸங்கள் ஓரிடத்தில் தங்கலாம்.

## சாதுர்மாஸ்யவிதி

சிஷ்ட ஸம்ருத்தியுள்ளதும், புஷ்கலமான தீர்த்த வஸதியுள்ள விடத்தில் ஆடி முதல் கார்த்திகை வரை தர்மாநுஷ்டாநஞ் செய்துகொண்டு ஓரிடத்திலிருக்கலாம். வயது சென்றவரோ, வ்யாதியுள்ளவரோ, எப்பொழுதும் ஒரேயிடத்தில் வஸித்து வருவது தோஷமாகாது. வர்ஷா காலங்களில் ஆகாசம், பூமி யெங்கும் புழுபூச்சிகள் நிறைந் திருக்குமாதலால் அவைகளுக்கு உபத்ரவம் நேரிடா வண்ணம் இவன் எங்கும் ஸஞ்சரியாது ஒரே யிடத்தில் ஊருக்கு வெளியில் வஸித்து வரவேண்டும். வஸ்த்ரம் முதலான வற்றிற்காக ஒருவரை சரணமடைவது, பிறரால் சரண மடையப்படுவது, உண்டியளித்தவரை அநுக்ரஹிப்பது முதலிய ஸங்கம் ஒன்றுங் கூடாவாம். தன்னை தூஷித்தோ, நிந்தித்தவரையோ மனதில் ஸ்மரியாது அவ்ரிடம் ப்ரீதி பாராட்டவேண்டும். சாபாநுக்ரஹங்களே செய்யக் கூடாது. கர்வமின்றியும், பிறரால் தீங்கு நேர்ந்தாலதைப் பொறுத்தும் வரவேண்டும். க்ஷமை, தபஸ், இந்த்ரிய நிக்ரஹம், ஸர்வபூததயை, ஸத்யம், த்யாநம் இவைகள் யாவும் புண்ய தீர்த்தங்களுக்கு ஸமமாயிருக்கின்றன. யதி யாயிருந்தாலும் ஸதாகுருவோடுகூடவே ப்ருஹ்மசாரியைப் போலிருந்து வரவேண்டும். பொன் வெள்ளிகளை ஆசை யுடன் பார்ப்பதால் ப்ருஹ்மஹத்தி செய்தவனாகவும், அதை ஆசையுடன் தொட்டால் பௌல்கஸனாயும், அதை ஆவலுடன் பெற்றால் ஆத்மஹத்தி செய்தவனுமாவான். துக்கமென்று வருந்துவதும், ஸுகமென்று ஸந்தோஷிப் பதுங் கூடாது. காம ஸம்பந்தத்தால் மனஸுக்கசுசியும் பந்தமுமேற்பட்டு விடுகின்றன. வெளி வேஷத்தால் மட் டும் ஸந்யாஸம் ஸித்தித்துவிட்டதாகாது. அவ்வாச்ரம தர்மங்களை பரிபூர்ணமாயநுஷ்டித்து இருந்து வருதலே தானாகும். இவர்கள் வேதத்திருபநிஷத் பாகங்களை மட் டுந்தான் பார்ப்பதற்கதிகாரம் பெறுவர். வேறொன்றையுஞ் சொல்லக்கூடாது. ஆத்ம ஜ்ஞானத்திலீடுபட்ட இவன்

பார்ப்பவர்களுக்கு திகம்பரனாய் ஜடன், பைத்யம் பிடித்தவன், குருடு, செவிடுகளைப் போலிருந்து வருவான். இவனை தேவர்கள் ப்ராஹ்மணனென்றும், ப்ருஹ்ம ஸததுக்களில் ச்ரேஷ்டனாகவும், வரிஷ்டனாகவுமிருக்கிறான். ஆத்மஜ்ஞாநி பாலர்களைப் போல் விளையாடி வருவான், அவனை யொன்றும் பாதிப்பதில்லை. வலுவில் கிடைத்தாந்நம் அமிர்தஸத்ருசமாகும். இவ்வாத்மாராமன் வர்ணாச்ரம தர்மங்களுக்கதிதனாய், எதைச் செய்தாலும் பாபபுண்ய ஸம்பந்தப்படாதவனாய், ஜநமத்தியிலும் ஸஞ்சரித்தும், குதித்தும், விளையாடியும் அவைகளால் யோகி சிறிதுங் கெடுதி யடையான். அவைகளை நிழலென்றே மதிப்பான். தான் செய்வதின்னதென்பதே தெரியாது மெய்மறந்து லோகமே தோன்றாதவனாய் ஆத்மவஸ்துவைநாடின மநத்தினனாய் அதன் ஸாக்ஷாத்காரத்திலேயே நித்ரையிலுங் கூட இருப்பவனாவான்.

## யதிகளின் நித்யகர்மாநுஷ்டாநவிதிகள்

புற் பூண்டு சக்கைகளாலுட்கார வேண்டிய யிடத்தை மூடி குளம், குட்டைகளுக்கு மூத்ரவிஸர்ஜநமானால் நூறு முழமும், மலமானால் இருநூறு முழமும் ஒதுங்கி யுட்கார வேண்டும். ம்ருத்திகையை முதலிலேயே எடுத்து வைத்துக்கொள்ளாவிடில் ஸசேல ஸ்நாநஞ் செய்யவேண்டியது. ஜலத்தில் ப்ரக்ஷாளநங் கூடாது. பாத்ரத்தில் நீர்மெண்டெடுத்துச் செய்துகொள்ளவேண்டியது. ஆஸநவாய் மலத்தைக் கட்டை, சரகுகளால் துடைத்துப் பிறகு சௌசம் செய்துகொள்ளவேண்டியது. பாத்ரமில்லாவிடில் சாண் தள்ளி நீரிலேயே செய்துகொள்ளலாம். பிறகு அவ்விடத்தை நீராலலம்ப வேண்டியது. க்ருஹஸ்தனின் சௌசவிதி கணக்கிற்கு த்விகுணம் ப்ருஹ்மசாரிக்கும், மும்மடங்குவாநப்ரஸ்தனுக்கும், நான்கு பங்கு ஸந்யாஸிகளுக்குமாகும். பிறகு 12 தடவை வாயைக் கொப்பளித்தாசமநஞ் செய்து ஆறு ப்ராணாயாமங்களைச் செய்யவேண்டியது. இதர விசேஷங்களுக்கு ஆந்ஹிக காண்டத்தில் ஸவிஸ்தாரமாயிருப்பதைக் கண்டுகொள்ளவும்.

சுண்டுவிரல் பருமனும் ஓரடி நீளமும்பால், முள்ளுள்ள குச்சியால் தந்ததாவநஞ் செய்து 12 கண்டூஷஞ் செய்ய

வேண்டியது. ப்ருஹ்மசாரிக்கு ஒரே தரமும், க்ருஹஸ்தனுக்கும் வாநப்ரஸ்தனுக்கும் இரு வேளைகளும், யதிக்கு ஸாயங்காலத்திலுங்கூட மும்முறையும் ஸ்நாநஞ்செய்வதின் கணக்காகும். யதி, விஷ்ணுக்களின் பாதோதகஸ்நாநம், முன்னேழு ஜந்மங்களிற் செய்த பாவத்தைத் தொலைக்கும். யதிகளுக்கு ஸ்நாந விதிகள் அதி விசேஷமாயிருக்கின்றன. அவை நமக்கு க்ராஹ்யமாகாததால் விடப்பட்டிருக்கின்றன. உஷஹ காலத்தில் தீர்த்தங்கள் யாவும் கங்கையோடொக்கும். ஏகவாரமோ, த்ரிகாலங்களிலேயோ விஷ்ணு பூஜை செய்து வரவேண்டும். விஷ்ணு பாதோதகத்தைப் பருகல், நிவேதிதத்தை பக்ஷித்தல் நிர்மால்யத்தை தரித்தல்கள் மஹாபாபங்களையு மொழித்துவிடும். ப்ரதி திநமும் ப்ரணவத்தை 12000 தரம் ஜபித்து வருபவன் வர்ஷத்தில் ப்ருஹ்மஸாக்ஷாத்காரம் பெறுவான். காமமொழிந்தால் மோக்ஷஜ்ஞாந முதிக்க பாபங்கள் நசிக்கின்றன. யதிப்ராணயாமத்தில் ரேசகத்தை இடமூக்காலும், பூரகத்தை வலதினாலுஞ் செய்யவேண்டும். ரேசக மாத்ராகாலம் 8 அல்லது 12ம் பூரகம் 16, 24, 36ம், கும்பகம் 32 48, 64ம் அதம, மத்யம, உத்தம ப்ராணயாமங்களாகும்.

## பிக்ஷாடநம்

ஒரு வீட்டிலேயே வேண்டியளவு வாங்கி புஜிப்பது கூடாது. பதினாறு கவளத்திற்கு மேல் புஜிக்கக்கூடாது. பிக்ஷாந்நத்தை ஜலத்திலலம்பி மருந்தைப்போல் கேவலம் ப்ராண தாரணத்திற்காகவே உண்டுவரவேண்டும். ஹரியைத்யாநித்துக் கொண்டே ஒரு நுகத்தடி வரையில் பூமியைப் பார்த்துக்கொண்டு ஸர்வவ்யாபியான விஷ்ணு என்னை ரக்ஷிக்கட்டுமென்று பொருள்படும் ச்லோகங்களைச் சொல்லிக்கொண்டு அதோ முகனாய் பால் கறக்கும் நேரம் வரையில் காத்திருக்கவேண்டும்.

ஏதாவது 1, 3, 5 அல்லது 7 வீடுகளுக்குச் சென்று ஈமதுவை க்ரஹிப்பதுபோல் பிக்ஷையெடுப்பதற்கு **மாதூகர**மென்று பெயர். பிக்ஷைக்குப் புறப்படும் முனனர் யாசியாமல் ஒருவரால் ப்ரார்த்தித் தளிக்கப்படுவது **பிக்ஷை**யெனப்படும். உபஸ்தாந காலத்தில் ப்ரார்த்திக்கப்பட்

டதும், யாசிக்கப்படாததும், ஏகாந்தமாயினும் மிகவும் ச்லாக்யமாகும். பஞ்சதிநங்கள் எந்த க்ருஹத்தில் பிக்ஷை யிடவில்லையோ அதை சண்டாள சேரிக்கொப்பாய் பாவித்து வர்ஜிக்கவேண்டும். வாசல் மூடியிருந்தால் கதவைத் தட்டல், சப்தம் செய்தல்கள் கூடாது. பிக்ஷுகனுக்கு பிக்ஷை கொடா க்ருஹஸ்தன் தன் புண்யங்களை யவனிடங் கொடுத்து அவனது பாபங்களைச் சுமந்து கொண்டவனுகிறன். அதேமாதிரி சுத்தாத்மாவாயிருப்பவன் ப்ரார்த்தித்துக் கொடுப்பதை உபேக்ஷிப்பவன் தன் ஸுக்ருதங்களை யவனுக்குக் கொடுத்துவிட்டு அவனது துஷ்க்ருதங்களை க்ரஹித்துக்கொண்டவனுகிறன். நிந்தையுள்ளவன் வீட்டில் பிக்ஷை பெறுவது கூடாது, சூத்ர ஸொத்தாலாந்நம், வாயஸத்திற்கேற்பட்டது, ஹவ்யகவ்ய உத்தேசமானவைகளையுங் க்ரஹிக்கக்கூடாது. அதிகமாய் க்ரஹிப்பவன் தன் புண்யங்களை தாதாவிற்குக் கொடுத்தவனுய்விடுகிறன். தானும் பாபபக்ஷகனுகிறன். பர்யுஷிதாந்நமும், நைவேத்யத்திற் கேற்பட்டதும் பிக்ஷைக்கநர்ஹமாகும். அப்படிக் கொடுத்துவிட்டாலும் அதனுல் நரகந் தான் ப்ராப்தமாகும். காம்ஸ, அயப்பாத்ர பிக்ஷை விஷ்டைக்கு ஸமாநம். சுரை, கட்டை, மண், மூங்கில், இலை (தொன்னை) இவைகளாற் செய்யப்பட்ட பாத்ரங்கள் யதிக்குத் தகுந்ததாகும். முனிக்கெட்டே கவளங்கள் புஜிக்கத் தகுந்ததாகும். பிக்ஷையிடுபவரை அவமதிப்பதும் மறுபடியுங் கேழ்ப்பதுங் கூடாது. தனது எவ்வித பந்து க்ருஹமாயிருப்பினும் அதை த்யஜிக்கவேண்டும். எப்படிப்பட்ட க்ருஹஸ்தனையும் வணங்கக்கூடாது. யதிதர்மங்கள் இன்னும் விசேஷமாயிருக்கின்றன.

## வர்ணுச்ரம தர்ம காண்ட ஸமாப்தி

---

# ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதீய
# ஸ்ம்ருதி முக்தாபல
# ஆசௌச காண்ட ஸங்க்ரஹம்.

---

பிண்டதாநம், திலோதகதாநம், தஹநம், ஸஞ்சயநம், வபநம், ஸ்நாநம் முதலியவைகளுக்கு ஹேதுவாய் ஓர் ஜநந மரணத்தில் பந்துக்களுக்கு அசுசியை யுண்டாக்கி காலக் கழிவாலும், ஸ்நாநத்தாலும் நிவ்ருத்தியாவது ஆசௌச மென்னுந் தீட்டாம். தீட்டில் ஆந்ஹிக கர்மங்கள் (அத்ய யநமுள்பட) செய்யக்கூடாது. ஆசௌசியின் (தீட்டுக் காரன்) த்ரவ்யங்களும் அசுத்தமாகின்றன. அவன் அமந் த்ரகமாய் ஸ்நாநஞ் செய்து, ஸந்த்யாவந்தந அக்நிஹோத் ரங்களையும், ப்ரேதகார்யங்களையும் மட்டுந்தான் செய்ய வேண்டும். ஔபாஸந ஹோமத்தை அந்யனால் செய் விக்கவேண்டும். அகத்தில் (தீட்டு) தாநப்ரதிக்ரஹங்கள் கூடா. ஆபத் காலத்தில் இவனுங் கொடுக்கலாம். தீட் டில்லாதவர்களும் ஆமமாய் ப்ரதிக்ரஹிக்கலாம். தயிர், பால், நெய், காய், உப்பு, பூ, எள் முதலிய கடை வஸ்துக் களை இவனிடங் க்ரஹிக்கலாம். இவன் ஸ்பர்சியாது இவனது அநுமதியின்மேல் தானாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். புத்ர ஜந்மதிநம் புண்யமாகையால் அன்று ஜநகன் தாநங்களைச் செய்யவேண்டும். ஜ்ஞாதிகளுள்பட அந்யர்களும் க்ரஹிக்க வேண்டும். தீட்டுவீட்டில் தின்ற வனுக்கு தீட்டுக்காரன் தீட்டுள்ள திநம் வரை இவனும் தீட்டுக்கார்த்தாக வேண்டும்; பிறகு சாந்த்ராயணக்ருச்ரமு மநுஷ்டிக்கவேண்டும். தெரியாதோ, ப்ராணாபத் காலத் திலோ உண்டவனுக்கு அத்திநமட்டுமே தீட்டு. ப்ரேதகர்ம தந்த்ரோபதேசம், ப்ரேத கர்மாநுஷ்டாநம், ஆசௌசி ஸஹவாஸம், பங்க்தி போஜநங்கள் ஸம்பர்க மென்னுந்

தோஷமாகும். ஜீவச்ராத்தத்தில் தனக்கு மட்டுமே தச ராத்ராசௌசம், ஜ்ஞாதிகளுக்கில்லை. பூஜாமத்தியில் க்ராமத்தில் ம்ருதி ஸம்பவித்துவிட்டால் அமந்த்ரகமாய் தந்த்ரங்களைச் செய்து முடிக்கவேண்டும். உபநயநாதி கர்மங்களில் கர்மாவை நிறுத்தி சவம் போனபின் பாக்கியை பூர்தி செய்யவேண்டும்.

பெண்குழந்தை ஜநநமரணத்தில் 3 தலைமுறைக்காரர்களுக்கே ஆசௌசம். புருஷனில் 7 தலைமுறை வரை ஆசௌசம். பிதாவின் ஸபிண்டீகரணம் வரை புத்ரர்களுக் காசௌசமுண்டு. வர்ஷம் வரை சொல்லப்பட்ட ப்ருஹ்மசர்யாதிநியமங்களுமெல்லாப்பிள்ளைகளுக்குமுண்டு.

ஸாயம் ஸந்த்யா காலம் $3\frac{3}{4}$ நாழிகை. ப்ராதஸ் ஸந்த்யையுமப்படியே. ராத்ரியில் இவைகளைக் கழித்து மீதி 3 யாமங்களையும் அந்தந்த காலரீதியாய் 3 பாகங்களாக்கி அதில் மூன்றுவதில் ஜநநம், மரணம், ரஜோதர்சந மேற்படுவது மறுநாட் கணக்கிற் சேரும். (இது சுமார் உதயத்திற்கு $11\frac{1}{4}$ நாழிகைக்கு முன்பாகும் (இரவு $1\frac{1}{2}$ மணி.) ஆஹிதாக்நியின் தஹநதிநமே முதல் நாளா சௌசக் கணக்காகும்.

ஈரமுள்ள மநுஷயாஸ்தியைத் தொட்டால் 3 நாள சுத்தி. தெரியாது தொட்டுவிட்டால் ஸ்நாநமே போதும். உலர்ந்த தாயின் 1 நாளசுத்தி. இதுவுந் தெரியாத்தன மாஞலாசமநத்தால் சுத்தி. ம்ருகத்தின தாயின் ஈரத்திற்கு ஸ்நாநமும் சுஷ்கத்திற் காசமநமுஞ் செய்யவேண்டும்.

ப்ருஹ்மசாரி மாதா பிதா மாதமஹாதிகளுக்கு க்ருத்யஞ் செய்தால் தாத்காலிக அசுத்தமே. உடனே ஸ்நாநத்தால் சுத்தனுகிறுன்.

ப்ரேதத்திற்கு வஸ்தரமாலா சந்தநாபரணாதிகளால் அலங்கரித்தல், சுமத்தல், தஹித்தல்களுக்கு நிர்ஹார

மெனப்படும். யதிக்கும், அநாதைக்குஞ் செய்தால் ஸ்நாநத்தாற் சுத்தி. விசேஷ புண்யமுண்டு. இதரருக்கானல் நாட்கள் கணக்கில் தீட்டுண்டு.

ச்ராத்தம், தேவதோத்ஸவம், மஹாதாநம், விசேஷ ஹோமங்கள் பஹு-திந ஸாத்யமான நியமங்கள், யாகம் இவைகளை ஆரம்பித்த பிறகு தீட்டேற்பட்டால் ஸ்நாந மாத்ரத்தாற் சுத்தி. பாகாரம் பத்திற்குப் பிறகோ போஜந மத்தியிலோ அந்த தாதாவுக்காசௌச மேற்பட்டால் போக்தாக்கள் புஜிக்கலாம். ஆசௌச்யந்ந மென்ற தோஷ மில்லை. ஆசௌச மேற்படுவதற்கு முன்பே த்ரவ்யங்கள் ஸங்கல்ப பூர்வமாய் ஒதுக்கப்பட்டால் அவை க்ராஹ்யமே.

12 முதல் 18 நாட்களுக்குள்ளேற்படும் ரஜோதர்சநத்தில் ஸ்நாநமுண்டு.

ஜ்ஞாதி புருஷ சிசு 6 மீகுள் மரித்தால் ஸ்நாநமும், 25வது மீகுள்ளானல் 1 நாளாசௌசமும், 73மீகுள்ளானல் 3 நாளாசௌசமுமாம். பிறகானல் 10 நாட்களுமே. மாதா, பிதா, ப்ராதா (பிந்நோதரருள்பட) க்களுக்கு எப்பொழுது மரித்தாலும் தசராத்ரா சௌசம். 25 மாதத்திற்குள் ஸ்த்ரீப்ரஜை மரித்தால் ஸ்நாநம் மட்டும், நிச்சயதார்த்தத்திற்குள்ளானல் 1 நாளாசௌசம், விவாஹத்திற்குள்ளானல் 3 நாளும், அதற்குப் பிறகு 10 நாட்களுமாம். வாக்தாநம் பெற்றவரனுக்கும் அவன் 7 தலைமுறை ஜ்ஞாதிகளுக்கும் 3 நாள் ஆசௌசம். சௌளத்திற்குப் பின் மரித்த சிசுவுக்கு தஹநம். அதற்கு முன் கநநம் (புதைத்தல்). உபநயநத்திற்கு முன் ஜ்ஞாதிகளுக்கு த்ரிராத்ராசௌசம்.

### ஜநநாசௌசம்—(பிறப்புத் தீட்டு)

3 மாதங்கள் வரையிலுண்டாகும் கர்ப்பஸ்ராவத்தில் (கர்ப்ப நாசம்) கர்ப்பிணிக்கு 3 நாள் ஸூதகம், 4மீல் 4

நாள். 5மீ ல் 5, 6ல் 6 நாள். 7ம் மீ முதல் 10 நாள் ஸூதகம் எல்லோருக்குமுண்டு.

ஸத்ரீப்ரஸவத்தில் 40 நாட்களும் பும் (ஆண்) ப்ரஸவத்தில் 30 நாட்களும் ஸூதகமாகும். இவைகளில் முதல் 10 நாளில் அவளைப் பார்த்தலோ, பேசுவதோ கூடாதாம். பிற்பட்ட திநங்களில் ஸ்பர்சம் மட்டும் நிஷேதம். 3ம் மீ ஸ்ராவம் முதலே பிதாவுக்கு ஸ்நாநமுண்டு. 4ம் மீ முதல் ஸபிண்டர்களுக்கும் ஸ்நாநம். ஸ்ராவம் பிண்டாக்ருதியாய் விழுந்தால் எல்லோருக்கும் 3 நாளாசௌசமுண்டு.

பெண் பிறந்தால் அதன் ஸஹோதரன், பிந்நோதர ப்ராதா, பிதா, பிதாவின் பிந்நோதர ஸஹோதர ப்ராதா, அந்த ஸஹோதர ப்ராதாக்களின் புத்ரர், பிதாமஹன் அவனது பிந்நோதரருள்பட ஸஹோதரர்கள் இவர்களுக்கு 10 நாள் தீட்டு. இவர்களின் புத்ரர்களுக்கில்லை.

ஸ்த்ரீகள் தங்கள் பிறந்தகத்திலோ, மாதா பிதாக்களின் த்ரவ்யஸஹாயத்தாலோ ப்ரஸவித்தால் பெற்றோர்களுக்கு 3 நாள் தீட்டு. ப்ராதா, பித்ருவ்யன் (சிற்றப்பன்) பெரியப்பன், மாமா முதலிய பந்துக்கள் க்ருஹத்திலோ த்ரவ்ய ஸஹாயத்தாலோ வேறு இடங்களில் ஒருத்தி ப்ரஸவித்தாலும் அந்த பந்துக்களுக்கு ஒரு நாள் தீட்டு. அந்யக்ருஹமானல் ஜநநமரணத்தில் க்ருஹபதிக்காசௌசமில்லை. அநுபநீதனுக்கும் (உபநயநமாகாதவன்), ப்ரஹ்மசாரிக்குந் தீட்டில்லை. ஜநநாசௌசத்திற்கு அதிக்ராந்தாசௌசமில்லை (தீட்டு சில காலங்களுக்குப் பிறகு கேள்விப்பட்டால் மரணத்திற்போலின்றி அதிக நாள் காற்கவேண்டியதில்லை). பிதாவுக்கு மட்டும் ஸ்நாநமுண்டு. ஜநநத்தில் பிதாவுக்கு 2 நாழிகை சுத்தி. தூரத்திலிருந்தால் 1 நாள் சுத்தி.

## மரணுசௌசம் (இறப்புத் தீட்டு)

தசராத்ர ஜ்ஞாதிகள், பிறந்து 10 நாளைக்கு மேற்பட்ட புருஷப்ரஜைவிவாஹம்வரை ஸ்த்ரீப்ரஜை ம்ருதியில்மாதா, பிதா, பிந்நோதர ப்ராதா, ஸஹோதர ப்ராதாக்களுக்கும், 7 வயதான புத்ரன் உபநயநமானவனே, ஆகாதவனே, 7 வயதிற் குள்ளேயே உபநீத தசராத்ர ஜ்ஞாதிபுத்ரர் மரணத்தில் 10 நாள் தீட்டு.

மாதாமஹன், மாதாமஹீ, மாமன், மாமி, மாமனர், மாமியார், தாயின் ஸஹோதரிகள், அத்தை, உபநீத மருமான், உபநீத தௌஹித்ரன் (பெண்ணின் பிள்ளை), உபநீத ஸமாநோதகன், விவாஹமான புத்ரீ, ஸஹோதரி, ஜநக மாதா, ஜநக பிதா, தத்தனை புத்ரன் (ஸ்வீகாரம் போன பிள்ளை), 2 வருஷ மேற்பட்டு 6 வது முடிய அநுபநீத தசராத்ர ஜ்ஞாதி புத்ரன், 2 வருஷங்களுக்குட்பட்ட ஜ்ஞாதி புத்ரன், 7வது வது முதல் விவாஹம் வரையில் தசராத்ர ஜ்ஞாதிகளின் புத்ரீ, ஸமாநோதகர் (7 வயதிற் குட்ட உபநீத ஜ்ஞாதி புத்ரன், 7 வயது முதல் ஜ்ஞாதி பிள்ளை) இவர்கள் மரணத்தில் 3 நாள் தீட்டு,

ஸஹாத்யாயி (சேர்ந்தோதினவன்) அத்தான், அத்தங்கா (அத்தான் ஸஹோதரி), அம்மாஞ்சி, அம்மங்கா (அம்மாஞ்சி ஸஹோதரி), தாய் ஸஹோதரியின் பிள்ளை அல்லது பெண், ஸஹோதரியின் பெண், ஸோதரனுடைய கல்யாணமான பெண், பித்ருவ்யனுடைய பெண். பௌத்ரி (புத்ரனின் புத்ரீ), தௌஹித்ரீ (பெண்ணின் பெண்), 3 வயதான மருமான், தௌஹித்ரன் இவர்கள் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம். ஒரு பகலின் முன்பின் இரவு பாகங்கள், அல்லது இரவும் அதன் முன்பின் பகற் பாகங்களும் பக்ஷிணியாம்.

அத்யாபகன் (வேதமோ, வேதாங்கமோ சொல்லி வைத்தவர்)ஸகா,ஸபத்நீமாதாவின் ஸஹோதரன்,ஸஹோ

தரி, பெண், இம்மூவருடையபெண், பிள்ளை. ஸ்யாலன் (மைத்துனன்), பிந்நோதர சிற்றப்பன், பெரியப்பன், இவர்களுடைய பெண், பிந்நோதரப்ராதா பெண், பிந்நோதர அத்தை, அவளது பெண் பிள்ளை, ஸபத்நீமாதாவின் மாதா பிதா, 2 வயதிற்கு மேற்பட்டு 6 வயது வரை விவாஹமாகாத. ஜ்ஞாதி பெண், ஜநகப்ராதா, ஜநக ஸபிண்டகன், பத்நீ, அவள் ஸந்ததி இரண்டுமில்லாத விஷயத்தில் மாமனார், மாமியார், 6 மாதத்திற்கு மேல் 2 வருஷத்திற்குட்பட்ட ஜ்ஞாதி புத்ரன், க்ராமத்தில் யாராவது ச்ரோத்ரியன் இவர்கள் மரணத்தில் 1 நாளாசௌசம். ஜாமாதா (மாப்பிள்ளை) ஸஹோதரிபர்தா, சிஷ்யன், ம்ருதியில் ஸ்நாநமாத்ரத்தால் சுத்தி.

பதிக்குத் தீட்டுள்ளபோதெல்லாம் பத்நீக்கு முண்டு. அவளது இவனுக்கில்லை. அவளுக்கு மட்டும் ஏற்படக் கூடிய தீட்டுகள் பல :—

உபநீதப்ராதா, உபநீத மருமான், உபநீத ஸோதரி புத்ரன், ஸபத்நீமாதா இவர்கள் மரணத்தில் 3 நாள் ஆசௌசம். பித்ருவ்யன், தாயின் ஸஹோதரி, மாதுலன், அத்தை. இந்நால்வருடைய பிள்ளை, பெண், பிதாமஹன், பிதாமஹி, மாதாமஹன் மாதாமஹி, ஸஹோதரி, அவளது பெண், மருமாள், இவர்கள் மரணத்தில் ஸ்த்ரீகளுக்கு பக்ஷிண்யாசௌசம்.

ஸபத்நீமாதாவின் புத்ரன், புத்ரீ, பகினி, ஸஹோதரன், இந்நால்வரின் பெண், பிள்ளைகள், பிந்நோதர பித்ருவ்யன், பிந்நோதர அத்தை, இவ்விருவருடைய பெண், பிள்ளைகள், ஸபத்நீமாதாவின் மாதா பிதா இவர்கள் மரணத்தில் 1 நாளாசௌசம். இதிற்கூறின பிள்ளை பெண்கள் என்பது முறையே உபநயந விவாஹமானவர்களென்று கொள்க.

## தீட்டுச் சேர்க்கை

பிறப்புத் தீட்டில் பிறப்புத் தீட்டு :—3 நாள் தீட்டில் மற்றொரு 3 நாள் தீட்டுவந்தால் முன் தீட்டோடு போய்விடும். 10 நாள் தீட்டில் மற்றொரு 10 நாள் தீட்டு வந்தால் முன் தீட்டோடு போய்விடும். 3 நாள் தீட்டு மத்தியில் 10 நாள் தீட்டு வந்தாலும், 10-ல் 3 வந்தாலும் 10 நாள் முடிவில் தான் தீட்டுப் போகும். ஒரு தீட்டின் நடுவில் ஒரு சிசு பிறந்தால் அதன் மாதா பிதாக்களுக்கு மட்டில் ஜனித்தது முதல் 10-நாள் தீட்டுண்டு. 10-நாள் தீட்டு முடிவிரவில் இன்னொரு 10-நாள் தீட்டு வந்தால் பிறகு 2-நாளும், 10-ம் நாள் முடிவில் வந்தால் மறுபடி 3-நாளதிகத் தீட்டுமாம். 10-ம் நாள் தீட்டு மத்தியில் 3 நாள் தீட்டு எப்போது வந்தாலும் அதற்காக விசேஷமொன்றுமில்லை.

பிறப்புத் தீட்டு இறப்புத் தீட்டும் .—ஜநநாசௌசத்தைக் காட்டிலும் மரணாசௌசம் பலீயஸ். இறப்புத் தீட்டோடு பிறப்புத் தீட்டு போய்விடும். பிறப்புத் தீட்டோடிறப்புத் தீட்டுப் போகாது. தன் சிசு ஜநநாசௌசத்தில் ஜ்ஞாதி மரணாசௌச மேற்பட்டால் அது ஜநநாசௌசத்தோடு போய்விடும். ஜநநாசௌசத்தில் ஜநித்திறந்தால் மாதா பிதா, ப்ராதாக்களுக்கு பாக்கியுள்ள தினங்களே ஆசௌசம். பத்தாம் நாளானால் 2 நாளும், அன்று கடைசியாமமாயிருந்தால் 3 நாளும் அதிகத் தீட்டுண்டு. இது ப்ராதா ஜ்ஞாதிகளுக்கில்லை. ஜ்ஞாதி மரணாசௌசமத்தியில் சிசு ஜநித்தால் மாதா பிதாக்களுக்கு மட்டும் 10 நாள் தீட்டுண்டு. மாதா பிதாக்களின் மரணாசௌசமத்தியில் சிசு ஜநித்தால் மரணாசௌசத்தோடு தீட்டுப் போய்விடும். தாய்க்கு மட்டில் எப்பொழுதும்போல் 10-நாள் தீட்டுண்டு. பிறப்புத் தீட்டுள்ள ஜ்ஞாதிகளுக்கு 10-நாளுக்குள் சிசு மரித்தால் தனி மரணாசௌசமில்லை.

## இறப்புத் தீட்டி லிறப்புத் தீட்டு

10 நாள் தீட்டில் வேறொரு 10 நாள் தீட்டு வந்தால் முந்தியதோடு பிந்தியது போய்விடும். 3 நாள் தீட்டில் 10 நாள் வந்தாலும், பத்தில் 3 நாள் வந்தாலும் 10 நாள் முடிவில்தான் தீட்டுப் போகும். ஜ்ஞாத்யாசௌசத்தில் மாதா, பிதா, பத்நீ, பதி, புத்ரன், புத்ரீ மரணத்தில் மரணம் முதல் 10 நாளைக்குண்டு. 10 நாள் தீட்டு முடிவு ராத்ரி வேறொரு 10 நாள் தீட்டு வந்தால் 2 நாளும் தீட்டு முடிவில் வந்தால் 3 நாளுமதிக ஆசௌசமுண்டு. 10 நாள் தீட்டில் 3 நாள் தீட்டு எப்பொழுது வந்தாலும் அதற்காக அதிகாசௌசமில்லை. பிதா இறந்து 10 நாளைக்குள் மாதா இறந்தால் அதிகப்படியாய் பக்ஷிண்யாசௌசமுண்டு. மாதா மரணாசௌச தீட்டு மத்தியில் பிதா இறந்தால் பிதா இறந்தது முதல் 10 நாளைக்காசௌசமுண்டு. மாதா பிதாக்களின் 10 நாள் தீட்டில் பத்நீ, புத்ரன், புத்ரீ இறந்தால் முந்தியதோடு பிந்தியது போய்விடும். 10-ம் நாளானால் முன் சொற்படி 2 அல்லது 3 நாளதிக ஆசௌசமுண்டு. மாதா, பிதா, பதி, பத்நீ புத்ரன், புத்ரீ இவர்கள் மரணாசௌசத்தில் வேறு ஜ்ஞாதி மரண மேற்பட்டால் முந்தியதோடு பிந்திய தீட்டும் போய் விடும். 10 நாள் தீட்டில் ஒரு தஹநம் செய்ய நேர்ந்தால் மறுபடி 10 நாள் தீட்டுண்டு. ஓர் மரணத் தீட்டு மத்தியில் முந்தியதாய் ஓர் மரணமேற்பட்டதாய்க் கேட்டால் பிந்திக் கேட்ட தீட்டின் முடிவிலேயே தீட்டுப் போய்விடும்.

## அதிக்ராந்தாசௌசம்

10 நாள் தீட்டை 10 நாட்களுக்குப் பிறகு 3 மாதங்களுக்குள் கேட்டால் 3 நாள் தீட்டு, 6 மாதங்களுக்குள் கேட்டால் பக்ஷிண்யாசௌசம், வருஷத்திற்குள்ளானால் 1 நாள் தீட்டு, பிறகு கேட்டால் ஸ்நாநம் மாத்ரம். 3 நாள்

திட்டை 3 நாளைக்கு மேல் 10 நாளைக்குள் கேட்டால் 1 நாளாசௌசம். பிறகு கேட்டால் ஸ்நாநம் மாத்ரம். பக்ஷிணித் தீட்டை பக்ஷிணிக்கு மேல் 10 நாளைக்குள் கேட்டால் ஒரு காலம். அதாவது பகலிற் கேட்டால் அப்பகலோடும் இரவிலானல் இரவோடும் பிறகானல் ஸ்நாநம் மட்டும். அநுபந்த ஜ்ஞாதி புத்ர மரணத்தில் அதிக்ராந்தாசௌச மில்லை. ஒரு நாளாசௌசத்திற்கும் இடையாது. மாதா, பிதா, பர்தா மரணத்தில் ஜ்யேஷ்டனுக்கு எப்போது கேட்டாலும் 10 நாளாசௌச மூண்டு. ஸபத்நீ மாதாவின் மரணத்தை ஒரு வருஷம் சென்ற பின் கேட்டால் 3 நாளாசௌசம். ஸஹகளத்ரங்களுக்கும் 3 நாள் ஆசௌசம். ஒரு வருஷத்திற்குள் கேட்டால் 10 நாளாசௌசம். மாதா பிதாக்களுக்கு ஜ்யேஷ்டனல் க்ருத்யமாயிருந்து வருஷத்திற்கு மேல் இதர புத்ரர் கேட்டால் 3 நாளாசௌசம். ஜ்யேஷ்டன் எப்பொழுது கேட்டாலும் அது முதல் 10 நாள் தீட்டுக்காத்து ஸபிண்டீகரணம் முதலான யாவற்றையும் செய்ய வேண்டியது.

ப்ராதாவின் மரணத்தில் க்ருத்யம் செய்யப்பட்டிருந்தால் 6 மாதத்திற்குள் கேட்டால் 3 நாளாசௌசம். பிறகு கேட்டால் பக்ஷிண்யாசௌசம். க்ருத்ய மாகாதிருந்தால் அது செய்யவேண்டிய ஸஹோதரனுக்கு எப்போதும் 10 நாள் தீட்டு. மற்ற ஸஹோதரர்களுக்கு 6 மாதத்திற்குள் 10 நாளும் வருஷத்திற்குள் 3 நாள் தீட்டு.

10 நாள் தீட்டை 10-ம் நாளிரவிலும் 3 நாள் தீட்டை 3-ம் நாளிரவிலுங் கேட்டால் உதகதாநத்திற்காக மறு நாளுந் தீட்டுண்டு.

அதிக்ராந்தாசௌச முள்ளவனின் த்ரவ்யாதிகளுக்குத் தீட்டில்லை. அதிக்ராந்தாசௌசத்திற்கு வாஸோதக மில்லை. அதிக்ராந்தாசௌசமும் ஜநநமரணசௌசஞ்

களும் சேர்ந்தால் முந்தியது ஸஹஜமான தீட்டிற்குள்ளதையே அநுஷ்டிக்கப்பட்டால் போதுமானது.

அநுபநீதன், ப்ருஹ்மசாரிகளுக்கு ஸம்ஸ்காராதிகளால் தாத்காலிக ஆசௌசத்தைத் தவிர ஸதா இல்லை.

தீட்டுத் தெரிந்தபின் புஜித்தால் அன்று தீட்டுக் கார்க்கவேண்டும். தீட்டுப்போகுந் திநத்தில் ஸங்கவ காலம் (உதித்து 6 நாழிகைக்குமேல்) வந்த பிறகுதான் ஸ்நாநஞ் செய்யவேண்டும். பிணத்தின் பின் போனால் ஸ்நாந முண்டு. யதிகள் தங்கள் புத்ர, புத்ரீ மரணத்திற்கு ஸ்நாநஞ் செய்யக்கூடாது. மாதா பிதாக்கள் மரணமானால் உடனே ஸசேலஸ்நாநஞ் செய்யவேண்டியது. க்ராமத்தில் சவமிருந்தால் ஹோமம், பாகம் (சமையல்), போஜநங்கள் கூடாது. 88 அடி தூரத்திற்கப்புறமுள்ள இதர வீதியிலிவைகளைச் செய்யலாம். இந் நிர்பந்தம் யதியின் ப்ரேதத்திற்கில்லை. சூத்ர பிணத்திற்குமிதில்லை. 400 ப்ராஹ்மணருள்ள ஊரில் 88 அடி தூரம் பார்க்க வேண்டியதில்லை. நடுவில் ஓர் நாராச விச்சித்தியே (பிளவு) போதுமானது. ஸஹஸ்ரப்ராஹ்மணரூரில் ஒரே வீதியாய் விச்சித்தியின்றிருந்தாலும் 240 அடிக்கு மேற்பட்டால் தோஷமில்லை. நகரத்திற்கு அந்த: சவதோஷமேயில்லை. விசேஷவ்யாதிக்ரஸ்தன் ஆசௌச திநத்தில் ஸ்நாநஞ்செய்ய முடியாவிட்டால் அவனுக்காக இன்னொருவன் 10 தடவை ஸ்நாநமும் ஆசமநஞ் செய்ய வேண்டியது. மத்யே மத்யே ஆசௌசியை ஸ்பர்சிக்க வேண்டியது. அவ்வப்பொழுதெல்லாம் ஆசௌசி வெவ்வேறு சுத்த வஸ்த்ரந் தரிக்கவேண்டியது. ஆசௌசிக்கு வபன நிர்பந்தமும் பாதகமில்லை. பிறகு புண்யாஹ வாசகத்தால் சுத்தனாகிறான்.

தூரஸ்த்திரீ ஸ்நாந திநத்தில் ரோகத்தால் ஸ்நாநஞ் செய்ய முடியாதிருந்தால் இன்னொருத்தியைக்கொண்டு

12 தடவை ஸ்நாநஞ் செய்விக்க வேண்டியது. ஒவ்வொரு தடவைக்கும் ரஜஸ்வலை வேறு சுத்த வஸ்த்ரம் தரிக்க வேண்டியது. பிறகு யதாசக்தி தாநத்தினாலும், புண்யாஹவாசநத்தினாலும் சுத்தையாகிவிடுகிருள்.

கர்தா ச்ராத்தாரம்பத்தில் ஸங்கல்பம் செய்து கொண்ட பிறகு தீட்டு நேர்ந்தால் ச்ராத்த ஸமாப்திவரை தீட்டில்லை. பவதாக்ஷண: கர்தவ்ய: என்ற பிறகு போக்தாவுக்கு ஆசௌசம் நேர்ந்தால் விஸர்ஜநம்வரை தீட்டில்லை.

விவாஹத்தில் சேஷஹோமம் முடிவுவரை தீட்டில்லை. மத்தியில் மாதா பிதாக்களின் ம்ருதி நேர்ந்தால் அதைச் செய்துவிட்டு சேஷஹோமஞ் செய்யவேண்டியது. தம்பதிகளுக்குள் மரணம் ஏற்பட்டால் சேஷ ஹோமம் வரையில் கர்ம சேஷத்தைச் செய்து முடித்துப் பிறகு தஹநஞ் செய்யவேண்டியது.

யதிம்ருதி (மரணம்) யில் ஜ்ஞாதிகளுக்குத் தீட்டில்லை. ஸ்நாநம் மாத்ரம். ஜாமாதா (மாப்பிள்ளை) இறந்தால் மாமனார், மாமியார், மைத்துனன் இவர்களுக்குத் தீட்டில்லை. ஸ்நாநம் மாத்ரம். தற்கொலை செய்து கொள்ளுபவன் விஷயத்தில் தஹநம், தீட்டு முதலியன கிடையாது. இவனுக்கு ஜாதிப்ரஷ்டன், வ்யபிசாரிகளுக்குப் போல் அமந்த்ரக தஹநஞ் செய்து 6 மாதங்கழித்து நாராயண பலி செய்துவிட்டு 3 நாள் தீட்டுக் காத்து கர்மங்கள் செய்யவேண்டியது. ஜ்ஞாதிகளுக்குள் தீட்டில்லை. ஸ்நாநம் மட்டும். நாராயண பலிக்குப் பிறகு 3 நாள் தீட்டிருந்து 2-ம் நாள் ஸஞ்சயநம், 3-ம் நாள் உதகதாநம், 4-ம் நாள் ச்ராத்தஞ் செய்யவேண்டியது.

ஸமாநோதகர்களுக்கு உபநயநத்திற்கு முன் மரணத்திற்குத் தீட்டில்லை. ஸ்நாநம் மாத்ரம். விவாஹமான பெண்கள் மரண விஷயத்தில் ஜ்ஞாதிகளுக்குத் தீட்டில்லை.

ஜநநாசௌசமுள்ளவனுக்கு கர்மாக்களில் அர்ஹதை யில்லையே தவிர முதல் 4 நாள் தவிர பிறகு அவனைத் தொட்டால் பாதகமில்லை. மரணாசௌசத்தில் ஸ்நாந முண்டு. புத்தி பூர்வகமாய் ஸ்பர்சித்தால் ப்ராயச்சித்தமு முண்டு. ஆசௌசி இன்னொரு ஆசௌசியை (தீட்டுள்ள வனை) த்தொடக்கூடாது. ஆசௌசியின் க்ருஹம், ஸாமக்ரீக்களுக்கும் (ஸாமான்) தீட்டுண்டு. இதர க்ரஹத் தில் ஜநந மரண மேற்பட்டால் தீட்டில்லை. ப்ரேத க்ருத்யம் நடந்தால் வீட்டிற்குத் தீட்டுண்டு. க்ருதயஞ் செய்யாத ப்ருஹ்மசாரி உதக தானஞ் செய்யக்கூடாது.

விவாஹ தீக்ஷை மத்தியில் மரணாசௌசங் கேட்டால் தீக்ஷை முடிந்தபின் பாக்கி நாள் தீட்டுண்டு. தீக்ஷை முடிவிற்குள் ஆசௌச காலம் நீங்கிவிட்டால் பிறகு அதிக்ராந்தாசௌசமுண்டு. அநுபநீதன் ம்ருதியில் மாதா, பிதா, ப்ராதாக்களுக்குத் தவிர இதர ஜ்ஞாதி களுக்கு அதிக்ராந்தாசௌசங் கிடையாது.

கர்ப்ப தீக்ஷையுள்ளவன் ப்ரதிக்ரஹஞ் (தானம் வாங்கல்) செய்யக்கூடாது. தூர யாத்ரையுஞ் செய்யக் கூடாது. சவத்தின் பின் போகக்கூடாது.

ஜ்ஞாதியல்லாதவன் ச்மசாநம் போனல் ஸ்நாநஞ் செய்து உலர்ந்த வஸ்த்ரந் தரித்து அக்நியை ஸ்பர்சித்து ஆஜ்யத்தை யுட்கொண்டு, புநஸ்நாநஞ் செய்து 3 ப்ராணா யாமஞ் செய்யவேண்டியது. ருத்ரபூமிக்குப் போனவன் ஸ்நாநமின்றி ஊருக்குள் போகக்கூடாது. க்ரியை ஆரம் பித்துவிட்டால் தஹநாநந்தரமே ஸ்நாநம். துக்க ப்ரச்ந நிநத்தில் தானம், ச்ராத்தங்கள், ஜபஹோமாதிகள் செய்யக் கூடாது. சூத்ர சவாநுகமநஞ் செய்தால் 3 நாளாசௌசம். ஆசௌசத்திற்குப் பிறகு நதீ ஸ்நாநஞ் செய்து, 1008 காய த்ரீ ஜபமுஞ் செய்ய வேண்டும்.

ஜ்ஞாதியல்லாத ஓர் சவத்தை பகலிற் சுமந்தால் பகலிலும், இரவிலானு லிரவிலும், முழுதும் ஊருக்கு வெளியிலுபவாஸமிருந்து பிறகு ஸ்நாநஞ் செய்து பஞ்சகவ்ய ப்ராசநஞ் செய்து புண்யாஹவாசநஞ் செய்து கொள்ள வேண்டும். பழய சவம், தூரஸ்த்ரீ, ப்ரஸவித்தவள், கர்ப்பிணீ சவத்தை ஜ்ஞாதியல்லாதவன் சுமந்தால் பஞ்சகவ்ய ப்ராசநஞ் செய்து, பசுவிற்குப் புல் வாங்கிப் போட்டு, சக்தியாநுஸாரம் காயத்ரீஜபஞ் செய்து, அக்நியை ஸ்பர்சித்து, ஆஜ்யத்தை புஜித்து, புண்யாஹ வாசநமுஞ் செய்துகொள்ள வேண்டியது. பூணூலையுங் கழிக்க வேண்டும். பார்யை கர்ப்பிணியா யிருந்தால் பிதா, புத்ரனில்லாத ஜ்யேஷ்டன், புத்ரனில்லாத அம்மான் ப்ரேதங்களைச் சுமக்கலாம். ப்ருஹ்மசாரி மாதா பிதாக்களது தவிர இதர ப்ரேதங்களைச் சுமக்கக்கூடாது.

அப்யங்கம், வமநம் (வாந்தி), க்ஷௌரம். ஸ்த்ரீ ஸம்போகம், ஜலமல விஸர்ஜநங்களுக்குப் பிறகு ஆசமநஞ் செய்யாதவனுக்கு 3 நாள் சுத்தியில்லை. தீட்டோடு ஆலய ப்ரவேசங் கூடாது. இதரரை நமஸ்கரிக்கவுங் கூடாது. தீட்டில்லாதவரும் ஆசௌசியை வணங்கலாகாது.

ஜநந, மரணாசௌசங்களில் ஏகாதசி, த்வாதசி வ்ரதமுண்டு. சாவுத் தீட்டுக்காரர் ப்ரதிதிநமும் ஸ்நாநஞ் செய்யவேண்டும். பூமியிலேயே படுக்கவேண்டும். தீட்டுப் போன பிறகு ஜலத்தை ஸ்பர்சிக்க வேண்டியது. கநநமான (புதைத்தல்) சிசுக்களின் தீட்டு விஷயம் மரணத்திலின்றி கநநம் முதலே கணக்காகும்.

---

3 நெல் நீளம் 1 அங்குலம். 12 அங்குலம் 1 விதஸ்தி. 2 விதஸ்தி 1 அரத்நி. 2 அரத்நி 1 கிஷ்கு. 2. கிஷ்கு 1 தநுஸ். 20000 தநுஸ் 1 க்ரோசம். 4 க்ரோசம் 1 யோஜனை அதாவது சுமார் 12 மைல்.

---

ஆசௌசதசக மென்று வேங்கடாசார்யரே தாழப்ப ரென்பவர் ஸ்ம்ருதிகளை ப்ரமாணமாய் வைத்துக்கொண்டு எழுதியிருப்பது இதற்காதாரமாயிருக்கிறது.

ஜ்ஞாதிகள் என்பது ஸபிண்டர்கள், அதாவது 10 நாள் தாயாதிகள் என்றும் ஸமாநோதகர்கள் அதாவது 3 நாள் தாயாதிகளென இருவகைகளாம். பிதா, பிதாமஹன், ப்ரபிதாமஹன், புத்ரன், பௌத்ரன், ப்ரபௌத்ரன் (பேரனின் பிள்ளை) இவனுள்பட 7 தலைமுறை என்பதாம். தகப்பன், பிள்ளைகளும், அண்ணன் தம்பிகளும் தாயாதிகளே. 8-வது தலைமுறைமுதல் 14 தலைமுறையிலுள்ளவர்களே ஸமாநோதகர்களாவர்.

விவாஹமான பெண்கள் மரண விஷயத்தில் ஜ்ஞாதிகளுக்குத் தீட்டில்லை. இரட்டையாகப் பிறந்தால் தகப்பனை 10 நாள் வரையில் தொடக்கூடாது. ப்ருஹ்மசாரிகள் க்ருத்யஞ் செய்தாலொழிய உதகதாநம் (தர்பணம்) செய்யக்கூடாது. தீக்ஷையின் முடிவிற்குள் ஆசௌசகாலம் நீங்கிவிட்டால் பிறகு அதிக்ராந்தாசௌசமுண்டு.

துக்கப்ரச்நத்தில் ஸஞ்சயநத்திற்கு முன்னால் ஸ்நாநமும் பின்னால் ஆசமநமுமே போதும். ச்ராத்தத்தன்று துக்கங் கேட்கக்கூடாது. அப்ராம்ஹணனை துக்கங் கேட்டால் ஸஞ்சயநத்திற்கு முன்னால் 3 நாளும், பின்னால் 1 நாளும் ஆசௌசமுண்டு.

அபந்துப்ராம்ஹண சவத்தை வஹித்தால் ஸ்நாநஞ் செய்து அக்நிஸ்பர்சம், ப்ராணாயாமங்களைச்செய்து வேப்பிலையைத் தின்றுமிழ்ந்தால் சுத்தனாகிறான்.

யோநிசம்பந்தமுள்ளவர்கள்—பிதாமஹன், பிதாமஹீ, அவன் ப்ராதா, மாதாமஹன், மாதாமஹீ அவன் ப்ராதா, அம்மான், அவன் பிள்ளை முதலியோர், சிறிய தாயார், பெரிய தாயார், அவர்கள் பிள்ளை முதலியோர். அத்தை அவள் பிள்ளை முதலியோர், ஸஹோதரி, அவள் பிள்ளை முதலியோர்.

ஜநகமாதா — தன்னைப் பெற்று பிறருக்கு ஸ்வீகாரங் கொடுத்தவள். ஸ்வீகாரமாதா — ஸ்வீகாரஞ் செய்து கொண்டவள். ஸபத்நீ மாதா — தன் பிதாவின் தன் மாதாவைத் தவிர்த்து இதர பத்நிக்கள (மாற்றாந்தாய்) பிந்நோதரப்ராதா — இருவருக்கு மொரேபிதா, மாதாக்கள் வேறு. ஜநக ஸஹோதரன் — ஸ்வீகாரத்திற்கு முன்பு தன் கூடப்பிறந்தவன்.

ஜநநத்தாலோ மரணத்தாலோ தீட்டுப்ராப்தமாயிருக்க அதை அச்ரத்தையினுல் கேட்டுத்தெரிந்து கொள்ளதிருக்கக்கூடாது. தெரிந்தோ, தெரியாமலோ செய்யப்படும். ஸமஸ்த வைதிகக்ரியைகளும் தோஷமாகி பாபத்திற்காளாகிருன். வைதிகத்திற்கு ஹாநியுண்டாய் விடுமென்று ஜநநமரணுசௌசங்களைக்கேளாது உதாஸீநமாயிருந்துவிடக்கூடாது. விதிவத்தாய் தீட்டுகளைக் கார்த்து தீட்டுப்போகுந்திநத்தில் பூணூல் கழித்து நித்ய கர்மாக்களை யநுஷ்டிக்கவேண்டும்.

ஒரு ஸூத்ரகாரனுக்கு கர்தாவேறு ஸூத்ரகாரனுயிருந்து ஸம்ஸ்காரங்களைச் செய்கிற விஷயத்தில் ம்ருதனுடைய ஸூத்ரத்தால் ப்ரதமாப்திகம்வரையிற் செய்து ஆப்திகம்முதல் கர்தா தன் ஸூத்ரத்தாற் செய்யவேண்டியது. ம்ருதனுடைய ஸூத்ரம் கிடைக்காவிடில் அந்யஸூத்ரத்தாற்செய்யலாம். அம்மாதிரி தஹநமாயிருந்தால்ஏகோத்திஷ்டம்வரை ஸ்வஸூத்திரம்கிடைத்தாலும் செய்துவிட்டு ஸபிண்டீகரணத்தை எப்படியாலும் ம்ருதனுடைய ஸூத்ரத்தாலேயே செய்யவேண்டியது. யஜுர்வேதிகளுக்கு போதாயந ஸூத்ரமும் ஸ்வஸூத்ர துல்யமாதலால் நடுவில் ஸ்வஸூத்ரம் கிடைத்தாலும் அதைக்கொண்டு மேல்க்ரியைகள் செய்யலாம். அந்யனுல் தஹநமானபின் பிள்ளை 10 நாட்களுக்குள் வந்தால் புநர்தஹநம், வபநம் முதலான யாவற்றையும் செய்யவேண்டும். 10 நாளோடு

தீட்டுப் போய்விடும். ஸஞ்சயநாநந்தரம் 10 நாட்களுக்குள் 10-வது நாளோ வந்தால் பிண்டோதக முதலான யாவற்றும் பாக்கி நாளில் செய்யவேண்டியது. 11-வது நாளில் ஆத்யம் செய்து கேட்டதுமுதல் 10 நாள் தீட்டுக்கார்த்து பிறகு ஆவ்ருத்தாத்யம் செய்து த்ரிபக்ஷாதிகாலத்தில் ஸபிண்டிகாரணத்தைச் செய்யவேண்டியது. கநிஷ்டனால் தஹநமாய் 10 நாட்களுக்குள் ஜ்யேஷ்டன் வந்தால் வபநஸஞ்சயநங்களைச் செய்து கடந்த பிண்டோதகங்களை ஒரே தடவையிற் செய்து பாக்கி நவச்ராத்தாதிகளை அந்தந்த காலத்திற் செய்து 11வது நாளில் ஆத்யத்தையும் ஆவ்ருத்தாத்யத்தையும் செய்து 12-ல் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது. ஸஞ்சயநாநந்தரம் 10 நாட்களுக்குள் வந்தால் கேட்டது முதல் 10 நாள் தீட்டுண்டு. அந்யனால் ஸபிண்டீகரணமும் ஆகி, ஜ்யேஷ்டன் வந்தால் வபநஞ் செய்து கொண்டு 10 நாள் உதகதாநஞ்செய்து 11-வது நாளில் புநஸ்ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது. ஜ்யேஷ்டன் வராமல் கநிஷ்டன் வந்து அந்யனால் செய்யப்பட்டதில் முன் மாதிரி செய்து பார்வணமாக ஸபிண்டீகரணத்தைச்செய்ய வேண்டியது. ஔரஸனே ஜ்யேஷ்டன், கர்மாதிகாரி. ஸபத்நீபுத்ரன் வயதிற் பெரியவனாயிருந்தாலும் கனிஷ்டனேயாவன். 3 ப்ராஜாபத்யக்ருச்ரம் ஒரு தப்தக்ருச்ரம். சாந்த்ராயணமும் அதுபோலவே. மாதாபிதாக்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு வெள்ளிக்கிழமையில் ஸஞ்சயநங்கூடாது.

மாதாபிதாக்களுக்கு 12ம் நாள் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டியது. இதரர்களுக்கானால் 12ம் நாளின்றி நாள் பார்த்துச் செய்யவேண்டியது. 12ம் நாள் முதல் 17 வரை மாதாபிதாக்கள் விஷயத்தில் நாள் பார்க்க வேண்டியதில்லை. பின்பானால் நாள் பார்த்துத்தான் செய்யவேண்டும். 12 வயது முடியாதப்ருஹ்மசாரிக்கு ஸபிண்டகாணமில்லை. நாராயணபலி மட்டுந்தான. ஆபதிக ப்ரத்யாப்திகங்கள் கிடையாது. அநுபநீதன், அநூடா இவர்களுக்கு 12 வயதிற்குமேல் ஸபிண்டீகரணாதிகளுண்டு. விவாஹமானவர்களுக்கு எவ்வளவு வயதாயிருந்தாலும் ஸபிண்டீகரணாதிகளுண்டு.

---

சிவாஜி அச்சுக்கூடம், திருச்சி. 20-3-1953

## எங்களிடம் கிடைக்கும் சில முக்கிய நூற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸம்ஸ்க்ருத — தமிழ் அகராதி<br>அ முதல் த வரை பள்ளி மாணவர் முதல் பாராளும் பெரியோர் வரைக்கும் இன்றியமையாதது | 10 | 00 |
| 2. | கிரந்த — தமிழ் அகராதி<br>பல உதாரண வாக்கியங்களுடன் | 5 | 00 |
| 3. | அமர ஸங்க்ரஹம்<br>தாது அர்த்தங்களைக் காட்டி | 3 | 00 |
| 4. | ஸ்ரீமத் பாகவத ஸங்க்ரஹம்<br>ப்ரதி அத்தியாயக் கதைகளும் தத்துவங்களும் விடாமல் | 3 | 50 |
| 5. | வர்ணாச்ரம — ஆசௌச காண்ட ஸங்க்ரஹம்<br>வைத்யநாத தீக்ஷிதீயத்தை அனுசரித்தது. | 1 | 00 |
| 6. | ஸ்ரீமத் ராமாயண ஸங்க்ரஹம்<br>உத்தரகாண்டம் உள்பட | 1 | 00 |
| 7. | ஸ்த்ரீ தர்மங்களும், பதிவிரதைகளின் சரித்திரங்களும்<br>அஹல்யை, த்ரௌபதி, சீதா முதலியவர்களின் | 0 | 50 |
| 8. | ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரார்த்தம், சிராத்த விதிகளுடன் | 1 | 00 |
| 9. | மந்த்ரப்ரச்ன ஸம்பூர்ண பாஷ்யம்<br>கர்ப்பாதான, பும்ஸவந, ஸீமந்த, ஜாதகர்ம, நாமகரண, சௌல, உபநயந, விவாஹம் வரை இதர மந்த்ரார்த்தங்களும் | 1 | 00. |
| 10. | இராமாயணம் சிறுவர்களுக்கு | 0 | 25 |
| 11. | மஹாபாரதம் இளைஞர்களுக்கு | 0 | 25 |
| 12. | பக்தர்களின் சரித்திரங்கள்<br>ஸ்ரீ சங்கர, இராமானுச, மத்வ, தேசிகர்களுடையது | 0 | 25 |
| 13. | சிராத்த காண்ட சங்க்ரஹம் ச்லோகார்த்தம் | 0 | 50 |
| 14. | ஸ்ரீ கிருஷ்ண பகவானின் உபதேசங்களும், த்யானக்ரமமும் | 0 | 25 |
| 15. | Teachings of Bhagavan Sri Krishna & Method of Meditation | 0 | 50 |
| 16. | ஸ்ரீ மஹாபாரதம்<br>வியாச பாரதத்திற்குச் சரியான ம. வீ. இராமானுசாச்சாரியாரின் மொழி பெயர்ப்பு | 81 | 00 |
| 17. | ஸ்ரீமத் பாகவதம்<br>இஞ்சிக்கொல்லை ஸ்ரீ வராமகிருஷ்ண சாஸ்திரியின் மொழி பெயர்ப்பு | 26 | 00 |
| 18. | ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம் ப்ரதி பதார்த்தம் | 15 | 00 |

மற்றும் அநேக ஸ்தோத்திரங்களும், பிறர் நூற்களும் கிடைக்கும்.